The "BALA BHARATI," Sheramadevi. Vol. 11. No. 6.

தபால் எண்—ம. ௧௬௨௦

வருஷச் சந்தா { உள்நாடு ரூ. ௫—௦ / வெளிநாடு ரூ. ௬—௦




| | | |
|---|---|---|
| புத்தகம் ௨. | புரட்டாசி, கலியப்தம் ௫௦௨௭. September, 1925. | பகுதி ௬. |

ஆசிரியர்: சுத்தானந்த பாரதி

பரத்துவாஜ ஆசிரமம், சேரமாதேவி.

## "பால பாரதி"—அட்டவணை

புரட்டாசி—௫௦௨௭.

—(○)—


| | | |
|---|---|---|
| விஜய விளக்கு (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) | | ௱௨௧ |
| கீதை காட்டும் பாதை* | ... ... | ௱௨௩ |
| யோக சாதனம் (திரு. அரவிந்தர் எழுதியதை க. அமுதன் மொழிபெயர்த்தது) | ... | ௱௩௨ |
| மஹரிஷி வ.வெ.ஸுப்பிரமணியம். (திரு. பா. ஆதிமூர்த்தி) | ... | ௱௩௭ |
| நோயற்ற வாழ்வு (திரு. லக்ஷ்மணசர்மா) | ... | ௱௪0 |
| பைந்தமிழ்ச் சொல் (ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்) | ... | ௱௪௩ |
| எதிர்காலக் கண்ணாடி சுதர்சன (திரு. சுத்தானந்த பாரதியார்) | | ௱௪௭ |
| ஸம்ராட் அசோகன் (ஸ்ரீ மகேசகுமார சர்மா) | ... | ௱௪௯ |
| கபிலர் (திரு. சா. முத்தப்பர்) | ... | ௱௫௩ |
| குடிஅரசும் இந்தியாவும் (திரு ச. செல்லம்) | ... | ௱௬௫ |
| மஹரிஷி வ. வெ. சுப்பிரமணியம் (திரு. பா. ஆதிமூர்த்தி) | | ௱௭௨ |
| நமது சிற்பச் செல்வம் | ... | ௱௭௪ |
| வாஸ்து சாஸ்திரம் (திரு. பி. வி. ஜகதீசய்யர்) | ... ... | ௱௭௮ |
| அசுவாரூட நரபதி | ... | ௱௮௧ |



**THE KURAL**

Translated by

**Acharya V.V. Subrahmanya Aiyar.**

Second Edition: Rs 5. By V.P.P. Rs 5-8.

**for copies apply to:**

THE BALA BHARATI BOOK-SHOP,
SHERAMADEVI, (Tinnevelly Dt.).

ஓம்


# பாலபாரதி

ஆசிரியர்: சுத்தானந்த பாரதி

| புத்தகம் ௨. | புரட்டாசி, கலியப்தம் ௫௦௨௭. | பகுதி ௬. |
|---|---|---|


## விவிலிய விளக்கு

உலகின் உயிர்காள்! உயர்பொருள் உள்ளே
இலகுங் கோயில்காள்! ஈசன் மைந்தர்காள்!
எங்கணும் பரவும் இறைவன் அரசே
உங்களுக் கெய்துக! ஓங்குக இன்பம்!
என்றும் ஆன்மா இலகிடும் உண்மை.
பொன்னும் போகமும் பொய்யுட லின்பம்.
பேரின் பத்தையே பெற்றிட முயல்வீர்.
பாரில் உடையுண் படைத்தவன் ஈவான்.
இருளை விலக்கித் தெருள்வழி சேர்மின்!
அருளும் அன்பும் அமைதியும் எய்துமின்!
திருத்தி யும்மைப் பொறுத்தே பிறரைக்
கருத்தை யுயர்த்திக் கவின்பெற வாழுமின்!
நம்பி யெவர்க்[illegible]ம் நயந்தே யுதவுமின்!
வம்பும் போரும்[illegible] வழக்குந் தவிர்மின்.
மற்றவர் தப்பை[illegible]த்தே யன்பாய்
உற்றவர் போல[illegible]லகிற் பழகுமின்!
பெருமை பெப்ப[illegible]டப் பேண விருப்பத்
திறப்பி ரி[illegible]செம்மையா யிருமின்!
உறுதியும் அன்பும் உயர்ந்த பரிவும்
இறைவன் இன்புடன் ஏற்கும் பரிசில்.
ஐந்தை யடக்கி யகத்தை விலக்கிச்
சிந்தையுஞ் செயலொடு செவ்விய தாகித்
தன்னயந் தவிர்த்தே யின்னலை விடுத்து
மன்னிக் கன்பொடு மாண்புடன் வாழுமின்!

162246

மலைக்குடில் போலும் வயல்விதை போலும்
நிலைக்கும் உறுதியில் நின்றே தழைமின்!
அன்புளோன் முத்திற் கவைத்து மீவான்
விண்பெற வெல்லாம் விருப்புளோன் விடுவன்.
ஓதிச் சுருக்கமாய் 'உண்டிலை' என்றே
யாதின் மீதுமே ஆணையிட் டுரையேல்.
நாரியர் முயக்கை நவிப்பீர் மனத்தும்.
பூரியர் உறவைப் பொய்யென நீக்குமின்.
பகைவருக் கன்பே பரிந்து காட்டுமின்!
மிகவுமைத் திருடின் மிகமிகத் தருமின்!
நண்பருக் கேயோர் நலஞ்செயல் வாலிபம்
துன்ப முழல்வோர் துணையே யாகுமின்!
வலதுகை யீதல் இடதறி யாது,
உளத்தில் தூயராய் ஊங்கறஞ் செய்மின்!
மறைவில் உதவினும் மாண்பே புலனும்
இரவிலுஞ் சர்க்கரை ஈயும் இனிப்பே.
வாழிய சாந்தர் வையகம் புரப்பார்!
வாழி முயல்வோர் வான்பயு னெய்துவர்!
இரங்குவோர் வாழி இரக்கம் எய்துவர்!
வருந்திடுஞ் செய்யவர் வான்பெற் றிலகுவர்!
வாழியுள் தூயர் வாதனைக் காண்பார்!
வாழிசா துக்கள் கடவுள் மைந்தர்
மனிதரின் கோளும் வசையும் அஞ்சேல்!
மனதழுக் குற்றுமை மற்றோர் ஏசுழி
களிமின்! பொறுமின்! காட்சியாம் விண்ணில்
ஒளிபெறும் பரிசே யுமக்கே யுள[illegible]தே!
அன்புடன் றந்தையென் றையன்[illegible]னையேத்தி,
"உன்மயம் உலகெலாம்! உன்க[illegible]ருத் தாகுக!
எம் ஊண் அளிக்கும் இறைவ[illegible]னே! பகைவர்
தம்மை மன் னிப்பபோல் எ[illegible]மை மன்[illegible]ப்பாய்:
பிறர்க்கு யாம் காட்டும் பீடு[illegible]
எமக்குநீ காட்டவே இச்சை வகிப்பாய்!
ஆசையும் நோயும் அணுகா துளத்தில்
தேசுற வுன்றுணை திடமன மீவாய்.
தேவனே! தூயனே! எங்குந் திகழ்வோய்!
ஆவதும் அழிவதும் அல்வதும் உன்னால்!

உன்னதே யுலகு! உயர்படைப் பாட்சியும்
உன்ன தாற்றலில் நூர்சிறி தாமே!
என்றுமுன் சக்தி வாழிய!'' என்றே
நன்றி செலுத்தி நல்முடனுப்பமின்!

# கீதை காட்டும் பாதை

(திரு சுத்தானந்தபாரதியார் எழுதுவது)

முன்மாதச்சொல்லடுக்கில் எல்லாம் அவன் மயமாகக் கண்டு அவனை வழிபட்டடையும்வகையை விரித்தோம். அத்தகைய கடவுள் ஒளிரும் இந்த உடலின் தன்மையையும், நமது உள் மனிதன் பெருமையையும், முக்குணங்களையும் அவன் கடந்தொளிரும் பான்மையையும், அவனை அறியும் வகையையும், அறிந்தவரின் தெய்வத்தன்மையையும், அறியாதவரின் அரக்கத்தன்மையையும், அவனை அறிவதற்கான சிரத்தையையும் முடிவில் அனைத்தையும் அறிந்து விடுதலையடையும் விதத்தையும் இக் கட்டுரையில் கூறி முடிப்போம்.

நாம் உடல் மட்டும் அல்ல. நாம் அறிவுமட்டுமல்ல. அறிவுக்குள் அறிவாயுள்ள ஆண்டவனும் நம்முடன் சேர்ந்துள்ளான். இவ்வுடலும், (க்ஷேத்ரம்) அதற்குள்ளிருக்கும் அறிவோன் (க்ஷேத்ரக்ஞன்) ஆக இரண்டிற்கும் உள்ள தன்மைகளைக் கண்ணனிடம் விஜயன் கேட்கிறான். ஏனெனில் உடலை மறந்து தன்னயம் விடுத்துக் கடவுள் மயமாவதற்கு, நம்முள் அறிவிற்கு ஒளியீயும் பொருள் எத்தகையது என்பதை யறிய வேண்டும். தன் தெய்வவொளியை மறைத்துக் கொண்டிருக்கும் வினைவேலியைத் தாண்டி, உட்செல்ல நம்மை உள்ளிருந்து ஒரு ஒளி தூண்ட வேண்டும். வேலிக்குள் இருக்குந் தோட்டம் இனிய கனிகளை யுடைத்து என்று அறிபவன் உள்ளே சென்று இன்பந் துய்ப்பான். அதை யறியாதவன் வெளியுலகில், வினையுலகிலேயே,உழலுவான். ஆதலின் கண்ணன், வினைப்போரின் வெற்றி தோல்விகளுக்குக் களமாயிருக்கும் இவ்வுடலையும் அதனுள்ளிருக்கும் உடலோனையும் விளக்குகிறான். இவ்விரண்டின் அறிவே அறிவெனக் கூறுகிறான்.

"எல்லா க்ஷேத்திரங்களுக்குள்ளும் க்ஷேத்ரக்ஞனுயுள்ளவன் யானே. க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ அறிவே அறிவுள் உயர்வு. மஹா பூதங்களும் அஹங்காரமும், புத்தியும், மூலப்ரகிருதியும், கர்மேந்திரியங்களும், ஞானேந்திரியங்களும்,மனதும், ஐந்து தன் மாத்திரைகளும், விருப்பு, வெறுப்பு, இன்பம் துன்பம், யாக்கை அறிவு, மன உறுதி, முதலியவற்றின் வேறுபாடே உடல் அல்லது க்ஷேத்ரம். இனி, "அறிவெனப் படுவது யாதெனவினவின், பணிவு! பொறுமை பகட்டறு நேர்மை, அஹிம்ஸை,தூய்மை, ஆசாற் பணிவும், தன்னடக்கம் புலப் பொருள்களைத் தவிர்த்தல், செருக்கு விடுத்தல், சென்மமும்

சாவும், நோயும், மூப்பும் நோவென் அறிதல், சுற்றங்களிற் பற்றுவிடுத்தல், சமவுணர்வோடு தத்துவமறிதல், என்னின் றகலா திருந்தே யெண்ணல், தனிமை நாடல், தன்னறிவெய்தல் அத்யாத்ம ஞானம்) இவையே யறிவாம்; இல்லது இருளே. இந்த அறிவே நம்மை யறிவித்து, நாமல்லாதவற்றினின்று நம்மை விடுவித்து, தூய்மைப்படுத்தி தூயவடிவான கடவுளிடம் நம்மைச் சேர்ப்பது. இவ்வறிவன்றோ பாரத நாட்டுப் பெரியோரின் மனதை யேற்றிப் பாரின் இருளைப் போக்கிய அறிவு. அவ்வறிவு பொலிந்த பாரத நாடு, தவத்திலும், அறிவிலும், கல்வியிலும், அனைத்திலும் பொலிந்தது. அத் தன்னறிவை யூட்டிய சான்றோர் எங்கே! அதன் இனிய இசையைச் சாந்தமெனுந் தென்றலுடன் கூடி விடுத்து அரசர்களையும் தன் தனிமையான இன்பத்திற் களைத்த தபோவனங்கள் எங்கே! அந்தோ என் தேசமே! எப்போது காலத் திரையில் மறைந்து மங்கும் உனது உண்மையறிவு, உனது சக்தி, மறுபடி ஒளி வீசி உலகின் வேற்றுமைகளையும், போரையும், இருளையும் போக்கும்! அவ்வறிவுள்ளறிவோனாக விளங்கும் கடவுளே தன்மயமென்னும் திண்ணிய உண்மை எப்போது மீண்டும் விளங்கி அடிமைத்தனமேகி அமரவுலகாகும்!

"எங்குங் கைகால், எங்குங் கண்வாய், எங்குங் காதாய், எங்கனுமுள்ளது; புலனிலாதறிந்தும், குணனிலாதுணர்ந்தும், உள்ளும், வெளியும், ஊர்ந்தும், நிலைத்தும், அண்மை சேய்மை அமர்ந்தது; நுட்பமாய், பிரித்தற்கரியது, பிரிந்தது போன்றே அனைத்துயி ருள்ளும் அமர்ந்து விளங்கும். அளித்தும் படைத்தும், அடக்கியும் உயிர்களை ஆளும் இருளிற் கப்புறமுள்ள ஒளிக்கொளியியும் உயர் பெரும் பொருளே அறிதற்குரியது; அறிவின் முடிபு, மனமெலாமிருக்கும் மங்களச் சோதி" என்று நமதுள்ளுள்ள ஒப்பற்ற பரம்பொருளை விண்டுரைத்து இருளினின்று ஒளிக்கும், அழிவினின்று அமர வாழ்விற்கும், மனிதத் தன்மையினின்று கடவுள தன்மைக்கும், புவியினின்று விண்ணிற்கும் நம்மை உயர்த்துகின்றது கீதை "இதை யறிந்தவன் என் நிலைக்குரியன்" என்று கண்ணன் உறுதி கூறுகிறான்.

நமக்குள்ளிருக்கும் புருஷன் பிரகிருதியினால் உண்டான குணங்களால் சூழப்பட்டுள்ளான். அவன் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிறான்; உடல், மனம், புத்தி முதலியவற்றின் இயக்கங்களில் பற்றில்லாதவனா யிருக்கிறான். குணம் பிரகிருதி, புருஷன் இம் மூன்றிற்குமுள்ள வேற்மை விளக்கங்களை நன்கறிந்து நடக்கும் அறிவோன் எந்நிலையிலிருப்பினும் அமைதி யுறுகிறான். உலகில் எவ்வினையைச் செய்யினும், எந்நிலையிலிருப்பினும் அவனது மனம் மட்டும் கடவுளிடம் கலந்தே களிக்கிறது. இதை யுணர்ந்தன்றோ சங்கரரும் தனது ஆவியுருகப் பாடிய சிவானந்த லஹரியில், "மனிதன், தேவன், விலங்கு, கொசு, புழு, முதலிய பிறப்பெய்தினாலென்ன? வன்னியறம், இல்லறம், வானபிரத்தம், துறவறம் இன்னும் வேறு எந்த அறத்திலிருந்தாலென்ன? மலை, மனை, வெளி, காடு, நீர், நெருப்பு, முதலிய எவ்விடத்திலிருந்தாலென்ன? மனம் மட்டும் எ பரம்பொருளே! உன்னிடம் நிலைத்தவனே பரமயோகி, பரமசுகி" என்று கூறியிருக்கிறார். "நினைப்பால், அறிவால் நேர்மைச் சிரத்தைபால் தம்மை தாமே சாலவும் அறிவர். சாகும் உடலிற் சாவற்றொளிரும், ஒன்றாய் அனைத்திலும் உறைந்திடும் உயர் பொருள், தன்னைக் காண்போன் தன்னறிவுள்ளோன்; சமமாய் அனைத்திலுந் தங்கும் பொருளே அனைத்துமென்றே அன்பு செலுத்துவோன். ஒன்றே அனைத்திலும் ஒன்றிலே யனைத்தும் என்றுணர் மேலோன் என்றனைக் காண்போன். ஒரு சுடர் உலகெலாம் ஒளி செயுமாறே ஒரு பொருளெங்கு முறைந்திடுமன்றே" என்று

எல்லா உடலையும் இறைவனாலயமாக்கி வேற்றுமைப் புத்தியை விரட்டி, சமத்துவ அறிவைப் புகட்டும் அன்னையாகக் கீதை விளங்குகிறது. நமக்குள்ளுறையும் உயர்ந்த பொருளை அறிய நம்மைத் தூண்டுகிறது. நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம் என்று அப்பர் உணர்ந்த அஞ்சாமையையும், உறுதியையும் சுதந்திர உணர்ச்சியையும், நம்முள் பாய்ச்சி நம்மை "ஏமாப்போம், பிணியறியோம்" என்று சொல்லத் தூண்டுகிறது. நாமார்க்கும் குடியல்லாத் தற்பரனே நாமாகக் காட்டுகிறது! பிரம்மம் என்ற வார்த்தையே 'ப்ரம்' விரிதல் என்ற வேர் மொழியினின்று பிறந்து. தானே பல்லுயிர்களாக விரிந்ததெனும் பொருள் தருகிறது.

உலகமெல்லாம் பிரகிருதியினின்றே தோன்றி அதிலேயே அடங்குகிறது. பிரகிருதியின் வாயிலாகவே யான் அனைத்தையும் படைக்கிறேன். யானே பிரகிருதிக்கு வித்தூன்றும் தந்தை. அந்தப் பிரகிருதியிலுதித்த சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என்ற முக்குணங்களே அழிவற்ற தேகியைப் பிணைத்து நிற்கின்றன." என்று சொல்லி முக்குணங்களின் பான்மையைப் பதினான்காவது அத்தியாயமான முக்குண யோகத்தில் கண்ணன் விளக்குகிறான். "தீதழுக்கற்றுத் திகழ்ந்தே களிப்பொடும், அறிவினோடும் அமையும் முற்குணம் (சாத்வீக குணம்); வேட்கையும் பற்றும் விளைப்பது ராஜஸம் (இடைக்குணம்); இருளிற் பிறந்திருள் உய்த்திடும் தாமஸம். முற்குணங்களிப்பும் இடைக்குணம் வினையும், பிற்குணம் மாயையும் பிறந்திடச் செய்யும். அறிவும், ஆசையும், இருளும் ஆக்கும் முக்குணங்கடந்த முதுபெருஞ்சாட்சியாய், இருக்கும் இறைவனை எண்ணிடுவோர்கள் இருளைக் கடந்தே யெய்துவர் ஒளியே." என்று ஆண்டவன் சொல்லுகிறான். பிறப்பு, இறப்பு, கேடு, நோவு, இவையெல்லாம் இருளின் கூட்டமே. அமர வாழ்வு. பேரின்பம், பந்த மறுத்தல் முதலியன ஒளியின் கூட்டம். முக்குணங் கடந்த தன்மையின் பண்பைக் கண்ணன் கீழ் வருமாறு கூறுகிறான் "அறிவிலும் செயலிலும் மாயையதனிலும், விருப்பு வெறுப்பற்றிருப்பான் விழுமியோன். தன்னில் நிலைத்துத் தளராதிருப்பன். பொன்னும் மண்ணும் புகழ்ச்சி இகழ்ச்சியும், நட்பும் பகையும் நலமும் தீதும் ஒன்றெனத் தாங்கி யென்றன் பணியில் அமர்ந்து நிலைத்தோன் அந்தணனாவான்" இந்நிலை யடைந்தவனே முக்குணங் கடந்தோன். அவனை உலக மாயை கட்டுப்படுத்தாது. வினை செய்வதனால் அவனுக்கு பந்தம் விளையாது. ஏனெனில் அவன் தன்னயம் விடுத்தவனாதலின் பலத்தில் இச்சையின்றிப் பரம்பொருளையே எண்ணிச் செய்கிறான். அப்படிப்பட்டவன் முக்குணத்திரையை விலக்கி அதற்குள் ஒளிரும் உயர்ந்தபொருளை அடைகின்றான்.

உலகில் சம்சாரமென்னும் அரசமரம் அஹங்காரம், தன்மாத்திரை முதலிய கொப்புகளுடன் தலைகீழாய் வளருகிறது. பிறப்பு இறப்புக்கு உட்பட்டு, தொடக்கமும் முடிவுமின்றி, எப்போதும் வளர்ந்துகொண்டே யுள்ளது. முக்குணங்களால் இது வளர்க்கப்படுகிறது. புலப்பொருள்களே அதன் மொட்டுகளாயுள்ளன. பற்றை விலக்கிய அறிவினாலேயே இம் மரத்தைச் சிதைக்கவேண்டும். "செருக்கும் மாயையும் சேராதிருப்போன், பற்றை வென்றோன், பகைகடப்பற்றோன் பரமனை யடைவான். உயிருக்குயிராய் உயிர்ப்புடனிருந்தே, நினைப்பிலும், அறிவிலும், நிலைத்தே என்றும் வேத முடிவாய் விளங்குவோன் யானே. எல்லாம் யானென எத்திவணங்குவோன் பொல்லா மாயையைக் கடந்தே, என்னை அடைந்து களித்தே அமரவாழ்வெய்துவன்" என்று புருஷோத்தம யோகம் கூறுகிறது. புரு

ஷோத்தமனாகவும் சர்வசாட்சியாகவும், எங்கும் இலகும் கடவுளை நம்பி, பலனை அவன்பால்விடுத்து மனத்தை அவனிடமே நிலைப்பித்து வினைசெய்வோரே விழுமியர் என்பதையே நமது கீதை பன்முறை வழுத்துகின்றது. அப்படிக் கடவுளையறிந்து அத்தன்மை எய்தினவரின் தன்மைகளையும், இருட்செயல் புரிந்து, இறைவனை எண்ணாத அரக்கரின் தன்மையையும் தேவாசுர சம்பத் விபாகயோகமான கசு-வது அத்தியாயம் கூறுகிறது.

மனிதரிடம் இரண்டு தன்மைகள் உள்ளன. அவையே அமரத்தன்மையும், அசுரத்தன்மையுமாம். தெய்வத்தன்மை வளரவளர மனிதன் அமரனாகிறான். அசுரத்தன்மையால் மனிதன் விலங்காகிறான். இவ்விரு தன்மைகளையும் கீதை சொல்லுகிறபடி ஆராய்வோம். "துணிவும் நெஞ்சத்தூய்மையும் உறுதியும் அறிவும் யோகும், அறமும், அடக்கமும், தவமும், நேர்மையும், சாத்திரப்பயிற்சியும் அஹிம்சை, புண்மை, அமைதியும், துறவும், இகழ்தல் கவர்தல், சினத்தலுமின்மையும் அச்சமின்மையும் அன்பொடு நாணும், வெறுப்பும் செருக்கும், வீண்மையுமின்றி, தேசுங் க்ஷமையும் மாசறு தூய்மையும், தெய்வசம்பத்தெனத் தெளிவாய் பாரத!" என்று தெய்வத்தன்மையைச் சொல்லியபிறகு அசுரத்தன்மையைச் சொல்லுகிறான் கண்ணன், "இடம்பமும், செருக்கும், மமதையும், இன்னலும், அறியாத் தன்மையும் அரக்கர் இயல்பாம். தக்கது மறியார் தகாததைச்செய்வர். தூய்மையும் கடவுளும் வாய்மையுமற்றார். காமமும் பகையும் கலங்கிய மனமும், பெண் பொன் மண்ணிற் பெரு நசையுடையார், எனதெனதென்னும் இறுமாப்புடையார். தானே மேலெனுந் தற்புகழுடையார். பேருக்காகப் பெரிதும் உழைப்பர். என்னை வெறுக்கும் இகல் நெஞ்சுடையார். 'இன்றிதை வென்றேன். இச்சையை யடைவேன். இந்தச்செல்வமும் என்னதேயாகும்; இவரை வென்றேன் அவரையும் வெல்வேன், நானே தலைவன் எனதே வெற்றி, எனதே வல்லமை எனதே களிப்பு. என்று, அழுக்காறு அவாவில் ஆழ்ந்து, பாழ்நரகுழலுவர் பகைக்குண அரக்கர்" என்று கண்ணன் கூறியிருக்கும் அரக்கத் தன்மை இப்போது உலகில் தாண்டவமாடுவதைப் பாருங்கள்!

புதிது புதிதாகப் போர்க் கருவிகள் ஒரே நோக்கிற் பலரை கொல்லத் தக்கதாகக் குவிக்கின்றனர். எளியவர் நாட்டைத் தமதெனப் பற்றி மெலியரை வலியர் மிரட்டி வருகின்றனர்! மனிதன் மனிதனைக் கொன்றால் அதற்கு தண்டனை, தேசம் தேசத்தைக் கொன்றால் வெற்றி முரசடிக்கிறார்கள். வியாபாரத்தால் பிறநாட்டுப் பொருள்களை உறுஞ்சுகின்றனர். எவ்வழியேனும் பொருள் குவிப்பதிலேயே வாழ்நாளை இறைக்கின்றனர். உடற்சுகத்தையும் இடம்பவாழ்க்கையையுமே கருதுகின்றனர். நாட்டுச் செருக்கால்மக்களறத்தையே மறக்கின்றனர்! போரில்லாதநாள்உலகிலுண்டோ? போட்டியிலாதநாள் உண்டோ? காமமும், பொறாமையும், கலகமும், பேராசையும், பணத்தாசையும், நாடு பறிக்கும் கேடும், பிறரை அடிமைப்படுத்தியாளும் பாவமும் உலகில் பேயென உலவித் திரிந்து மக்களின் தூய வாழ்வையும், சுதந்திரத்தையும், சம உரிமையையும் விழுங்குகின்றன! உலகம்அசுரத் தன்மையையடைந்துள்ளது. விலங்குத் தன்மைக்கு வந்துகொண்டிருக்கிறது என்பதை விளக்கியும் காட்டவேண்டுமோ! இவ்வசுரத் தன்மையினின்று உலகம் விடுதலையடைவது எப்படி? அதற்கும் கீதை தன் கஎ-வது அத்தியாயத்தில் பதிலுரைக்கிறது.

மறுபடியும் மக்கள் மனிதத் தன்மையடைந்து கடவுள் தன்மைக்கு உயரவேண்டுமாயின் "சிரத்

தையே வாழ்வின் செயல்களிற் கலக்க வேண்டும். அன்பு, மூதன்மை, விசுவாசம், குருவினிடமும் சாத்திரங்களினிடமும் மனத்தை நிறுத்தல் முதலியனசிரத்தையின்பாற்படும். சிரத்தையுள்ளவன் தன் செயலில் ஒருமனப்பட்டு அதை ஒழுங்குற முடிப்பான். சிரத்தை யுள்ளவனே தன் வினையை யறிந்து அதை ஒழுங்கு பெறச் செய்து, விடுதலையடைந்து கடவுளுடன் சேர்வான். சிரத்தையெப்படியோ அப்படியே மனிதனுமிருப்பான். சிரத்தையினற்றே செய்கையுயாகும். சாத்விகம், ராஜஸம் தாமஸம் என்று சிரத்தை முப்பான்மையுடையது. உணவிலும், வழிபாட்டிலும், பேச்சிலும், எண்ணத்திலும் செயலிலும், சிரத்தைகொள்ளுதல் வேண்டும். "வலிவும், ஊக்கமும் மகிழ்வும் சுவ்வவும், நலமுந் தருவது நல்லுணவாகும். அளவுகடந்த அறுசுவையுணவு, பிணிதுயர்பெருக்கும் ராஜஸ உணவாம். உருசியும் சுத்தமும் அற்றே ஊசிய ஆரச் சோறே தாமஸமாகும். உணவிற்கும் மனதிற்கும் நெருங்கிய தொடர் பிருப்பதால், உணவுத் தூய்மையை மக்கள் கவனித்தல் இன்றியமையாதது. உலகில் பெரும்பான்மையோர் தம்மளவிற்கு மிதமிஞ்சி உண்கின்றனர். நாவிற்காகவே உண்பதல்லால் வயிற்றிற்காக உண்பவர் அருமையாயுள்ளனர். புளி மிளகாய், கட்லுப்பு, சர்க்கரை, காப்பி, தேயிலை, புலால் முதலியவற்றின் தீமையை யறிந்தும் மனித சமூகம் இன்னும் அதைப் பிடிவாதத்துடன் உண்டுவருகிறது. இயற்கை யுணவை மிதமாக, நன்குக்கடித்து அற்றது போற்றியுண்பதே நலம். காய்கனி யருந்திய முனிவர்களே வேத மார்க்கத்தை நாம் எண்ணுவோமாக. பாரத நாடுதான் இவ்வுணவின் இரகசியத்தை யறிந்து, விரத தத்துவத்தையும் இயற்கையுணவையும், புலால் மறுத்தலையும் கையாண்டு வருகிறது. ஹாயிகூன், பிளெச்சர், இலக்குமணசர்மா, மஹாத்மா காந்தி முதலியோர் முறைகளைப் பின்பற்றி நமது உணவையும்உடலையும் பாதுகாத்தல் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு வழியென்பதை மக்கள் அறியவேண்டும்.

உடலும், மொழியும், நெஞ்சும் தவத்தால் தூய்மை யடைவதே சிரத்தையோடு கடவுள் தன்மையை எய்துவதென்று கீதையும் மற்ற எல்லா வேதங்களைப் போலவே சொல்லுகிறது. "தூய்மை நேர்மை, துன்பமின்மை. பெரியோர்ப் பூசனை பிரமசரியமும் மெய்த்தவமென்ன விளம்புவர் மேலோர். அன்பு இதம் மெய்யோடினை புறச்சொல்லும், வேதப்பயிற்சியும் ஓதலின் தவமே. பெருமை அன்பு அடக்கம் பீடுறு நினைவும் மௌனமுமாகும் மனதுடைத்தவமே. முத்தவன்றன்னை முற்குணத்தவரே பல நசையின்றிப் பயிலுவர்தாமே. இசைபெறப் பயில்வோர் இடைக்குணத்தவரே. தனக்கும் பிறர்க்கும் சார்ந்திட இன்னல் காமுடன் நடப்பர் கடைக்குணத்தோரே. ஓம் தத், ஸத்தென (ஆம் அது உண்மை) ஓதித் தெளிந்தே சிரத்தையாய்த் தவத்தைச் செய்திடல் உயர்வே" என்ற திருமொழிகள் மக்கள் அறத்தை விளக்குகின்றன. மேற்கூறிய மனமொழி மெய்த்தவங்களே நமது முக்கரணங்களையும் தூய்மைப்படுத்தும் வழி. முக்கரணங்களும் தூய்மையுற்றால் நமது சித்தம் தெளிந்து அதிலிருக்கும் கடவுளைக்கண்ணாடி போலக் காட்டுகிறது. அத்தகைய தூய்மையால், தூயவாழ்வால், வாழ்வின் வினைகள் செய்யப்பட்டு, பந்தமற்று, சுதந்திரமுற்று சுத்தனுடன் ஒன்றுபடும் பெருங்களிப்புறுகிறது.

வாய்மை நலன்நோன்பு வன்செருண்டடக்கமில்வா
தூயோனைச்சேருந் துணை

என்பதே கீதை கூறும் சிரத்தை வழி. இந்த சிரத்தையால் எதுஉலகில் நித்யமான பொருளோ அந்த ஓங்காரத்தை உணர்ந்து இன்புறலாம்.

பரம்பொருளை ஓம் தத்ஸத் என்றுபெரியோர் தொழுவர். ஓம் என்பதே கடவுளின் பெரும் வடிவும் எல்லாம், அதற்கு "ஆம்" என்னும் பொருளுமுள்ளது. தத் என்பது நித்தியமாய் என்றுந் தாமையாய் உள்ளது எதுவோ அதுவே. "சத்" என்பது மாயையின்றி, உண்மையாக உள்ளது. எதைச் செய்யினும் ஆன்றோர் ஓம் என்றதைச் சொல்லியே ஆற்றுகின்றனர். மோக்ஷத்தைத் தேடுவோர் பலத்தில் இச்சையின்றி "தத்" அது என்பதையே எண்ணி யக்ஞம் செய்கின்றனர். நம் வினையில் உறுதியும், சிரத்தையும் கொள்ளலும் "சத்" எனப்படும். பரம்பொருளையடையப் பலத்தில் விருப்பமின்றி பரம்பொருளையே நினைந்து நம் வினையையுறுதியுடனும் சிரத்தையுடனும் செய்வதையே ஓம்தத்ஸத், என்ற மந்திரம் விளக்குகிறது. இம் மூன்று மொழிகளே நமது முன்னோரின் வினை வெற்றிக்கும் பேரின்பத்திற்கும் வித்தாயிருந்தன. அம் மொழிகளே நாம் வினையறிந்தாற்றி விடுதலையடைய விளக்காக விளங்குமாக!

இதுவரையில் கீதை கூறியிருக்கும் வினையறிந்தொழுகி விடுதலையடையும் வழியையெல்லாம் பதினெட்டாம் அத்யாயமான சந்யாஸ யோகத்தில் பகவான் சுருக்கிச் சொல்லுகிறார். "கீதை" என்ற மொழியைத் திருப்பித்திருப்பிச் சொன்னால் அதுவே கீதையின் சாரமான "தியாகி" என்பது. தியாகியாவதே கீதையின் முடிபு. தியாகமென்பது தன்னயம் விடுத்தல். தியாகம் என்பது, விளக்கு தன் திரியையும் எண்ணெயையும் கொடுத்தேனும் மக்களுக்கு வெளிச்சம் ஈவதைப்போலத் தன் ஆவியையும் உடலையும்உலகின் அருட்பணிக்கு ஈதல். ஒவ்வொருவரும் உலகக்கோயிலில் தாம் செய்யப் பிறந்த வினையையறிந்து அதன் பொருட்டு மற்றதையெல்லாம் விடுத்துச் செய்தலே தியாகம். அதுவே துறவு. துறவி என்போன் "மழித்தலும் நீட்டலும்" வேண்டுவதில்லை. உலகம் பழித்ததை ஒழித்து தன்னயம் விடுத்து, கடவுளுணர்ச்சியுடன் தன் பணியைச் செய்பவனே துறவி. துறவி வள்ளுவனைப்போல் இல்லறத்திலுமிருக்கலாம். ஜனகனைப்போல அரசாளலாம். கண்ணனைப்போல உலகிற் கலந்துமிருக்கலாம். ஏசுவையும் அப்பரையும் போல மன்றலற்றவனுமிருக்கலாம். புத்தனைப் போலவும் சைதன்யரைப் போலவும் மனைவிமக்களை விடுத்து தனித்தவமும் புரியலாம், மஹாத்மாவைப் போலவும் குடும்பத்துடனும் இருக்கலாம். எந் நிலையிலிருப்பினும் பலன் விழையாது பணி செயும் நிலையே சிறந்த துறவு. ஏசுநாதர் சிறந்த பிரமசாரியாயிருந்து துறவறத்தை நாட்டினார். புத்தர் மணந்து எல்லா இன்பங்களையும் நுகர்ந்து அவை பயனற்றவையெனத் தள்ளினார். இராமகிருஷ்ணபரமஹம்ஸர் மணந்தும் மனைவியிடம் பற்றின்றி வாழ்ந்து காமமற்று வாழும் காட்சியாய் விளங்கினார். நமது மஹாத்மாவோ பெண்டு பிள்ளைகளுடன் கலந்தே வாழ்ந்தும் உலகில் தன்னயமற்ற தவப்பணி செய்யலாம் என்பதை விளக்கி நிற்கிறார், மஹாத்மாவின் துறவு நிலையே மக்களுக்கெல்லாம் உவந்தது. அதுவே கீதை சொல்லும் கர்மயோகம், கர்ம பலத்யாகத்தையே அடிப்படையாகக் கொண்ட சந்யாசம் "பலன் விழையாத பணியே துறவு. தானமும் யக்ஞமும் தவமும் ஆற்றலே எம் முனிவர்க்கும் ஏற்றதுவாகும். பலன் விழைவின்றியே பழகுவைதவமும் அறிந்து தெளிந்த அகத்துடைத் துறவி கடமை வினையை களிப்புடன் செய்வான், உடல் உளமட்டும் வினையை விடுத்தல் முடிந்திலதே. பலன் விடுதலே முதன்மை. தானெனு முணர் வறு தனிப் பொறையாளன் செய்தும் வினைகளைச் செய்யாதோனே. அழிவறுமோர் பொருள் அனைத்திலுமுள்ளது. பலபிரிவான பாரின்பொருள்களிற்

பிரியாதுறையும் பிரமமென்றே அறிவோன் அறிவே அறிவுள்ளறிவாம். நம்மைத் தோற்றிய நல்லறவினையைப் பலன் கருதாது பற்றுவிடுத்தே ஆற்றற்றிடுவோனே அனைத்தும் அறிந்தோன். சிறுமை இன்னல் செருக்கொடு சோம்பல் பெறுமவ் வினையே தாமதமாகும். பலன் கருதாமல் மனங்கலங்காமல், தவவழியாற்றல் சாத்விகவுறுதி. பலத்திற் பற்றுடன் பணிசெயல் ராஜஸம். உறக்கம் அச்சம் உள்ளத்தளர்வும் செருக்குந் துயரஞ் சேர்ந்தது தாமஸம். தன்னறிவிபுங் களிப்பே சாத்விகம். புலப்பொருளிவது பூஜாசெயும் ராஜஸம். தூக்கமும் போகச்சோம்பலுந் தாமஸம். இவ்விதமாய் ஞானம், வழிபாடு, உறுதி, தவம், களிப்பு, தளர்வு முதலியவற்றிற்கூட முக்குண வியல்பினைக் கண்ணன் விளக்குகிறான். ஆதலின் குணங்களாலேயே மக்கள் பல்வகையாய் வகுக்கப்படுகின்றனர். குணங்களுக்கு ஏற்றபடியே கருமங்களும் அமைகின்றன. குணத்திற்கேலாத கருமம் இயற்கைக்கு விரோதமெனப்படுகிறது. மக்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வினைக்கே ஆளாயிருப்பதால் அவர்கள் குணமும் தங்கள் கருமத்திற்குத் தக்கபடியே மாறுகிறது. உலகின் வேலைகள் சரிவர நடைபெறுவதற்குமக்களுக்குக் கல்வியும் அறிவும் பரப்பித் தூயவாழ்வு வாழ்வோர் வேண்டியிருக்கிறது. உலகிலுள்ள பகைகளைத் தீர்க்க வீரர்கள் வேண்டியிருக்கிறது. உலகினருக்குத் தேவையான பண்டங்கள் விற்பதற்கும் நாட்டின் தொழில்களையும் வாணிபத்தையும் பெருக்குவதற்கும் வாணிபர் வேண்டியிருக்கிறது. உலகிற்குத் தேவையான உணவுவுடைப்பொருள்களை விளைவிக்க வேளாளர் வேண்டியிருக்கிறது. உலகின் அழுக்குகளைப் போக்கிக் காற்றைச் சுத்தமாக்கவோ இன்னும் இது போன்ற மற்ற வேலைகளைச் செய்யவும் சமூகத் தொண்டர் தேவையாயிருக்கிறது. ஆதலினாற்றான் சமூகத்திற்கு வேண்டிய நாற்குலப்பான்மைக்குத் தக்கபடி அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலியோரின் பணிகளைக் கீதை வகுத்துக் கூறுகிறது. இந்த ஜாதி வித்தியாசத்தைக் குறித்து ஆடி மாதம் பாலபாரதியில் 'அறிவும் செயலும்' என்ற தலைப்பில் நமது கொள்கைகளைக் கூறிவிட்டோமாதலின், ஈண்டு கூறியதைக் கூறாது விடுக்கிறோம். அவனவன் குணத்திற் கேற்றபடி வகுக்கப்பட்ட கருமத்தைப் பலன் கருதாது ஆற்றி முடித்த மனிதன் விடுதலையில் உயர்வான் என்பது கீதையின் முதன்மையான கொள்கை.

"எவனிடமிருந்தே எல்லாம் வளர்ந்தவோ; எவற்றிலும் யாவன் என்றும் உளனோ, அவனவன் தொண்டுடன் அவனைத்தொழுதால், பூரணனாகிப் பொலிந்திடுவானே." தொண்டுசெய்யும் கைகளினால் தொழுதெழுந்ததலையே இறைவன் மகிழ்வுடன் ஏற்கிறான். ஆகவ் வினையும் வழிபாடும் இணைபிரியாதன. மனிதன் வினைசெய்து முடிக்கவே உலகிற்கு அனுப்பப்பட்டான். அவ்விந்த வினையைச் செய்யாது அவனை வணங்குதல் தன் கணவன் இட்டபணிகளைச் செய்யாது மறந்து எப்போதும் அவனோடு கொஞ்சிக்கொண்டிருக்கும் மனைவிக்கு ஒப்பாகும். தன் பாடங்களை மறந்து உபாத்தியாயருக்கு லஞ்சங்கொடுத்து பரிட்சையில் தேறும் மாணவனை யொக்கும். வினையை விடுத்து வழிபடுவது போலிப் பூசனையாகும். கடவுளை மறந்து வினைசெய்வதும் அறத்திற்கு மாறாகும். அது துன்பமும் இருளும் பயப்பதாகும். தலைவனை மறந்து தானுண்ணும் மனைவியை யொக்கும். ஆருயிர்களின் நலத்தை மறந்தும் வினையாற்றுதல் நலமல்ல. அது தன் பிள்ளைகளின் நலங்கருதாது தானே துய்க்கும் மனைவியைப் போலும். ஆதலில் முதலிற் கடவுளை உறுதியாக எண்ணி, பின்பு அவன் தனக்கு இட்ட பணியை ஒருப்பட்டறிந்து, ஆருயிர்களிடம் அன்பு பூண்டு அதை அவர்களுக்குப் பயன்

படச் செய்வதே நிலைத வகுக்கும் வினைசெயல் வகை. "இயற்கையாலமைவினை இன்புறச்செய்தே தன்னறம் போற்றுவோன் நன்னய முறுவான். தான் செயப் பிறந்த தனிவினை தன்னை, இடர்வரின் விடுத்தல் இழிவு மாந்தர்க்கே. எச்செயல் உலகில் இடரிலா தெய்தும்? புகையுந் தீயைச் சுற்றுதல் போலச் செயல்களை இடர்கள் சேருமென் றறிவாய். அடங்கிய மனம் பற்றற்ற புத்தியும் ஆசையு மற்றோன் அடைவன் விடுதலை. புத்தியுந் தூயதாய்,பலனுடல் வென்றே தேவையின் மீது தேடாது எளிமை பூண்டே, நசைவெறுப் பற்றவன் புலவன். தனியிடஞ்சார்ந்தே ஊன், பேச்சு, உடல், மனம் கட்டுக்கடங்கக் கருத்தை நிறுத்தி, தானெனும் உணர்வும், தன்னலச் செருக்கும்,ஆசையுஞ் சினமும்,பொருளும் அகன்றே அமைதியைப் பெற்றோன், அளவாய்த் தேவைகள் அமைபப்பெறினும்,முற்றுந் துறந்த முதற்பொருளாவான். அவனே பரமஹம்ஸனென்பானும்;வேண்டுதல் வேண்டா விழுமிய அமைதியில் உலகத்து உயிரெலாம் ஒன்றெனப் பார்த்து என் மீது உயர்ந்த அன்பினை எய்துவான். என்னை அறிந்தே இன்புறக் கலப்பான். என்றும் எல்லா வினைகளை இயற்றினும், என் சரண் புக்கோன் என்னருளாண்டே, இயப்பிடவொண்ணு இன்பமேயடைவான்.என்னை உயர்ந்த இலக்காய் எண்ணி, எச் செயல்தனையும் எனக்கு அர்ப்பணித்தே புத்தியில் ஒருப்பட்டுன் வினைபுரிவாய். என்னில் நிலைக்க, இடர்களை வெல்வாய். அகம்பாவத்தால் அலட்சியஞ் செய்தே உன் வினையான "போர்வினை செய்யேன்" என்று நினைத்தால் இன்னலேயடைவாய்.இயற்கை யுன்றன் இதய மெரிக்கும். உன்னியல்பாலே உதித்த வினையாற் கட்டுண்டுள்ளாய்.கருதிச்செய்தே விடுதலை பெறுவாய்! வீர அறிவாய்! எல்லாமனத்தும் இலங்கும் இறைவன் மாயையால் அனைத்தையும் ஆட்டிவைத் தாளுவான். அவனில் நிலைப்பாய்! அவனை எய்துவாய்! அன்பனே தூயனே! அருச்சுன! வீர! இன்னொரு முறையும் இயம்புவேன். கேளாய்.உன்னிதயத்தை என்மயமாக்கு! எனக்கே அன்பை ஈந்து வணங்கு. தியாகஞ் செய்து திண்ணமாய் என்னை அடைவாய் என்றன் அருமை வீர! எல்லாம் விடுத்து என்னிற் சரண்புகு! விடுதலை ஈவேன்,விசனம் வேண்டாம். நானுனக் குரைத்த நல்லறிவெல்லாம் பணியும், தவமும் பக்திபற்றோர்க்கு உரைத்திடலாகா உயர் அறமாமே. என்னிடஞ் சிறிய அன்புடை நல்லோன் புகன்றிதைப் பரப்பிப் புண்ணிய மெய்துவன். அவனே அரியதோர் அன்பன் எனக்கே. இதனை யோதலும் இன்னிய வேள்வி. இதனைக் கேட்டோர் இன்பமுற்றிருப்பர்.ஒருமனத்தோடென்னுரைகளைக் கேட்டு கலக்கமகன்று காட்சியுடனே தெளிந்தனையோ நீ தனஞ்சய" என்றான் கண்ணன். இத்தோடு கண்ணன் விசயன் மனக்கலக்கத்தை ஓட்டினான். உலகில் வினையறத்தை அறிவுடன் பொருந்தக் காட்டினான். விஜயனை அச்சமயம் அவன் செய்தே தீரவேண்டிய கடமையான போருக்கும் உலகையெல்லாம் கடமைக்கும் தூண்டிய கண்ணனின் மொழிகளைக் கேட்டும் வாழ்வின் உயர்ந்த நோக்கத்தை யறிந்து உணர்ந்து ஆற்றுதவரும் உண்டோ? அருட்பெருந்தாயாய் பிறப்பினையகற்றி, தன்னறிவும் தன்னம்பிக்கையும்,தன்னுகவியும், கடமையுணர்ச்சியும், வீரமும், அச்சமின்மையும், நமதுள்ளுள்ள தெய்வத் தன்மையும் எழுந்து பொங்கிப் பொலியச்செய்யும்வேதத்தை ஆர்த்த கண்ணனை நாம் என்னென்று புகன்று வழிபடுவோம். நமது வாழ்வை அவனுரைத்த அறவாழ்வாக மாற்றி அருட்பணி செய்து அனைத்தையும் அவனுக்கு அர்ப்பணித்து அவனன்பிற் கரைதலே நம்மால் இயன்றது. முடிவில் உன் மாயை ஒழிந்ததா என்று கண்ணன் கேட்டதற்கு விஜயன் கூறிய அன்பு செறிந்த சுருக்க மொழி

யையே நாமும் நமது கண்ணனுக்குச் சொல்லுவோம்.

"ஒழிந்த தென் மாயை! உன்னருளாலே, என்னறிவடைந்தேன்! இறைவ! அச்சுதா! உறுதியானேன் உதிர்ந்தது ஐயம்! உன்னுரை செய்வேன் உளத்துடன்!" என்று கீதையை உணர்ந்த எவனும் உரைப்பான். மனிதனைத் தேவனாக்க இதனினும் அரிய வழி எதுவேயுளது. மனிதருள் விலங்குத் தன்மையும், மனிதத் தன்மையும்,தெய்வத் தன்மையும் தாமஸ, ராஜஸ, சாத்விககுணங்களாய் உள்ளன. அவ்வவற்றின் தன்மைகளைத் தெளிவாய் எடுத்தோதி நம்மைசாத்விகவழிக்குப் பாதை காட்டுவோனாகக் கீதை நிலவுகிறது. மக்கள் நடமாடுங் கோயில்கள், கடவுள் அனைத்திலுமுள்ளான், ஆருயிர்ப் பணியே ஆண்டவன் பணி, அனைத்துயிரிடமும் அன்பு செலுத்தலே ஆண்டவனை வழிபடுதல் என்னும் அருட்பணியே கீதை காட்டும் பாதை. கடவுளின் உள்ளுறை என்று உயிர்களையெல்லாம் சாதி மதம், நிறம், ஏழ்மை, பணம் என்ற வேற்றுமையற்று மதிக்கும் உயர்ந்த சமரஸமே கீதையின் சத்தியநாதம். இவ்வுலகக் கோயிலின் பணிகளைச் செய்யவே ஒவ்வொரு உயிரையும் ஆண்டவன் படைத்துள்ளான். அப் பணியை அறிதலே தன்னறிவு; ஆண்டவனுக்கும் ஆன்மாவிற்கும் நடுவிலிருப்பது அப் பணி என்னும் வேலியே; அதைத் தாண்டாது ஆண்டவனை அடைய முடியாது. அப் பணியே ஒருவனுடைய சுதர்மம். அதை ஆற்றுவதே விடுதலையின் ஆறு. அப் பணியை ஆற்றுவதில் நமதுள் விளங்கும் ஆண்டவனையே எண்ணி அவனை அடையும் இன்பத்தையே கருதி, பலனை எண்ணாது இடர்களால் தளராது உறுதியுடன் "இது கடவுள் கொடுத்த வினை, இதை ஆற்றிக் கடவுளுக்கு நாம் பதில் சொல்லவேண்டும். இதை அன்புடன் ஆற்றினால்தான் கடவுள் மகிழ்வார் இது எனது கடமை" என்ற உணர்வோடு வினையாற்றி விடுதலையடையும் அறமே கீதை காட்டும் பாதை. கீதை ஞானமும் கருமமுடன் மொழிகிறது. கடமையைத் தன்னயம் விடுத்துச் செய்யவேண்டுமாயின், அவ்வினையைக் கடவுளுணர்ச்சியுடன், பலனில் ஆசைவிடுத்துச் செய்ய வேண்டுமாயின், "இவ் வினை எனக்கும் கடவுளுக்கும் நடுவே நிற்கிறது. இதனால் உலகிற்கும் நலமாயிருக்கிறது. என் வயிறு வளர்க்கவாவது, பணம் சேர்க்கவாவது போககத்திற்காவது இதை நான் செய்யவில்லை. பிறர் நலத்திற்காகவே ஆற்றுகிறேன். நான் யார்? பிறர் யார்? எல்லாம் கடவுளின் விரிவே! இவ்வினை வேலியைக் கடவுளையடையவே தாண்டுகிறேன். கடவுளை யடையாவிடில் கருத்தடங்காது. ஆதலின் என் கடமையாகிய வினையைச் செய்கிறேன். நான் இதைச் செய்யவில்லை. ஈசன் கட்டளை இது அவன் ஏவுதல் இது, என்னை ஆட்டுவிப்போனும் ஊட்டுவிப்போனும் அவனே என்னுள் அவனே, என் வெளியில் அவனே. இந்த வினை என்னை அவனிடமிருந்து பிரிக்காது. ஏனெனில் நான் வினை செய்யும்போதும் அவனையே நினைக்கிறேன். அவனையே நோக்கமாக வுடையேன். உலகில் வேறு சிற்றின்பங்களைச் சிறிதும் கருதேன். என் வினை முன் கடவுளே, என் வினையை முடித்தால் கடவுளே. என்னுட் கடவுளே" என்ற உயர்ந்த எண்ணமும் நோக்கமும் உள்ள அறிவு,(ஞானம்) இருந்தாலன்றோ கருமம் சிறக்கும். அப்போதன்றோ காமங் கருதாக் கருமம் இயலும். ஆதலின் கருமத்திற்கு ஞானம் அவசியம். ஞானம் உதிக்கத் தன்னறிவு முதன்மையானது. தன்னறிவு எய்த ஒருமனப்பட்ட தியானம் அவசியம். தியானத்திற்கு நமது மனம் இறைவனிடம் ஊன்றிய பக்தி அவசியம். உறுதியும், பிடிவாதமும், முயற்சியும் உயர்ந்த நோக்குங்கொள்ள ராஜயோகமும் அவசியம். ஆதலின் கீதையானது எல்லா யோகங்

கலையும் தன்னுள் அடக்கிக் கரும யோகத்தை ஞான யோகத்தோடு சேர்த்துச் சொல்லுகிறது. கீதையின் பாதையே நாமும் நம் நாடும் விடுதலை யடையும் வழி. தன்னயம் விடுத்து அருட்பணி செய்தலே தற்போது வேண்டிய கடமை. முதலில் மனிதன் தான் கடவுளின் கட்டளையைத் தாங்கி பிறந்துள்ளதை எண்ண வேண்டும். உலகம் கோயில் அதில் அனைவரும் கடவுளின் பார்வையில் உள்ளவர். அவன் பணியாற்றுவது ஒருவரும் ஏமாற்ற முடியாது என்று எண்ண வேண்டும். கோயிலுணர்ச்சியுடன், பழிக்கஞ்சிப் பணி செய்து உலகில் ஒழுக வேண்டும். வேற்றுமை எண்ணத்தை வேரறுத்து அனைத்திடமும் அன்பு செலுத்தி அருயிர்ப் பணி புரிய வேண்டும். தன் அறத்தைக் தவமெனச் செய்தல் வேண்டும். போகத்தைச் சுருக்கித் தேவையைச் சுருக்கி, ஆசை, அகங்காரம், பொறாமை, முதலியவற்றை யகற்றித் தன் வினையாற்றி முடிவில் கடவுளுக் தானுமாய்க் கலந்திருத்தலே கீதைகூறும் வேதம். கடவுளாளவாய்த் தன்னையடக்கிக்கொள்ளுதலே அதாவது எனது எனது என்பது அற்று அவனே யாவதே கீதையின் வழி. அவ் வழி ஒழுகி அமரராவோம்!

தனிமைத் தவாலமும் சான்றாண்மைத் தொண்டும்
இனிய உயிர்த் துணையென் றெண்
இன்னுமற் பொய்யாமல் ஈச னொளியெண்ணி
யுன்னறத் தொண்டில் உழை.

ஓம் தத் ஸத்

# யோக சாதனம்

(உத்தரயோகி அரவிந்த கோஷ் எழுதியதை க. அமுதன் மொழிபெயர்த்தது.)

கட்டியாக நிற்பது ஸ்தூலம்; மனிதனுடைய தடித்த ஜடபாகம். இதனுள் இரண்டு பொருள்கள் அடக்கம்—ஒன்று ஸ்தூல பிராணன் அல்லது ஜட நரம்புக்கட்டு மற்றொன்று அன்னம் அல்லது பிராணன் இயக்குமி—மாகிய உடல். உயிரின் மூலப்பொருள் பிராணன்—ஸூக்ஷ்ம தேகத்திற்கும் ஸ்தூல தேகத்திற்குமாக உள்ள பிணைப்பு தளறுண்டு பிரிந்த காலத்து சாவு உண்டாகின்றது. மேற்சொல்லிய இரண்டையும் பிணைப்பதே பிராணன். ஸூக்ஷ்ம தேகமானது பிராணனைத் தன்னுள் இழுத்து அடக்கிக்கொண்டுவெளியேகி விடுகிறது; ஜட சரீரத்தில் எஞ்சி நிற்பது அபானம்—பொருள்கள் அக்குவேறு ஆணி வேறாகக்கழன்று மடிவதற்கு அனுகுணமான அழுகுதலை ஏற்படுத்த வல்லது. தேகத்தை இணைத்துப் பிடித்து உருவாக வைத்திருக்கக்கூடிய பிராணன் பறந்து சென்றதும் அபானம் உடலை விரைவில் அழுகும்படி செய்யும். சில ஜந்துக்கள் ஏராளமாக பிராணனைப்படைத்திருப்பதினால் ஸூக்ஷ்ம தேகம் வெளிச் சென்ற பிறகும் அவைகளின் உடலில் உயிர்க்குறிகள் காணப்படுகின்றன.

இதுவரை மனிதனுடைய ஸூக்ஷ்மப் பகுதியைப் பற்றி மட்டிலுமே, அதாவது அவனுடைய அந்தக்கரணத்தைப்பற்றி மட்டிலுமே நான் சொல்லி வந்தேன்--உடல் என்னுடைய நோக்கத்திற்குக் கொஞ்சம் வில

கிய விஷயம். இருந்த போதிலும் அதைக் குறித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்வது அவசியமாகி றது. நான் உனக்கு விளக்கிக் காட்டும் இந்த யோக மானது ஸ்தூலத் தோற்றங்கள் சூட்சுமத்தின் நிழல் அல்லது ஆக்கமேயாம் என்றும் உண்மையில் மீது ஊன்றியுள்ளது. தேகம் ஒரு அச்சு; அதனுள் அந்தக் கரணம் தன்னை வார்த்துக்கொள்கிறது; ஆயினும் அவ் வச்சானது அந்தக்கரணத்தினுல் ஆக்கப்பட்டதே. அச் சைமாற்றி அமைக்கும் சக்தி அகத்திற் குண்டு. சுத்தி கரிக்கப்பட்ட, வித்தி வாய்ந்தமுக்தன் அந்தக் காணத் திற்குத்தேகத்தை எல்லா வழியிலும்அதற்கிசைந்தவாறு செய்துகொள்ள முடியும். பழைய வினைகளின் போக் கிற்கு உடலை விட்டுக் கொடுத்துவிட்டு அதாவது நோய் துன்பம், துரதிருஷ்டம், சாவு முதலியவைகளின் சுழ லில் தேகத்தைக் கிடத்திவிட்டு அந்தக்கரணம் ஒதுங்கி நின்று சிறிதேனும் அவைகளால் தாக்குறாது நிற்கவும் கூடும். எல்லாவித அசுத்தமும் கட்டும் அகத்தினுள் காணப்படும் அசுத்தம் கட்டு முதலியவற்றின் வெளித் தோற்றங்களேயாம். காரணம் நீங்குமாயின் காரிய மும் ஒழிந்துவிடும்—ஆனுல் உடனே யல்ல. இது எவ் வாறெனின் ஆவியும் ஆவியந்திரத்தைப் போலுமாம். வழக்கங்கள் எனப்படுகிற முற்பிறப்புப் பலன்கள் அகத் தைவிட்டு நீங்கி முற்றிலும்உடலில்ஆழ்ந்துவிடுகின்றன. நீ அவைகளை அவ்விடத்திலிருந்து நாளடைவில் தணி கச் சலித்து ஓய்ந்து ஒழியுமாறு செய்யலாம்—பலர் இவ்விதம் செய்கிறார்கள். இல்லாவிடில் அவைகளை உடலினுள் பின் தொடர்ந்து அவ்விடத்து நிற்கவிட் டாது வெளியே துரத்தவும் செய்யலாம். இதன் பய னாக நீ தூய சுத்தியையும் தூய வித்தியையும் பெறு வாய். ஹடயோகம் அல்லது இராஜ யோக முறை கள் வழியாக மேற்சொல்லிய பலன்கள் வழக்கமாகத் தேடப்படுகின்றன—ஆனுல் இவை அவசியமன்று.நான் இப்பொழுது காட்டிக்கொடுத்துவரும் வழியானது சிறந்தது—ஹட.இராஜ யோகங்களைக் காட்டிலும் சுல பமானது; இதைப் பின் பற்றினுல் வித்தி நிச்சயம்.

தூய அகத்தைப் பெறுவது, தூய உடலைப் பெறுவதற்கு வழி; விடுதலை பெற்ற அகம்,உடலில் விடு தலையை ஏற்படுத்தும்; அகத்தில் வித்தி உண் டானுல் உடலில் வித்திக்கு வழி உண்டாகும். அந்தக் கரணத்தினுல் யோகசாதனத்தைச் செய்யச் செய்ய உடலானது சக்தியின் புதிய பிரபாவங்களுக்கு ஒரு வாறு தன்னாக இணங்கிவரும். அந்தக்கரண ஸாதனம் முடியும் வரை, நீ உடல் சம்பந்தமான விஷயங்களில் தலையிடக் கூடாது. இயற்கையை அதன் காரியத்தை செய்யும்படி விட்டுவிடு. தேகத்தைவிட்டு உன்னால் எவ்வளவு தூரத்திற்குப்பிரிந்தொதுங்கி நிற்க முடியுமோ அவ்வளவு தூரத்திற்கு ஒதுங்கிப் பிரிந்து நில்; உடலை ஒரு புரையாக நினை; அதை நீ பரமேச்வரனுடைய பொறுப்பிலும் அவனுடைய சக்தியாகிய பார்வதியின் பொறுப்பிலும் விட்டுவிடு. யோக ஸாதனம் செய்யும் பொழுது பலர் நோயைக் கண்டு அஞ்சுகிறார்கள். நீ அவ்வண்ணம் பயப்பட வேண்டிய அவசியமில்லை; நீ உன்னை ஈஸ்வரனுடைய பொறுப்பிற்கு ஒப்புவித்துக் கொண்டபடியால், அவர் உன்னைப் பார்த்துக்கொள் வார். தேக சக்தியின் பொருட்டு, செய்யவேண்டிய முறைகளின் ஒரு பகுதியாக நோய் உடலை வந்து தாக் கும்; பிறகு உடலில் சலித்து, மங்கிக் கடைசியாக கழிந்துவிடும்—திரும்பி வாராது. மற்றும் பல தொந்தி ரவுகள், தகுதியற்ற "அன்னமய கோசமாகிய" ஆகாரத் தைத் தகுதியுள்ளதாகச் செய்யும்பொருட்டு தற்செய லாக வந்து சேரும். உன் மூளையின் கூண்டுகளிலும் உன் நரம்புக்கட்டுகளிலும், உன்னுடையஜீரண முறை, கசிவு முறை முதலியவைகளிலும் ஏராளமான மாற்றங் கள் அவசியமாகும். இம் மாற்றங்கள் சரீரத்தில் ஒரு விதமான தொந்திரவையும் உண்டாக்காது ஏற்படாது மேலும் வேண்டிய அளவிற்கே தொந்திரவு ஏற்படும்—அளவிற்கு மீறி உண்டாகாது. தேகத்தின் மீது எவ் விதமான ஹிம்சை அல்லது தீங்கை நீயாக வலுவில் இழைக்காதே. மருந்து 'உபயோகிக்க வேண்டியிருந் தால்', பரிசுத்தமான, கலப்பற்ற மருந்தைத் தேடி அதை சொற்பமாக உபயோகி; எல்லாவற்றைக் காட்டி லும் பயத்தையும் கவலையையும் தொலை. ஈஸ்வரனைக் காட்டிலும் நீ உன்னைப் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ள முடியாது. உன்னுடைய பொறுப்பு அறிவற் றது. ஈஸ்வரனுடைய கண்காணிப்பில் ஞான நிறைவு உண்டு; அவன் சரியான முடிவிற்காகச் சரியான உபா யத்தை உபயோகிக்க வல்லான்.

நோய், வலி; சூட்டினாலும் குளிரினாலும் உண்டாகும் துன்பங்கள், மல மூத்திராதிக் கழிவு முறைகளின் கட்டாயங்கள் முதலியவைகள் தேகத்திலுள்ள அசுத்தியின் தோற்றங்களாகும். நோய் ஏற்படுவதற்கான சகல நாட்டங்களும் அற்றிருப்பதே காயவித்திக்கு முதற் குறி; சூடு, குளிர், முதலியவற்றின் துவந்தத்திலிருந்து விடுபெறலே அதன் இரண்டாங்குறி துவந்தத்திலிருந்து ஒரு வேளை அடியோடு விடுபெறலாம், இல்லாவிடின் அவைகளை அநேக தடவைகளில் இனிய உணர்ச்சிகளாக மாற்றிவிடலாம்—இவைகள் பல் சமயங்களில் மின்சாரக் காட்சி அநுபவ ரூபமாக வெளிப்படும் மலமூத்திராதிக் கழிவுகள் குறைபடும் அல்லது அற்றுவிடும்—இது காய வித்தியின் மூன்றாங்குறி. வலியைக்கூட உடலினின்று அடியோடு நீக்கிவிடலாம். நோயைத் தொலைப்பதற்கு முன்னதாகவே அல்லது நோயைத் தொலையாமலேயே நோயினாலுண்டாகும் துன்பத்தை நீக்கிவிடவுங் கூடும். நீக்கிய பிறகு அவ்விடத்து ஒரு விதமாக சாரீரிகஆனந்தத்தை நிலை நாட்டலாம். கடைசியாகப்பிராண சரீரத்திற்குச் சொந்தமான பசி, தாகம் முதலியவைகளிலுள்ள நாட்டத்தைக் குறைத்து அல்லது அடியோடு களைந்து விடலாம். இதனால் உணவின் மீதுள்ள அடிமைப்பற்று குறைபடும் அல்லது அறவே நீங்கிவிடும். இவை யனைத்திலும் வித்தியை அடைவதே காயவித்திக்கு அனிவாரமாம் ஆனால் பூரண காயவித்தி என்பதில் மஹிமா, லகிமா, அணிமா.உடலின் அழிவின்மை சிதைவின்மை முதலிய பல வித்திகளும் அடங்கும்—இக்கலியுகத்தில் யோகப் பயிற்சியில் முதிர்ந்து, உயர் வளர்ச்சியை அடைந்த ஒரு சில வித்தர்களே மேற்சொல்லிய வித்திகளை பெற்றுள்ளார்கள். இவர்கள் சாதாரணமான பிராண, அபான, வியான, ஸமான, உதான எனும் ஐம்முறைகளையும் வைத்புதம் நிறைந்த மூலப் பிராண சக்தியினால் நடத்திக் கொள்ளுகிறார்கள்.

இவைகளனைத்தும் தாந்திரிக யோகப் பயிற்சியின் முக்கிய அம்சங்களாகும்; இவைகள் என் துறையினின்று விலகியவைகளானதால், இவைகளைக் குறித்து சுருக்கமாகவும் சாவையாகவும் சொல்லியுள்ளேன். அந்தக்காண வித்தியில் முழுமையை அடைவோமாகில், ஏனையவைகளை விருத்தி செய்து கொள்ளலாம். ஆகவே இதன் மீது உனது கவனத்தையும் கருத்தையும் சக்தியையும் ஊன்றி ஊக்கத்துடன் செலவிடுவாயாக. இது கிடைத்தவுடன் மற்றதனைத்தும் உனக்குக் கிடைக்கும். இப்பொழுது, மனிதனுடைய சகல செய்கைகளுக்கும் புத்தியும், இதயமும், மனதுமே சக்கரங்களாகவுள்ளன; தேகம் வெகு முக்கியமானதாகிய போதிலும் அது மேற்சொன்னவைகளைச் சார்ந்ததும், மேற்சொல்லியவைகளுக்குக் கீழ்ப்பட்டதுமே யாகும். அதை முன்னிட்டு, அதை வெறுப்பது கூடாது; ஆனால் வெகு ஜனங்கள் அதற்கு, தகாத அவ்வளவு அதிக ஸ்தானத்தைத் தருகிறார்கள். ஜீவன் அந்தக் காணத்தில் ஈஸ்வர ஸ்தானத்தை அடைந்தவுடன், தேகம் அதனுடைய யதாஸ்தானத்தைப் பெறும்; மேலும் அந்தக் காணத்தையும் உறுதியையும் அடக்கி ஆள்வதற்குப் பதிலாக அவைகளிடமிருந்து தேகம் கட்டளையைப் பெற்று அதன் வழி நடக்கும். ஐரோப்பியர்கள் அந்தக்காணத்திற்கு ஜடம் அதிபதி என்னும் கருத்துக்கொண்டவர்கள். நீ அதற்கு நேர் எதிரான கருத்தில் விடா நம்பிக்கை கொள், உடல் அகத்தின் மீது தனது நிபந்தனைகளை வற்புறுத்துவதானது மனிதனுடைய இயற்கைக்கு விரோதமான நிலையைக் குறிக்கும் என்பதை எப்பொழுதும் நினைவில் வை. ஐரோப்பியக் கொள்கையினின்று விடுபடு. அகமே உடலை அடக்கி ஆளல் வேண்டும் என்னும் உண்மையைக் கடைப்பிடி.

## முடிவுரை

நான் சொல்லவேண்டியதைச் சொல்லியாய்விட்டது. கடைசியாக ஒரு வார்த்தை சொல்லி முடித்துவிடுகிறேன். உன்னைக் குறித்துத் தெரிய வேண்டிய தனைத்தும் அல்லது யோகத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் நான் இதுவரைச் சொல்லியதில் அடங்கிவிட்டதென நீ நினைத்துவிடக்கூடாது. இவைகள் ஒரு குறித்த வளர்ச்சி நிலையில் அவசியமாகவிருக்கும் சில இங்கிதங்களேயாம்; யோகத்தின் முதற் பகுதியாகிய தூய்மைப் பேற்றிற்கு இவைகள் முக்கியமாக இன்றியமையாதவை. சுத்திநிலை பூரணமானவுடன் முக்தி நிலையில் முழுமையை அடைந்தாக வேண்டும்.

சுத்தி நிலைக்குப் பிறகு முக்தி நிலை அடைதல் எளிது. அதற்கு முன்னதாக முடியாத காரியம். முக்தி என்றால் லயமன்று; லயம் தேடியடைய வேண்டிய பொருளல்ல; ஈசன் அதை எப்பொழுது தருகிறாரோ அப்பொழுது அதை மறுக்காது பெற வேண்டும். ஆனால் அக்ஞானத்திலிருந்து முக்தியையும், அகங்காரத்தினின்றும் இருமைகளினின்றும் விடுதலையையும் தேடி அடைய வேண்டும். நமக்கிடத்துத் தூய்மை வளர,வளர இயற்கையாகவே விடுதலையையும் அதற்கடுத்த நிலைகளும்—அதாவது புக்தி ஸித்தி முதலியன—தானாக நம்மிடம் உண்டாகும். நீ முன் செல்லச் செல்ல,உன்னுடைய நோக்க நிலையை மாற்றவேண்டியிருக்கும்—அனைத்தையும் ஒரே வழியாக மாற்றிவிடவேண்டியிராது, முதலில் சில விஷயங்களில் சில்லரை மாற்றங்கள் அவசியமாகும். இவ் விஷயத்தில் நான் உன் பொருட்டு இப்பொழுது தலையிடுவதாகவில்லை. ஒரு விஷயத்தை ஒரு சமயத்தில் செவ்வனே திருந்தச் செய்தலன்று.

நான் எழுதிய வினைத்திலும் உன்னுடைய பழக்கத்திற்குள் வந்திராத ஒரு நோக்கத்தை எடுத்துக்காட்டியுள்ளேன். எல்லா ஞானத்திற்கும் வைராக்கியமே ஆரம்பமென நினைப்பாயே யாகில் எனக்கும் உனக்கும் ஒத்து வராது. வைராக்கியம், உபயோகத்திற்குரிய மனதின் நிலை—சிறிது காலமே பிரயோஜனப்படக் கூடியது. பழைய ஸம்ஸ்காரங்கள் எதனெதன் மீது விடாப்பற்று கொண்டுள்ளனவோ அவைகளை ஈஸ்வரன் வைராக்கிய மூலம் நீக்குகிறார், அவைகளைக் கேவலம் அப்பியாசத்தினாலேயே நிலை பெயரச் செய்துவிடலாம். சுத்திக்கும் முக்திக்கும் ஞானம் பிரதானம். அந்தக்கரணம் அமைதியைப் பெற்று ஞானத்தைத் தன்னுள் அதன்படி நடக்க விடுகிறவரை ஞானத்திற்கு அப்யாஸம் அல்லது வைராக்கியம் துணை புரிந்தாக வேண்டும். அந்தக் கரணம் அமைதியைப் பெற்றவுடன்—அதாவது தன் பழைய ஸம்ஸ்காரங்களின் துணிபைச்சிறிதும் ஏற்காதவரை—ஞானம் வளரும், சக்தியும் தன் காரியத்தைத் தடைபடாது செய்வன்; அப்பொழுது உனக்கு ஸாதனை என்பதே வேண்டியதில்லை; வித்திக்கப்படும் வித்தியாக எவ்வளவையான நிர்ணயித்த மார்க்கமுமின்றி, பெருகி வளரும் இயற்கையான இயல் வழியினால், ஒருவன் நடப்பது போலும் மூச்சு விடுவது போலும் அவ்வளவு சுலபமாக உண்டாகும். அப்பொழுது வைராக்கியமும் அப்யாஸமும் இன்றியமையாதவைகளாக இரா. வைராக்கியத்தின் மீதுள்ள பற்று லோபத்தின் மீதுள்ள பற்றினால் எவ்வளவு கெடுதி உண்டாகுமோ அவ்வளவு கெடுதியைச் செய்து தரும்.

பௌத்தர்களைப் போல் வாழ்க்கை முற்றும் துயரெனவும், அவிந்தழிந்து மறைவதே பரமோத்தமமானதென்றும் நீ நினைப்பாயேயாகில், உனக்கு என்னிடம் வரவேண்டிய அவசியமிராது; அல்லது மாயவாதிகளைப் போல் "இவ் வுலகைவிட்டு எவ்வளவு சீக்கிரம் போக முடியுமோ அதற்காகவே இங்கு வந்துள்ளோம்"—அதாவது ஒரு புகழ்வாய்ந்த தளகர்த்தன் ஒரு மலையின் உச்சியினின்று திரும்பி வருவதற்காகவே அதன் உச்சிவரை ஏறியதைத் தன்னுடைய பெரு வீரச் செயலாக நினைத்ததுபோல்—எனக் கருதுவையேல், நீ என்னை விட்டு வேறு எங்காவது போகலாம். நான் தாந்திரிக மார்க்கத்தைப் பின்பற்றுபவன். ஆனந்தத்தில் பிறந்து ஆனந்தத்தில் வாழ்ந்து, ஆனந்தத்திலிருந்து, ஆனந்தத்திற்கு சுழல்வது இச் சகம். ஆனந்தமும், சக்தியும் இருக்கையின் இரு முக்கிய அம்சங்கள். துயரும், வன்மைக்குறைவும் அக்ஞானத்திற் பிறந்த விகாரங்கள்—நமது நிஜஸ்வரூப மறதியினால் உண்டானவை. இவ்விரண்டும் சாசுவதப் பொருள்களல்ல, எங்கும் பரவியதல்ல. கலியுகத்தில் மட்டிலும் உண்டாவதால், துயரும் வன்மைக் குறைவும் அசாசுவதமானவை; இவ் வுலகின் கண் மட்டும் ஏற்படுவதால் எங்கும்பரவாதவை. நமக்காகவும்,ஜன சமூகத்தின்பொருட்டும்ஸ்வர்க்கத்தை இப் புவி மீது காட்டி, வாழ்க்கையினின்று துயரையும், வலியற்ற தன்மையையும் நீக்குவது நமது நோக்கமாக இருக்க வேண்டும். இவ் வுலகம் துயர் நிறைந்தது; நமக்கு இங்கு வேலை ஒன்றுங் கிடையாது; இதனின்று முக்தியை அடைவதே இன்பத்திற்கும் விடுதலைக்குமாக ஏற்பட்ட ஒரே வழி என்று முழங்கும் தத்துவத்துடன் எனக்குச் சம்பந்தம் கிடையாது. ஈஸ்

வான் தன் மட்டிலும் சுக புருஷன்; அவனுடைய தோற்றமாகிய இச்சகம் துன்பத்திற்குரியது என்று சொல்லுவது வீண் வாதம்; கண் மூடித்தனம்; அக்ஞானகரமானது. அசுபகரமான கனவுகள் காணும் ஒரு மூடன் அல்லது குடியனைப் பிரமனை என்றால் எண்ண முடியாது; அவன் துன்பக் கனவுகள் காண்பவனல்ல. வேதத்தில் நான் இதைக் காணவில்லை. என்னுடைய அனுபவங்களோடு இது ஒவ்வவில்லை; என்னுடைய நுகர்ச்சிகள் நிஷ்காம கர்மங்களிடை ஏற்பட்ட அழிவுறா ஆனந்தமும் ஞானமுமாகும். மகா பாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணன், "சிலர் கர்மத்தை இவ் வுலகில் பிரவசனஞ் செய்கிறார்கள்; மற்றுஞ் சிலர் அகர்மத்தை பிரவசனஞ் செய்கிறார்கள்; அகர்மத்தைப் பிரவசனஞ் செய்கிற அசக்தர்களின் எண்ணத்தை உடையவனல்ல நான்"—(நாமே மதம் தஸ்ய தூர்பலஸ்ய) என்று சொல்லியுள்ளார். என் கருத்தும் இவ்வாறே.

ஆனால் அவர் உதாரணமாகக் காட்டும் கருமமானது மகத்தான தேவர்களின் கருமம்—கெத்தே (Goethe) சொல்லுவது போல் இயற்கைச் சக்திகள் இழைக்கும் கருமம், அதாவது பற்றற்ற, தவறா இன்பக்களியில் கோட்டமற வான்றப்பட்ட. ஸாத்விக அகங்காரத்தினால் கூடக் கட்டுப்படாத கருமம். வேற்றுமையில் புருஷோத்தமனுடன் ஒன்றாகச் செய்யப்பட்ட என்னுடைய ஸத் பொருள் அவனுடையதில் உள்ளது; அவனுடைய அனந்த சக்தியாகிற காளியின் ஒரு பிரத்தியேக சலனமே என்னுடைய சக்தியாகும். நான் ஞானமற்றவனல்ல; நான் கட்டுப்பட்டவனல்ல; என்னிடம் துயர் கிடையாது: அக்ஞானமாயிருப்பது போல் இருந்து விளையாடுகிறேன்; கட்டுண்டவன் போல் நடிக்கிறேன்; நாடகப் பாத்திரர்களைப் போலவும் அல்லது ஒரு நாடகத்தைப் பார்க்கும் கோஷ்டியைப் போலவும் துயரின் ரஸத்தை மாத்திரம் அருந்துகிறேன். எனக்கு இஷ்டமானபோது அதை என்னால் எறிந்துவிட முடியும். நானா பாபி? மண்மீது ஊர்கிற புழுக்களில் ஒன்றா நான். நான் ப்ரஹ்மன், நான் ஈஸ்வரன்; என்னைப் பாபம் தீண்டாது. என்னை பலகீனன் என்று எவரால் சொல்ல முடியும்? சர்வ சக்திமானும் நானும் ஒன்று. ஒன்றாகிய அவர் பலவாகி திகழ்கிறார். அனந்தமாகியபடியால், அவர் சகல விடங்களிலும் நிலவுகிறார்; ஒவ்வொரு இடத்திலும் அவர் அனந்த மூர்த்தி. இதுவே இருக்கையின் உத்தம இரகசியம், ஈஸ்வரனுடைய மகத்தான வியப்பைத் தரும், இன்ப இரகசியம்—தர்க்கம் அதை எட்டாது, ஞானம் அதைப் பற்றும்—அது அநுபவப் பொருள், பரிசுத்தமான, விடுதலை பெற்ற, ஆனந்தத்தில் திகழும் முழு ஸித்தி பெற்ற ஆத்மாவாலேயே அதை நுகர முடியும்.

## பதிப்பாசிரியருரை.

கடைசியாக இன்னம் சில வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கிறது. யோகஸாதனத்தை எழுதியவர் அதை மிகச் சுருக்கமாக வரைந்துள்ளார். அதனால் அதைப் படிக்கும்பொழுது சில தப்பான எண்ணங்கள் ஏற்படுவது சகஜம்; மேலும் சிலமுக்கிய விஷயங்களைத் தான் சொல்ல வந்த விஷயத்தின் எல்லைக்கு புறம்பேயுள்ளதெனக் கருதி, சொல்லாது விடுத்துள்ளார்.

உறுதி அல்லது தபஸ் சக்தியை உத்தம வகையில் கையாடும்பொழுது, சேஷ்டை விலக்கப்பட வேண்டுமென்று சொல்லி யிருக்கிறது. ஆனால் இது காமவிலக்கைக் குறிக்காது. இந்த சேஷ்டை என்பது அகச் சேஷ்டை; புறச் சேஷ்டை யல்ல; அதாவது "ஆரம்பம்;" கர்மமல்ல. கர்மத்தை ஆதாரமாகக் காட்டி, ஆரம்பங்களை நீக்கச் சொல்லி முறையிடுங்கால் கண்ணபிரான் மேற்சொல்லிய இரண்டின் வேற்றுமையையும் நன்கு விரிக்கிறார்—"ஸர்வாரம்பான் பரித்யஜ்ய" என்பன அவர் திருமொழிகள். நாம் செயல் புரியவேண்டும்—உடலாலும், மனதாலும், புத்தியினாலும், இந்திரியங்களாலும், அதுவும் "அதனதன் விதித்த செயலை கேவலம் விருப்பமற்று, செயலின் வெற்றி தோல்விகளின் பொருட்டு உறுதியை வருத்தாது செயல் புரிய வேண்டும். வாழ்க்கையின் முக்கிய காரியங்களில் தனது உயர்தர உறுதி ஒருவாறு பயிற்சிப் பழக்கத்தை அடைகிறவரை, ஸாதகன் உறுதியை பிரயோகஞ் செய்தல் கூடாது; ஒருவாறு பழக்கம் ஏற்பட்டபொழுது கூட முதலில் சிறு விஷயங்களிலும், பிறகு பெரு விஷயங்களிலுமாக பிரயோகமாதல் நன்று. யோகம் பயிலுங் காலத்தில் ஸாதகனுடைய நாட்டம் அகவளர்ச்சியில் இருக்க வேண்டும்; சிறிதோ, பெரிதோ, அகில நிகழ்ச்

சிகளை இவனுக்குப் பயிர்ச்சிக்கும் சோதனைக்கும் ஆதாரமாக இருத்தல் வேண்டும்.

இதுவரை சொல்லப்பட்ட உபதேச உரைகளில் சொல்லவேண்டிய தனைத்தும் சொல்லப்பட்டாய்விட்டதென்றாவது அல்லது இனி சொல்லவேண்டியதற்கு ஒன்றுமில்லையென்றாவது அல்லது விரிவாய் சொல்லப்பட்ட இடங்களில் சாதகன் தெரிந்துகொள்ள வேண்டியவெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறதென்றாவது நினைத்துவிடக்கூடாது. சில பிரதான கருத்துக்களே சாதகர்களுக்குப் பிரயோஜனப்படும் வண்ணம் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் படியேறினவர்கள் இவைகள் எவ்வளவு சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன வென்பதையும், இவைகள் சுட்டிக்காட்டும் முடிவாகிய ஞானத்தை அடைவதற்கு முன் இவைகள் எவ்வளவு தூரத்திற்கு மாற்றத்தையும், விரிவையும் அடையவேண்டுமென்பதையும் அறிவார்கள்.

கடைசியாக, இங்கு கூறப்பட்டுள்ள யோகத்தின் நோக்கமானது ஒவ்வொரு ஜீவனின் தனி உறுதியும் அதனதன்படி போகவேண்டுமென்பதல்ல; ஒவ்வொரு ஜீவனின் தனி உறுதியும் அனந்தப்பொருளாகிய பகவானின் ஆணைக்குள் அடங்கி அவன் விட்ட வழியே சிறிதும் உளங்கோணாது முட்டமுடிய நடந்தாக வேண்டுமென்பதே அதன் நோக்கமாம். முதலாவது இசையும் விருப்பங்களையும் தூண்டல்களையும் வணங்காத இறுமாப்பையும் செருக்கையும் அகங்காரத்தையும் வீண் கற்பனையையும் தனக்கு எல்லாந்தெரியும் என்கிற புத்தியையும் முழுமையைப் பெறுதற்கும் மனிதனுடைய ஆத்மசமர்ப்பணத்திற்கு இடையூறிழைக்கா வண்ணம் அடக்கியாகவேண்டும்; இரண்டாவது, பரம்பொருளுக்கு வேள்வியிடும்பொருட்டு, வலுவற்ற, நிலைபடா தலைகிற, அறிவற்ற, துணிவற்ற உறுதியின் ஸ்தானத்தில் வன்மையும், மகத்துவமும், செயலாற்றலும் சித்தியும் ததும்புகிற பேருறுதியை தேடிப் பெறல்வேண்டும். சித்தி பெற்ற ஒருயோகியின் கர்மமானது சூரிய சந்திராதிகளின் கருமங்களைப்போலவும் அல்லது மலை வீழ்மம் சூறாவளி முதலியவற்றின் இயக்கங்கள்போலவும், அதுவுமில்லையேல் தென்றல், நிலவு புஷ்பம் முதலியவைகளின் தன்மை போலவும்— சாந்தம் ஒளி முதலியன நிறைந்தாவது அல்லது பலம், உக்ரம் வேகம் நிறைந்தாவது எதைச் செய்தபோதிலும் பராசக்தியின் ஆதேசத்தினால் தூண்டப்பட்டு அவளால் முற்றிலுமாசையப்பட்டு, வெளிக்கு எவ்வண்ணம் தோன்றிய போதிலும் எப்பொழுதும் பரிபூரணசாந்தி, ஆத்மஸமர்ப்பணம் தன்னறிவு முதலியவைகளின் மீது ஊன்றி ஊறி, உழல்வதே ஸித்தி பெற்ற யோகியின் கர்மத்திற்கு அடையாளம்.

# மஹரிஷி வ. வெ. சுப்பிரமணியம்

மஹரிஷி ஜயிலைவிட்டு வந்ததும் தான் எழுதிய கம்பன் ஆராய்ச்சித் திறத்தின் விவரங்களை நாமிருவரும் படித்துக் களிப்பதற்கின்றி நான் திருச்சியிலும் தாங்கள் காசியிலுமிருக்கிறோமே என்று எழுதியிருந்தார்.

## தமிழ்க்குருகுலஸ்தாபம்

உடனே தமிழ்க்குருகுல ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. அக் காலத்தில் நமது மஹரிஷியின் தனிமையில் அவரது விவேகமும் மூளையும் அன்றி வேறு உதவி இல்லாதிருந்தது குறிப்பிடத்தக்கது. மழை பெய்த பிறகே காடு பச்சைப் பசேலென்று தோன்றுகிறதேயன்றி அதற்கு முன்பு அன்று. இதுபோல் நமது மஹரிஷியின் அசகாய ஸ்தாபனமே பின் சம்பந்தப்படாத பலருடைய கீர்த்திக்குக் காரணமாக விருந்தது. இது ஆச்சரியப்படக் கூடியதன்று. இச் சமயத்

தில் மஹரிஷியின் களங்கமற்றதும் பொது நன்மையைக் கோரியதுமான விவேகத்தை நாம் எதிர்க்கவாவது மறுக்கவாவது முடியாது.

வேலியே பயிரை மேயத் தொடங்கியது. நமது மஹரிஷி இக் குருகுலம் 'தமிழர்களுக்கே சொத்தும், தமிழ் நாட்டிற்கே உரித்தான பாக்கியம், தமிழ் மொழிக்கே பீடம் என்று அங்குரார்ப்பணம் செய்துகொண்டு தனித் தமிழனாகவும் தமிழ்க்குருவாகவும் ஆரம்பித்தார். தமிழ்நாட்டை நான் வாழ வைப்பேனென்று கங்கணம் கட்டிக்கொண்டார். முற்காலத்தில் கீர்த்தி ததும்ப வளர்ந்த "நளாந்தா" சர்வ கலாசாலையையும், வென்றது என்ற நிலையில் இஸ்தாபனத்தைக் கொண்டுவரச் சத்தியம் செய்துகொண்டார். அவ்வாறு செய்வதற்கான தகுதியும் யோக்கியதையும், முயற்சியும், ஆசிரிய இலக்கணமும் நமது மஹரிஷியினிடம் இருக்கவில்லை என்று எந்தத் தமிழனேனும் மற்ற இந்தியனேனும் ஐரோப்பியனேனும் கையுயர்த்த முடியாது. அத்தகைய பெரியோர்க்கு ஆதியிலிருந்து உதவி செய்தவர்களில் பெரும்பாலோர் தனித்தமிழர்களேயாவார்கள். அவர்களின் உதவியாலேயே குருகுலம் பலப்பட்டது. இனியும் பலப்படப் போகிறது. என்றாலும் நாட்டின் துர்ப்பாக்கியத்தால் அத்தமிழர்களே தங்கள் தலையில் தாங்களே மண்ணையள்ளிப் போட்டுக்கொள்ளுவது போல் குருகுலத்தைக் கெடுக்கத் தொடங்கினார்கள். இச் செய்கை நமது மஹரிஷிக்குப் பெரும்புண்ணை யுண்டாக்கிவிட்டது. பலபேர் பலவிதம் கூறினும் மஹரிஷியின் மனப்புண் அவர் மறையுந்தனையும் ஆறாமலே யிருந்தது என்பதைக் குறிப்பிட நான் துணிந்துள்ளேன். இக் கருத்தை மஹரிஷி எமக் கெழுதியுள்ள அடியிற்கண்ட கடிதம் நன்கு விளக்குவதாகும். இக் கடிதத்தின் கருத்தை யறிந்தேனும் இனித் தமிழர்கள் அம் முனிவரின் ஆத்ம திருப்தியின் பொருட்டு இனிக் கலகம் செய்யாதிருப்பரேல் அதுவே விவேகமாகும். இன்றேல் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளட்டும்.

மஹரிஷியின் கடிதம் இது

எண்: ௧௩௫. சித்திரை, ௨. கலி ௫௦௨௭, சகம் ௧௮௪௮

ஸ்ரீமான் பா. ஆதிமூர்த்தி அவர்கள் பட்டுப் பீதாம்பரக் கம்பெனி, காசி. அநேக நமஸ்காரம். தங்கள் ௨௮—௩—௨௬. தேதியுள்ள கடிதங்கள் பார்த்தேன். 'மகாத்மா இருதலைக் கொள்ளி எறும்பு போல் அவஸ்தைப்படுவதைக்கண்டேன். நானும் வைதீகர்களுக்கும் அவர்களது எதிரிகளுக்கும் நடுவில் இருப்பதால் இருவருக்கும் நம்மிடத்தில் அபிமானமில்லை. ஆனால் தற்போது செல்ல வேண்டிய வழி இவ்விரு வகுப்பினருக்கும் இடையேதான் உளது.

இது விஷயமாக நான் சொல்லக் கூடியதெல்லாம் சொல்லியாகிவிட்டது. என் தலைமை ஸ்தானத்திலிருந்து நீங்கி பாரத்துவாஜ ஆசிரமத் தலைமையை வேறொருவரிடம் கொடுத்து இலக்கியத்துக்காகவும், அத்தியாத்ம வளர்ச்சிக்காகவும் என் நேரத்தைச் செலவு செய்வது உசிதமெனயோசித்துக்கொண்டிருக்கிறேன். முடிவு பகிரங்கப் படுத்தும்போது தெரியவரும். ஜாதீய ஒற்றுமையை உண்டாக்குவது எவ்வளவோ கடினம்—சிதைப்பது மிக மிக எளிது. அவ் வேலை ஸ்ரீ நாயுடுவால் துவக்கப் பட்டிருக்கிறது. தமிழ்நாடு தற்கொலை செய்துகொண்டு திரிகிறதே என்ற வருத்தமே என்னைப் பாதிக்கிறது. தமிழுக்காகவும் நாட்டுக்காகவும், சன்னியாசி போல் வாழ்ந்தும் என் மீது ஸ்ரீ நாயுடு போன்றோருக்கு இவ்வளவு கூடித்திரம் இருக்கும்போது மற்றோர் மீது எவ்வளவு இராது.

எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டிருக்கிற பாராசக்திக்கு எல்லாம் தெரியும். அவளது ஆதேசப்படி நடக்க முயன்று வருகிறேன். ஆதலால் எது வரினும் அச்சமில்லை. தமிழ் நாடு ஈடேறும் நாள் ஒதுங்குகிறது என்பதேதான் வருத்தம். சுகம் துக்கம்—இரண்டையும் கருதுவதுவிட்டு எனக்குச் சில நாட்களே ஆயின்வாதலால் என்னைப்பற்றி விசாரப்பட வேண்டாம்.

குருகோவிந்தன் தங்களுக்குப் புதிய யோசனையைக் கிளப்பியது என்று கேட்கச் சந்தோஷம். தற்காலம் அஹிம்ஸாயுகம் அவருடைய ஆவேசத்துடன் அஹிம்ஸையை அநுஷ்டிப்பதே நமது தர்மம் என்று தாங்கள் சொல்லுவதே சரி.

வ. வெ. சு. ஐயர்

## ரவீந்திரரும் சுப்பிரமணியமும்

ரவீந்தர நாதரை வங்காளம் அடைந்தது போலவே தென்னாடும் ஒரு ரவீந்திரரைப் பெற்றுவிட்டதென்று நாம் மகிழ்ந்திருந்தோம். ஆனால் அம் மகிழ்ச்சிக்குத் தமிழரின் அதிர்ஷ்டம் போதாது. இருவருக்கும் வேண்டிய பெருங் குணங்கள் இரண்டில் ரவீந்திரர் ஒன்றே பெற்றுள்ளார். ஆனால் ஐயரோ இரு குணங்களும் பெற்றிருந்தார். ரவீந்தரர் தன் கலைத் திறத்தைத் தன் பயிற்சியால் மட்டும் பெற்றார். ஐயரோ தன் கலைத் திறத்தை முறையான கல்வியாலும் பயிர்ச்சியாலும் ஆக இரு வகையிலும் பெற்றார். நமது ஐயர் ஜீவ தசையில் இருப்பாரானால் பிற்காலத்தில் ரவீந்தரரை வென்றேயிருப்பார், என்பதில் தடை சொல்ல முடியாது. ரவீந்தரருக்கு அதிகமாகஉள்ளசெல்வாக்குப் பணச்செளகரியம் ஒன்றேயாகும். ஆனால் ஐயரின் எதிர்காலம் அந் நிலைக்குக் கொண்டு வாரமற் போகமாட்டாது. பொது ஜன நம்பிக்கையும் பொது ஜன ஊழியமும் ஒன்றுக்கொன்று சங்கிலிக் கோர்வை போன்றதாகும். ஒன்றுயர மற்றதும் தானே உயரும். எனினும் ஐயரை இன்று இழந்து தவிக்கிறோம். தமிழ்நாடு தனது தவப் புதல்வனைப் பலி கொடுத்துவிட்டாள். இது ஒன்றே தமிழ் நாட்டிற்கும் பங்காளத்திற்கும் உள்ள வித்தியாசமாகும்.

## மஹரிஷியும் குருகுல எதிர்காலமும்

தமிழர்கள் தேசாபிமானிகளானல் தமிழர்களின் இரத்தத்தில் ஜீவரத்தமும் தேசாபிமானப் புழுக்களும் ஓடுவதுநிஜமானல்ஜாதிச்சண்டைகள் எப்படியிருப்பினும் அவைகளைப்பொருட்படுத்தாமல்ஒருவாறு சரிப்படுத்திக்கொண்டு நமது மஹரிஷியின் பெயரும் கலையும், கீர்த்தியும் நம்மைவிட்டு நீங்காதிருக்கும்வண்ணம் அம் மகானின் அழியாத ஞாபகச்சின்னமாக அந்தஸ்தாபனத்தைச் செய்ய வேண்டும். இதைத் தமிழர்கள் வேறொன்றிலும் செய்யமுடியாது. ஒருவருக் கொருவர் சிறிதுசிறிது விட்டுக்கொடுத்துச் சரிப்படுத்துவதாலேயே யாகவேண்டும். இதைச் சண்டைபிடிப்போரும் சண்டையைஎதிர்ப்போரும் அறிய வேண்டியது. இதுவேநமது ஐயருக்குச் செய்யும் ஞாபகச்சின்னமாகும்.

## ஒரு விண்ணப்பம்.

ஆகையால் தமிழ்ச்சகோதரர்களே தமிழ்ச் சகோதரிகளே மஹரிஷியின் நாமத்தை அம் மகானின் கீர்த்தியை அவரது தேசாபிமானத்தை நிலைநிறுத்துவதற்காக உங்களுக்குள்ள நற்புத்தியை இது சமயம் காட்டுங்கள். தமிழ்த்தாய் உங்களை ஆசிர்வதிக்கட்டும். தமிழ் நாடும் உலகமும் உங்களைப் புகழட்டும்.

# நோயற்ற வாழ்வு

———(o)———

திரு கி. லக்ஷ்மண சர்மா

உலகத்தார் இக்காலத்தில் வரம்பு மீறிய நாகரிகத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். நாகரிகம் வரவர நோய்களும், அபமிருத்யுவும், அதிகமாவது யாவருக்கும் நன்றாய்த் தெரிகிறது. ஆனால் அதைத் தடுத்துக்கொள்ள வகை மட்டில் தெரியாமல் தவிக்கிறோம். தெரிந்தால் சிலராவது கடைத்தேறலாம், என்பது நிச்சயம். குறைந்தது சிறுவர்களையாவது நல்வழியில் பழக்கிக் காக்கலாம்.

நாகரிகம் என்பது என்ன? ஒரு ஆங்கில நூலாசிரியர் நாகரிகத்தின் உட்கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதாவது, "மென்மேலும் பொருள்களை வேண்டுவதே நாகரிகம்," என்று அவர் சொல்லியது இயற்கையாயுள்ள நம் தேவைகளை மட்டில் தேடிக்கொண்டு, அத்துடன் திருப்தியாயிருப்பது நாகரிகமல்லாவம். செயற்கைத் தேவைகளை அதிகரித்துக்கொள்வதே நாகரிகமாம்.

நாகரிகம் என்பது ஓர் கொடிய நோய் என்றும், அது ஒவ்வொரு ஜாதியாரையும் வாட்டுகிறதென்றும், அதனின்றும் தப்புவதற்கே வகை தேட வேண்டுமென்றும் கருத்தடங்கிய ஒரு நூலை எட்வர்டு கர்ப்டேண்டர் என்ற ஒரு ஆங்கில ஞானி எழுதியிருக்கிறார். அந் நூலின் பெயர் "நாகரிகம், அதன் மூலமும், சிகிச்சையும்," என்று அமைக்கப்பட்டிருக்கிறது.

மனிதன் இயற்கையில் ஸத்சித் ஆநந்தம் எனப்படும் பரம்பொருளின் அம்சமே யொழிய, அழியும் தன்மையுள்ள உடல் அல்ல, என்பது நம் பூர்விக ஞானிகளின் முடிவு. உடையானது நம் மனதில் குடிகொண்டிருக்கும் அபிமானம் என்னும் பொய்யான அறிவினால், நம் உண்மையான ஆத்மாவாகத் தற்காலம் விளங்குகிறது. இதனால் நம் இயற்கையான தன்மை மறைபட்டு, உடலின் தன்மையே மேலிட்டு நிற்கிறது.

இயற்கைத் தன்மையானது எப்படிப்பட்டது? அதன் கடைசிப் பகுதியான ஆநந்தத்தை மட்டில் இங்கே கவனித்தால் போதும். ஆநந்தமாவது நாம் தேடாமல், நம்மிடம் இயல்பாய் நிற்கும் இன்பமே. அது உலக இன்பங்களைப் போல, ஒரு பொருள் கிடைப்பதாலாவது, அப்பொருளுடன் நம் உடல் நெருங்குவதாலாவது ஏற்படும் இன்பமல்ல. அப்படி, ஒரு பொருளின் சேர்க்கையுமின்றி இன்பம் ஏற்படுமா? என்று நாம் ஐயமுறலாம். இதற்கு இரண்டுவகை சாக்ஷிகள் இருக்கிறார்கள். முதலாவது நோயற்ற சிறு குழந்தைகள், இரண்டாவது ஜீவன் முக்தர்கள் எனப்படும் விஞ்ஞானிகள்.

இளங்குழந்தைகளின் தன்மையே ஆநந்தம். அவர்கள் வெளிப் பார்வைக்கு மட்டில் சிசுக்களாயிருக்கிறார்களே யொழிய, உண்மையில் அவர் திவ்வியத் தன்மை வாய்ந்த தேவர்கள் என்றே சொல்லவேண்டும். இத் தன்மை எல்லாச்சிசுக்களிடமும் ஒரே மாதிரியா யிருக்காது. ஆனாலும் செயற்கை இன்பங்கள் ஒன்றுமே நேர்படாத போதும் கூட, ஏதோ ஒரு சுயமான இன்பத்தைப் புசித்துக்கொண்டு இருப்பது பொதுவாய்ச் சிசுவின் தன்மை. இதனால் சிசுக்

களை நாம் எடுத்து முத்தமிட்டு, நாமும் ஆநந்தம் பெறுகிறோம்.

சிசுக்கள் பலவிதப் பொருள்களில் ஆசையும் பற்றுதலும் ஏற்படாத நிலையில் இருக்கிறார்கள். ஆசை வளர வளர, சிசுவின் ஆநந்த சுபாவமும் குறைந்துகொண்டே வரும்.

இனி ஜீவன் முக்தரைக் கவனிப்போம். இவர்கள் அஞ்ஞானத்தையும், அதன் கிளைகளான ஆசைகளையும்அழித்தவர். இக் காலத்தில் இவ்வகை மனிதர்களைக் காணுவது அரிதிலும் அரிது. கண்டாலும் அவர் பெருமையை அறிதல் மிகவும் அரிதே. ஜீவன் முக்தர் சிசுக்களைப் போலவும், பித்தர்களைப்போலவும், இருப்பார்கள் என்பது பழமொழி. அவர்கள் தம் இயற்கைத் தன்மையைத் திரும்பவும் பெற்றவர் என்பது மட்டில்தான் நம்மால் கூற முடியும். இவ் வியற்கையில் ஆநந்தமும் அடக்கமாகையால் அவர்கள் ஆநந்த சொரூபிகளா யிருப்பார்கள்.

இதே ஆநந்த சொரூபமானது ஸகலப் பிராணிகளுக்கும் உரியது. ஆனால் அது அஞ்ஞானத்தினால் வளரும் பல கோடி ஆசைகளால் மூடப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் உண்மையில் நித்யாநந்திகளாகிய நம் உலகத்தில் நித்ய துக்கிகளாகக் காலம் கழிக்கிறோம். ஆசை யென்னும் நோய் நம்மை எண்ணிறந்த காலமாக வாட்டி வருகிறது. இந் நோயினின்றுமே ஸகல துன்பங்களும் நமக்கு உண்டாகின்றன. நோய்கள் என்று நாம் கூறும் துன்பங்களும் ஆசை யென்ற மூல நோயினின்றுமே தான் உண்டாகின்றன.

"ஆசாயா: பரமம் துக்கம்
நிராசா பரமம் ஸுகம்"

என்பது பெரியோர் முடிவு. ஆசையுள்ளமட்டில் துக்கம் நம்மை விடாது; ஆசையினின்றும் விடுபட்டிருப்பதே உண்மையான, சாசுவதமான இன்பம். இதுவே ஞானம் எனப்படும்.

ஆகையால் நாகரிகமானது நம் சுயமான ஆநந்தத் தன்மைக்கு எதிரியான மூலபாவம் என்று சொல்லலாம். நாகரிகத்தினாலேயே நாம் பல விதசெயற்கை இன்பங்களைத் தேடிக்கொள்கிறோம். நாகரிகத்தை விட்டு, இயற்கை வாழ்வில் நாம் ஈடு படுவோமானால் நம்முடைய கஷ்டங்களில் பெரும்பான்மையும் நசித்துப் போகும்,என்பதில் ஸந்தேகமில்லை. இயற்கை வாழ்வானது நோயற்ற வாழ்வுக்கு மூலம் பல கோடி வைத்தியர்களாலும், மருந்துகளாலும் நோயற்ற வாழ்வு நமக்குக் கிடைக்காது, என்று அறிஞர் யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

நாகரிகத்தினால் மனிதர் சோம்பேறித்தனம் பெற்று, தாம் வருந்தித் தேடாமல், பிறரைக் கொண்டு பெரு நிதிகளைச் சேர்த்து, பிரயாசையின்றிச் சுகமாயிருக்க முயலுகிறார்கள். ஆனால் ஈசன் நம்மை உழைக்கும் திறமையுடனேயே படைத்திருக்கிறார். பலவித வேலைகளைச் செய்வதே நமக்கு ஒரு இன்பமாக இருக்கிறது. அறிவின்மையினால் மட்டுமே உழைப்பது கஷ்டமாகவும் சோம்பேறித்தனமே சுகமாகவும் நமக்குத் தோன்றுகிறது. உண்மையில் கர்மம், தொழில், என்பது பிரம்மத்தினின்றுமே உண்டானது. அதை வெறுத்தல் பாவம்.

சுகம் என்பது நமக்குப் பலவிதப் பொருள்களால் உணவு முதலியவற்றால், உண்டாகி உடலுக்குடன் நசிக்கும் தன்மையுள்ளது. ஆகையால் நாம் இயற்கையான ஆநந்தத்தைக் கைவிடாமல், அதுவே நம் அழியா நிதியாயிருக்க உலகத்துச்சுகங்களைக் குறைவாக வைத்துக்கொள்ள வேண்டும். ஆநந்தத்திலேயே வாழ வேண்டும்,

சுகங்களை முற்றிலும் நசிக்கவேண்டாமா? என்று சந்தேகம் வரலாம். இதற்கு முடிவான மறுமொழியை இதோ விவரிக்கிறேன்.

ஒரு தொழிற்சாலையில் ஏதோ ஒரு பொருளை உண்டாக்குகிறார்கள். ஆனால் அத் தொழிலின் வகையினால் இடையே அநேகம் வேறு பொருள்களும் உண்டாகின்றன. இவற்றையும் தொழிற்சாலையின் முதலாளியானவன் வீணாக்காமல் சேர்த்துவைத்துப் பயன் படுத்துவான். ஆனால் தொழிலின் முக்கிய நோக்கமாயுள்ளது, இவ்விடைப் பொருள்களல்ல. இந்த உவமையைக்கொண்டு நாம் இவ்வுலக இன்பங்களின் தகுதியையும், அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளும் வரம்பையும் கண்டுகொள்ள வேண்டும். உலக வாழ்க்கையில் நாம் இடையிடையே பெறும் சிற்றின்பங்கள் நம் முக்கிய நோக்கமாகா. நம் இயல்பான ஆநந்தத்தன்மையைத் திரும்பப் பெறுவதே நம் முக்கிய நோக்கமாகும். அதற்காக நாம் இயற்கை வாழ்வைக் கடைப் பிடித்து, அதன் வழியே தேகம், மனம், இரண்டையும் நற்கருவிகளாக அமைத்துக்கொண்டு, உண்மைப் பொருளை விசாரித்து, அதைப் பெறுவதற்கான, ஆத்மார்த்தமான ஸாதனங்களைக் கையாண்டு வித்தியடைவதே நம் நோக்கமாக வேண்டும்.

இயற்கை வாழ்வானது இன்பமே இல்லாத, கேவலக் கஷ்ட வாழ்வு, என்று நாகரிகத்தோர் நினைக்கிறார்கள். அப்படிக்கல்ல; இவ் வாழ்வில் வரும் இன்பங்கள் மற்ற இன்பங்களைவிட மேலானவைகளே. இவ் வின்பங்களை நாம் அப்போதைக்கப்போது திருப்தியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் இவற்றையே கருத்தாகக்கொண்டு, இயற்கை வாழ்க்கையின் வரம்புகளை மீற நாம் ஏற்படக்கூடாது. இவ்வளவு தான் நமக்கு அவசியமான தியாகம்.

இயற்கை வாழ்வானது மனிதனுக்கு என்ன செய்யும், என்று பதில் நமக்குள் அநேகருக்கு ஸந்தேகம் உண்டு. இவ் வாழ்வின் மகிமையை வர்ணிக்க ஆதிசேஷனாலும் முடியாது. சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

நோயற்ற வாழ்வு, என்பது நோய்கள் இல்லாமலிருத்தல் மட்டுமல்ல. நோயற்ற வாழ்வென்பது மனிதனுடைய பூர்ணநிலை என்று சொல்லலாம். அறிவு, சக்தி, இரண்டும் நிறைந்து நிற்கும் நிலையே உண்மையான நோயற்ற வாழ்வு. பிரம்மச்சர்யம் முதல் துறவறம் வரை, நாலு ஆசிரமங்களிலும் மனிதர் ஸாதித்துக்கொள்ள வேண்டிய பிறவிப் பயன்களுக்கு இன்றியமையாத எல்லா அறிவும், குணங்களும், திறமைகளும் நிறைந்திருப்பதே பூர்ணநிலை. இது மனிதர் விரும்பத்தகுந்த நிலை, என்று சொல்லவும் வேண்டுமா?

இயற்கை வாழ்வில் சுவை முதலிய நம் புலன்களைப் பற்றிய ஒழுங்கே முக்கியமானது. இவ் வெல்லாப் புலன்களிலும் சுவையே முக்கியமானது. சுவைப் புலன் ஒன்றே முதலில் கெட்டுப்போய், மற்ற புலன்கள் கெடுவதற்குக் காரணமாகிறது. சுவையெனும் புலனை நாம் வென்று விட்டால் எல்லாப் புலன்களும் நம் வசமாகிவிடும் என்பது பெரியோர்களின் முடிவு. ஆகையால் இயற்கை வாழ்வின் முதற் பகுதியானது உணவைப் பற்றியதே. இதன் நியமங்களை யாவரும் அறிந்துகொள்ளும் பொருட்டு, மருந்தில்லா வைத்தியம் என்னும் நூலில் உணவைப் பற்றிய எல்லா விவரங்களையும் முதற் பாகத்தில் விவரித்திருக்கிறேன். அவற்றின் ஒரு பாகத்தை மட்டில் பூர்ண சக்தி என்னும் நூலில் விளக்கியிருக்கிறேன். இவை புதுச்சேரி இயற்கை இல்லத்தினின்றும் கிடைக்கும். விலை முறையே ரூ க—க௨. அணா ௬. 'பூர்ண சக்தி'யில் இயற்கை வாழ்விற்கும் நாம் திரும்புவதில் அதிக உதவி செய்ததான

உபவாஸம் என்னும் முறையைப் பற்றிய ஒரு பகுதி சேர்த்து அச்சிட்டிருக்கிறது.

இனி அப்போதைக்கப்போது இந் நூல்களில் சுருக்கமாய்ச் சொல்லிவிட்டிருக்கும் சில விஷயங்களை இப்பத்திரிக்கையில் விவரித் தெழுதலாம், என்று எண்ணுகிறேன். பத்திராசிரியர் அவர்களுக்கு மனமிருந்தால் இயற்கை வாழ்க்கை, மருந்தில்லா வைத்தியம், என்பனவற்றைப் பற்றிய கேள்விகளுக்கு உத்தரவாதம் கொடுக்கலாம், என்று உத்தேசிக்கிறேன், கேள்விகள், மேற் கண்ட நூல்களைப்படித்து அவற்றினால் எழும் கேள்விகளாக இருக்கவேண்டும். அல்லது அந் நூல்களில் சொல்லாமல் விடப்பட்டிருக்கும் பொருளைப்பற்றி யிருக்கவேண்டும். இதற்காக இயற்கை வைத்திய வினாவிடைப்பகுதி பத்திரிகையில் ஏற்படுத்த பத்திராசிரியரை வேண்டுகிறேன்.

# பைந்தமிழ்ச் சோலை

(திரு சுந்தானந்த பாரதியார்)

பதினெண் கீழ்க்கணக்கின் அறச்சுவையால் தூய்மையுற்று ஐம்பெருங்காப்பியச் சாலைக்கு வந்தேன். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்ற ஐந்து கற்பக மரங்களையுங் கண்டேன். அவற்றில் இறுதி இரண்டு மரங்களும் பேரளவில்தான் இருந்தன. அவற்றின் அடி மரத்தில் சிறிய பங்கே தென்பட்டது. சிந்தாமணி தன் பொலிவில் சுந்தாதிருக்கிறதெனினும் அதன் சுவையை அறிவார் அரியராகவே இருந்தது.

மல்கு பூங் கற்பகமரத்தின் நீழலான்
நல்குவான் ஒருவனை நயந்து நாடுமோ
பில்கு பூம் பிண்டியான் அமிர் துண்டார் பிறர்
செல்வங்கண் டதற்கவா சிந்தை செய்யுமோ?

கற்பக நிழலுடையான் பிறர் உதவியை நாட வேண்டுவதில்லை. அதுபோல இறைவன் இன்பந் துய்த்தோர் சிந்தை பிறர் செல்வத்தை நாடாது என்று கூறும் சிந்தாமணிச் செய்யுள் நான் நின்ற தமிழ்க் கற்பகத்தை நினைவுறுத்தியது. ஜீவகன் புவிதரு இன்பங்களை யெல்லாந் துறந்து பரிநிர்வாணம் அடைந்ததொப்ப அனைத்தையும் தமிழுக்கே துறந்து, பைந்தமிழ்ச்சோலை யினின்பத்திற் குளிப்பதென்றோ வென்ற உள்ளத்துடன் சிந்தாமணியைக் கடந்து சிலப்பதிகாரத்தை அடைந்தேன். ஆ அதன், கவியும், கவினும், பொருளும் அணியும் எவ்வாறு என் உள்ளத்தை யிழுத்தது! "மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே தேனே! அரும் பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே! அலையிடைப் பிறவா அமிழ்தே! யாழிடைப் பிறவா இசையே!" என்று கட்டுரை பல பாராட்டினேன். அதி லுள்ள, "கலையின தகலமும்; காட்சியின்பமும் வீணைச் செல்வமும், பெருந்தண் வாழ்க்கையும்

நோக்கி அதை ஆர்வத்துடன் எனது மனத்தால் கொஞ்சினேன். அதன் உரையாசிரியப் பெருந்தகையான அடியார்க்கு நல்லாரைத் தமிழுக்கு அரிய தொண்டு புரிந்தவரெனக் கொண்டாடித் தொழுதேன். யாழுங்குழலும் தண்ணுமையும், விரியும் கூத்தும், பாட்டும் மல்கியிருக்கும் இச் செல்வச் சிலப்பதிகாரமே இன்னும் தமிழன்னையின் காற்சிலம்பென என் செவிகளில் "கல் கல்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறது.

இந்திர விழவூரெடுத்த காதையில் தமிழ் நகர்களின் அமைப்பும், அதிலுள்ள தொழிலாளிகளும், என் முன் நின்றன. கண்ணகியின் வீரச்சினம் எனது மனத்தை நடுக்கிக் கோமுறை பிழைத்த நாடு தீக்கிரையாகுமென்பதைக் காட்டிற்று. அப் பத்தினியின் மேல் எனக்குண்டான வணக்கம் வாய் காணாதது. கோவலனைக்கவர்ந்து கண்ணகிக்குத் துயரீந்த மாதவியை எண்ணிச் சினந்து அதே உணர்ச்சியுடன் மணிமேகலையுடனுள்ள அவளைப் பார்க்கச் சென்றேன். ஆனால் மணிமேகலை எனது சினத்தை மாற்றி சீரிய எண்ணங்களையே கொடுத்தாள். மாதவி இப்போது தன் மணிமேகலையுடன் ஐவகைச் சிலத்தை தியுங்காட்டி, பற்றற்ற இன்பம் மூழ்கித் துறவுடன் பொலிந்தனள். மணி மேகலையோ

பிறத்தலும் மூத்தலும், பிணிபட் டிரங்கலும்,
இறத்தலு முடைய இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்

என்று உணவின் பிண்டமான மக்கள் யாக்கையிற் பற்றொழித்து பிறர்க்கறம் முயலும் பெரியோனான புத்தனடியிற் பணிந்து பேரின்ப மெய்திருந்தாள். தூய நிலையிற் துறந்த, கற்பிற் கனியான மணிமேகலையை வணங்கினேன். அவள் காதையை விளக்கிய அருந் தமிழையும் தமிழ் நாட்டையும் "விழாவறை காதையில்" முதற்குடிப் பிறந்தோன் அறைந்த பறையுடனேயே,

தமிழ் முரசொலியே தண்கடந்தோங்குக!
தமிழ் மொழியாளருக தடங்கண்ணுவகை!
பிறமொழி தம்மிற் சிறந்தவை யெல்லாம்
உறைந்திடத் தமிழில் ஊக்கம் எழுப்புமின்!
பல்லாண்டு வாழும் பைந்தமிழ்ச் சோலையில்
பாக்கள் பூக்கப் பல்கலை செழிக்க,
அறமெனும் வல்லி அணியுறப் பாவ,
திறமுடன் முயல உரமுடன் எழுமின்!

என்று என் மனம் பறை சாற்றி, தமிழ்நாட்டில் பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி மேலே சென்றது. கூல வாணியச் சாத்தனார், மணிமேகலை பாடியதினின்று அக்காலத்தில் பசிக்காகளத்தொழில் புரியினும் மாந்தர் கல்விப்புலமையிற் சிறிதும் வேற்றுமையற்றுச் சிறந்திருந்தார் என்பதை யுணர்ந்து இக்காலத்தில் வீண் படிப்புப் படித்து உண்டியும் உடையுமே உகந்து ஓடிடும் உலகோரைக் கண்டு இரங்கினேன்.

இப்போது என் ஆவி இன்பமே உருவான ஒரு விண்ணில் இருக்கிறது. அவ்வின்பம் தந்த என் மனதைத் தன் குயிலோசையுடனேயே தமிழ் இளவேனிற் சோலையில் உலவச் செய்தது கம்பனே! கம்பனின் வானளாவிப் பரந்து விரிந்த கவியினடியில் நான் நுகர்ந்த இன்பத்தை யுரைக்க நீவிர் என்னை வற்புறுத்துவீர்களாயின், மறைகளும் புகலொணாத பரம்பொருளைத் தம்முட் கண்டவரின் மாப்பெரும் இன்பத்தைப் புகலும்படி காட்சியுள்ள பெரியோரை வற்புறுத்தவே உங்களை வேண்டுவேன். தமிழ்க் கடலில் தாலாட்டி என்றும் இனிக்கும் பாட்டமுதைத் தந்த கம்பனை, என் கவித் தோழனாகக்கொண்டு அவன் அழகு செய்த கவிச்சோலையிலேயே எனது ஆவியை உலவ விட யான் எண்ணியிருப்பதால் தனியாகக் கம்பக் கவியின் கனிவை புகைக்கிறேன்.

சொற்கண்டார் சொல்லேகண்டார்.
சுவைபுன பொருளின் தெய்வப்
பொற் கண்டார் பொருளேகண்டார்.
போற்றிடு மமுத வாயிற்
கற்கண்டுந் தேனும் பாலுங்
கலந்து தாய் ஊட்டுமின்பம்
முற்கண்டார் கம்பநாடன்
முதற் பெருங் கவிதை கண்டார்.

என்று பாடிக்கொண்டே புராணச் சாலையிற் போந்துலவினேன். சேக்கிழார் வளர்த்த பெரிய புராணமெனும் அன்பு மரத்திலுள்ள அறுபத்து நான்கு கிளைகளும் அமுதக்கனி பளித்து ஓங்கின. தென்றல் யாழ்மீட்ட அசைந்த இலைகள் பண்ணிசைக்கத் தேவாரங்கள் அமுதை ஒலியாக மாற்றியதுபோல என் காதுகளில் விழுந்தன. பரஞ்சோதி முனிவர் வளர்த்த திருவிளையாடல் புராணமும், கச்சியப்பசிவாசாரியார் தேன் கவி பாய்ச்சி செழிப்பித்த கந்த புராணமும், இன்னும்பல தனிப்பாடல்களும், காளமேகம், ஒட்டக்கூத்தன் புகழேந்தி, ஔவைப் பிராட்டியார், வில்லிபுத்தூரர், பெருந் தேவனார், அதிவீரராமபாண்டியர், பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் முதலிய பல பெரியோர் வளர்த்து வாழும் சவிகளைக் கண் குளிரக் கண்டு, அமுதருந்தி, "அமுதமின்னும் எழும் எனும் ஆசையால்" மேலே சென்றேன்.

தென்றல் மாறியது, அதன் மணத்தையும் காணேன். வரண்ட காற்றுதான் ஆடிக்கொண்டிருந்தது. அந்தோ! நான் கண்டதென்ன, தமிழ்ச் சோலையின் பின்புறம் பாலையோ! ஒதுங்கக்கூட நிழலில்லை. வாவென்று அழைப்போரும் இல்லை. இங்குமங்கும் சிறுசிறு புதர்களே தென்படுகின்றன. சோலை யழகில்லை. செடி கொடிகளின் குளிர் நிழல் இல்லை. புதர்களினிடையே மின்னும் கவிகள் பன்னலமுள்ளவேனும் அதைப் பொருட்படுத்துவார் ஒருவருமில்லை. பெரியோர் இருப்பினும் பிறங்கவில்லை. என்ன! இவன் ஆங்கிலமோதோ உலவுகிறான். அவன் ஒளியில் தமிழ் நூல்கள் மீன்களானவே! மறுபடியும் ஆங்கில செய்தற் சோலைக்கு வந்துவிட்டேனோவென மருண்டேன். பின்பு நான் தமிழ்ச்சோலையிலேயே தான் இருக்கிறேன் என்ற நினைவு வந்தது. வீரத் தமிழர் விறலிழந்து, தமிழ்க்குழலும் யாழும் மீட்டுவோரின்றி இருந்தன. ஆங்கிலமாதின் ஒப்பார நடையிலும், பசப்பு மொழிகளிலும், உலகையெல்லாம் அவள் தன் ஆடற்கூடமாக்கிய திறத்திலும் நமது தமிழர் மயங்கினர்.

தமிழன்னை எங்கே! கம்பரையும், திருவள்ளுவரையும் ஈன்ற எனது இன்பத்தாய் எங்கே? அந்தோ எங்கும் ஒளி பரப்பிய என் தாயைத் தேடியோ காணலாயிற்று. ஒரு இருள் மூலையில், வறுமையும் அடிமையும் பிடித்த மாக்கள் சூழ முகங் குராவி அன்னை இருக்கின்றனள். இப்போது அவள் இருப்பது அரியணையல்ல. சங்கப்பலகையல்ல. வெறுந்தரையில் ஆதரவின்றி இருக்கின்றனள். இருப்பினும் அவள் பிறரைக் கெஞ்சவில்லை. தன் பெருமையைக் குறைக்கவில்லை. கம்பனை முடியாய் வைத்துச் சிந்தாமணி பணிந்து காலிற் சிலப்பதிகாரம் கலகலவென்க, மணிமேகலை மேகலையாக, சங்க நூல்களெல்லாம் தங்க நகையாக இன்னும் ஏராணி புனைந்தாகவே என் இதயத்தைக் கொள்ளைகொண்டு யிறங்கினள்.

உள்ளொளி கண்ட உயர்ந்தோன் போலும்
தெள்ளிய அமுதத் தீஞ்சுவை போலும்
கள்ளவிழ் புதுமலர் கமழ்மணம போலும்
விள்ளமுடியா வியன்பெருங் காட்சி

என்னைக் கவரவேஎனது மூச்சையும், உடலையும் தமிழ்த்தாயின் அடியில் வைத்தேன். "என் மைந்தனே! என்று என்னையவள் ஏற்றுக்கொண்டாள். என் பெருமகிழ்வில் யான் என்னஉரைத்

தேனென்பதை இப்போது சொல்ல முடியாது. பேரின்ப மின்னல்கள் என்னுள் தோன்றித் தோன்றிப் பிறங்கின. என் திருவே, செல்வமே, தேனே, தமிழே, அன்னையே என்று தொழுதது தான் என் நினைவிலிருக்கிறது. "அன்னையே உலகளாவிய உன்னொளியை உள்ளடக்கி இம் மூலையில் ஒடுங்கியதென்னே?" என்று ஆர்வமுடன் விளம்பி அழுதேன். அன்னை என் கண்ணைத் துடைத்துத் தன்னொளியைக் காட்டினாள். ஆ அதில்கண்டதென்ன! தன் பேருருவைக் காட்டிய கண்ணனுக்குள் அருச்சுனன் கண்ட காட்சிகளெல்லாம் நான் தமிழ்த் தேவியினிடம் கண்ட காட்சிக்கு எம்மட்டு! எல்லா அறிவின் எல்லையைக் கண்டேன்! பிறமொழிகலவாத் தனி மொழி கண்டேன்! தமிழே புவியெலாம் தழைப்பதைக் கண்டேன்! செங்கோல் கண்டேன்! சீரெலாம் கண்டேன்! இன்பமே கண்டேன்! இறைவனைக் கண்டேன்! இக் காட்சி கண்ட பிறகு தமிழை நான் மறப்பேனோ! தமிழன்னையின் தனியொளி உலகெலாம் பரவ அவள் புகழைப் பாடுவதையே எனது வாழ்வாகக்கொண்டேன். எனது அன்பை அறிந்தாள் அன்னை. தோற்றத்திற்குக் குன்றியிருப்பினும், குன்றினும் பெரிய அவள் எற்றத்ந்த நாற்றிசையும் பரப்பத் திறமை பெறும் ஒரு பேற்றை அவளிடம் கேட்டேன். அன்னை அருளினாள்:- "அன்பனே, என் சேயே! என் மொழி தன்னைத் தம் மொழியாக்கிய, மாந்தர் இந் நாள் மறந்தனர் என்னை! பிறமொழி பெரிதென்னித் தாய் மொழி வளர்க்கார், என் பூந்தோட்டத் திலகுறு செடிகட் காதர மூற்றுவார் அரியர் ஆனர். தேயத்திற்கே என் மொழி தன்னை, ஒரு மொழியாக்க உளமொடு முயலின் வெற்றி யோங்கும். முன்னாளெல்லாம் மொழி சம் பெற்ற என் இன்னிளம் பெருமை இன்னும் எழிலும். ஆங்கிலமாதின் அன்பும் பூண்டு, அவள் கண்டெடுத்த அறிவு நூல் திறனை, தமிழ் மொழி தன்னில் சாலப்பரப்புமின்! தொல்மொழி எல்லாம் தோழமை பூண, பல்மொழிப்பூவின் பசுந்தேனுண்டு, தமிழை யூட்டித் தழைத்திடச் செய்மின். பூவுலகுற்ற புத்துயிர்க் கேற்ற பாவலர் பலரும் பரந்து தோன்றுவர் அவரை மனமொடு ஆதரித்தென்றன் கவியுங்கலையும் கவினும் எழிலும் புவியெலாம் ஒளிரப் பொருந்தி முயலுமின். ஒற்றுமை நற்றுணை உடவிட அன்பால் நற்றமிழ் வளர்மின் நலம்பெற வின்றே"

தமிழன்னையின் சொற்சுருக்கத்தை என்றும்பன் முழுதும் எண்ணிப் பணி செய்ய உறுதி பூண்டு பைந்தமிழ்ச் சோலைக்கு என் ஆவியை வார்க்க எழுந்தேன். என் நேசரையும் கூவியழைக்கிறேன். "அன்பர்காள் நமது தமிழ் மொழி தனி மொழி. அளவற்ற பெருமையுள்ளது. நமக்குக் கடவுட்டன்மையைத் தாக்கூடியது. நாமது அறிவின் குறைவால் தமிழின் ஆற்றலை அறியாது வீணாகக் குறை கூறுகிறோம். நாம் முயன்றால் அறிவுநூல் கடலைத் தமிழ் வங்கத்தைக் கொண்டு உலவலாம். உலகிற் பிறந்துள்ள புத்துயிர்க் கேற்பப் பல நூல்களைச் செய்தும், அறிவு நூல்களெல்லாம் தமிழில் எழுதித் தமிழைப் பெருக்கி ஆங்கிலத்தின் முன்னே பெருமையுடன் நிற்குமபடி செய்வோம் தமிழ் ஓவியத்தை அணிபுறத்தும் அழுதக்கோல் நமது முயற்சியே ஆதலின் தமிழுக்கு உழைக்க எழுமின்! தமிழின் அருமையைப் பிறமொழியினர் அறிய தமிழைக்கற்கப் போராப் பூணும்படி செய்யுமின்! பிற மொழிகளை இகழாது தமிழையே நேசித்து வாழுவோம்.

என் அழைப்பைக் கேட்டோர்களெல்லாம் பைந்தமிழ்ச்சோலையை வளர்க்க என்னுடன் வருவார்களென நம்புகிறேன். பைந்தமிழ்ச் சோலையில் ஒரு தோட்டக்காரனாவதே என் வாழ்க்கைப் பணி, என் கடன் பணி செய்து கிடப்பதே.

# எதிகாலக் கண்ணாடி

——(o)——

(ஸ்ரீ சுத்தானந்த பாரதி)

சுதர்சனா.

சேனாபுரியில், வஜ்ரகாயர் என்ற ஒரு பணக்காரர் இருந்தார். அவருடைய முதல் தாரம் சுந்தரி என்ற பெண்ணை விட்டு இறந்தாள். இரண்டாவது தாரமாக லீலா என்ற பிடாரியை மணந்தார். லீலாவுக்கு மல்லிகா என்ற அழுகு மூஞ்சிப் பெண் இருந்தாள். இப் பெண்ணின் மேலுள்ள பிரியத்தால், சுந்தரி என்னும் இரு வயசுக் குழந்தை மேல் வெறுப்புக் கொண்டு, அதைக் கொல்லுவதற்காக ஒரு கொலைக்காரனிடம் கொடுத்து விட்டாள். அக் குழந்தை இறந்ததாகப் பாசாங்கு செய்து ஒரு தம்பிக் குழவியைத் துணி கட்டிக் கொண்டுபோய்ப் புதைத்து, வேறொருவரும் பார்க்காது வேலையை நடத்தினான். லீலாவுக்கு ஜீவகன் என்ற தம்பி உண்டு. அவன் படிப்பில் தேர்ந்தவன். சாரணத் தலைவன்.

சில வருடமானபின் ஒரு நாள் ஜீவகன் தன்சாரணருடன், காட்டிற்கு வேடிக்கையாய்ப் போயிருந்தான். அங்கே ௰ வயதுள்ள பெண் மயக்கம் போட்டுக் கிடந்தாள். அவள் பக்கத்தில் ஒரு இராட்டினம் இருந்தது. அவளுக்கு வேண்டிய சிகிச்சைசெய்து, கஞ்சி ஊட்டியவுடன் களை தீர்ந்து உட்கார்ந்தாள். ஜீவகன் அவள் விவரத்தை வினவினான். சுதர்சனா தன் தாய்தந்தையர் இன்னாரென்று தெரியாதென்றும், தான் இரண்டுவயது முதல் நேரு பிரபு வீட்டில் வளர்ந்ததாயும், அங்கே மஹாத்மா காந்தி வந்தபோது அவருக்குப் பணிவிடை செய்ததாயும், அவர் தன்னை ஆசிர்வதித்து ஒரு இராட்டினம் ஈந்ததாயும் அதைக்கொண்டு நேருப் பிரபுவின் தயவின்றி சுயேச்சையாய் ஜீவனம் செய்துவந்ததாயும் சேனாபுரியில் கதர் நூல் வாங்குவோரின்மையாலும், காங்கிரஸ் சபை இன்மையாலும், உணவை இரக்க மனமின்றி, கானகத்தில் புலியோடு களைத்திருப்பதாயும் சொல்லி சாரணருடைய நன்றிக்கு வந்தனமளித்தாள். தன் பெயர் சுதர்சனா என்றும் சொன்னாள்.

ஜீவகன் சுதர்சனாவைத் தன் வீட்டிற்குஅழைத்துச் சென்று வஜ்ரகாயரிடம் காட்டினான். சுதர்ஸனாவின் குணத்தையும் அவளிடம் தன் குழந்தை சுந்தரியின் அடையாளமும் சில கண்டு வஜ்ரகாயன் சுதர்ஸனாவை வளர்த்தான். ஆயினும் சுதர்ச்னா இராட்டினம் சுற்றி நூலை விற்றே வயிறு வளர்த்தாள். ஜீவகனுக்கும் அவளுக்கும் இருந்த பற்று, வர வரக் காதலானது. அவனும் நூற்றுக் கதர்கட்டினான்.

கிற்க, லீலா தன் பெண்ணை ஜீவகனுக்குக் கொடுப்பதாக நிச்சயித்தாள். ஆனால் ஜீவகன் மல்லிகாவை வெறுத்தான். சுதர்சனாவைப் பேணினான். சுதர்சனாவைக்காதலித்தான். சுதர்சனாவின் மேலுள்ள பிரியத்தினாலேயே ஜீவகன் மல்லிகாவை வெறுக்கிறானென்று, உடனே இருவரையும் பிரிக்கச் சூட்சிசெய்தாள். ஜீவகன் வெளியே போயிருக்கும்போது சுதர்சனாவை அதட்டி மிரட்டி, அவள் இராட்டினத்தை ஒடித்து, தனக்குத் தினம் வேலை செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தினாள். லீலாவுக்குப் பதிலாக, பற்று விளக்குவதும், சமைப்பதும், வீடுகூட்டுவதும், தண்ணீர் இறைப்பதுமாகச் சுதர்சனா அடிமைப்பட்டாள். ஜீவகன் வரும்போதெல்லாம் இவளுக்கு ஏதாயினும் வேலை சொல்லி அனுப்பிவிடுவாள். ஆதலின் ஜீவகனைப் பார்க்கவே சுதர்சனாவுக்கு முடிவதில்லை. தன் மல்லிகாவை எத்தனை அலங்கரித்து முன்னால் நிறுத்தினாலும் ஜீவகன் அவளுடன் பேசுவதில்லை. சுதர்சனாவையே புகழ்ந்தான். இதைக் கண்டு லீலாவுக்குப் பொறாமை மிகுந்தது. இச் சமயத்தில் முன்னே சுந்தரியைக் கொல்லக் கொண்டுபோன சேவகன் பல இடங்கள் சுற்றி இங்கு வந்து ஜீவகனுக்குஉண்மையைச் சொல்லி சுதர்சனா தான் சுந்தரி என்று வஜ்ரகாயருக்கும் தெரியும்படி ரூபித்தான்.

ஒரு நாள் சுதர்சனுவை ஒரு இருட்டறையில்படுத்தி காய்ச்சல் என்று பாசாங்கு செய்துலீலாபட்டினிபோட்டாள். சுதர்சனுவின் உயிர் துடித்தது. அவளைப் பார்க்க வந்த ஜீவகனையும் வஜ்ரகாயரையும் அதட்டி விரட்டினுள். வைத்தியனுக்கு ரூபாய் கொடுத்து காய்ச்சல் என்பதை ஸ்திரம் செய்தாள். ஒரு நாள் இரவு ஜோத்திரைக்காக, ;மல்லிகாவை அலங்கரித்து லீலா வெளியே சென்றுள். சுதர்சனு படுத்திருந்த அறையும் திறந்திருந்தது. உடனே சுதர்சனு எழுந்தாள். சமயலுள்ளுட் சென்று கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு கொல்லை வழியாகத் தப்பித்து விட்டாள்.

ஜீவகன் சுதர்சனுவைத் தூக்கிச் சென்று விடலாம் என்ற எண்ணத்துடன் மறு நாள் இரவில் சாரணருடன் புகுந்து பார்த்தான். வெற்றறையாக இருந்தது. சுதர்சனுவைக் காணுது, அழத் தொடங்கினுன். சத்தம் கேட்டு லீலா ஓடிவந்தாள். "என்னடா வீட்டில் கன்னம் வைத்துக்குழந்தையை எங்கோ ஒளித்தாய்" என்று கூச்சலிட்டாள். "கன்னன் கள்ளன்" என்று சத்தமிட்டாள். வஜ்ரகாயர் அலறியடித்து வந்தார். நடந்தை ஜீவகன் சாந்தமாகச் சொன்னுன். லீலா சுந்தரியைக் கொல்ல முன் அவ் விடுத்ததைச் சொன்னுர். சுந்தரியே சுதர்சனுவென்று தெரிந்து இப்போது கொன்றுவிட்டாள் என்று குற்றம் சாற்றினர். லீலா தன்தொண்டை எட்டுமட்டும் ஜீவகனைத்திட்டி வீட்டினின்று துரத்தினுள்.

ஜீவகன் காங்ரஸ் பிரசாரகனுகிப் பெயர்பெற்றுவிளங்கினுன். ஒரு நாள் மதுரையில் அவனுடைய பிரசங்கம் நடந்தது. அப்போது அவன் கழுத்தில் அழகான கதர்த் துண்டு ஒன்று போட்டார்கள். சங்கம் முடிந்தது. அதை யார் நூற்றதென்றுன். அங்குள்ளவர் "இங்கே ஒரு ஆஸ்ரமம் கட்டிக்கொண்டு ஒருபெண் இருக்கிருள். அவள் எப்போதும் நூற்று, நெய்துகொண்டே இருக்கிருள். தன் உணவைத் தானே சமைத்து உண்கிருள். நூலைக் கொடுத்துத் தன் உணவுப்பொருள்களை அடைகிருள். அவள் இன்னும் சிலருக்கு நூற்றலும் நெசவும் கற்றுக்கொடுக்கிருள். மதுரை காங்கரஸ் சபையின் ஆதரவில் ஒரு ஆஸ்ரமம் கட்டிக்கொண்டிருக்கிருள்" என்றனர். ஜீவகன் உடனே அவ்விடத்திறகுச் சென்றுன். அங்கே இருப்பது நமது சுதர்சனுவே! சுதர்சனுவைத்தழுவிக் கொண்டான். சுதர்சனு அன்று புறப்பட்டு, பலவிடங்களில் சுற்றி மதுரைக் காங்ரஸ் சபையில் ஒரு இராட்டினம் வாங்கி நூல் நூற்று வந்த ஊதியத்தில் தறிவாங்கி நெய்தாள். ஜீவகன் வஜ்ரகாயருக்கு இவ் விஷயமாய் தந்தியடித்தான். எல்லாரும் புறப்பட்டனர். ஜீவகனுக்கும்சுதர்சனுவுக்கும் மீனுக்ஷி சந்நிதியில் விவாகமானது. இருவரும் சுகமாக வாழ்ந்தினர்.

சுயேச்சையை விரும்புவோரை நெடுநாள் பந்தத்தில் ஈடுபடுத்தமுடியாது.

—❖—

மனிதனுக்கு இவ் வுலகில் வேண்டுவது அற்பம்; அதுவும் சிறிது நாட்கே.

கோல்ஸ்மித்

தனிமையாக இருக்க முடியாததினுலேயே சகல துன்பங்களும் உண்டாகின்றன.

லா புருயர்

மனிதரை நேசிக்க வேண்டுமானுல் அவர்களிடம் ஒன்றும் அதிகமாய் எதிர்பார்க்கக் கூடாது.

ஹெல்வேஷியஸ்

இராட்சதன் பலம் இருந்தால் நலம்; ஆனுல் இராட்சதனைப்போல் அதை உபயோகித்தல் தீது.

ஷேக்ஸ்பியர்

உன்னை மெய்யனுக்கிக் கொள் அப்பொழுது உலகில் ஒரு துன்மார்க்கன் குறைந்தான் என்று நீ நிச்சயமாய் அறிந்து சொல்லலாம்.

கார்லைல்

நாணயத்தை இழந்தவனிடம், இழப்பதற்கு வேறொன்று மில்லை.

லிலி

# ஸம்ராட் அசோகன்

(ஸ்ரீமான் மஹேச குமார சர்மா எழுதுவது)

## பன்னிரண்டாம் அத்தியாயம்.

### ஸதி*

உபகுப்தனார் பாடலிபுத்திரத்துக்கு எப்போது போய்ச் சேருவோமென்று மிக ஆவலாயிருந்தார். இரவும் பகலும் பிரயாணம் செய்து, ஜிதேந்திரனும் அசோகனது ஸைநிகரும் போய்ச் சேருவதற்கு முன்னமே தான் பாடலிபுத்திரத்துக்குப் போய்விட வேண்டுமென்பது அவருடைய அபேக்ஷை. அப்படியே போய்ச் சேர்ந்திருப்பார். ஆனால் அவருடன் கூட இராணி இந்துமதியும் சியாமசுந்தரனும் இருந்தபடியால், அவர்களுடைய சௌகரியத்தைக் கவனிக்க வேண்டியிருந்தது. அதனால் அவர் ஒவ்வொரு நாளும் தம் உத்தேசத்துக்குக் குறைவாகவே பிரயாணத்தை நடத்தவேண்டியதாயிற்று. சொற்ப சொற்ப தூரங்களுக்கிடையில் பிரயாணத்தை நிறுத்தித் தங்க வேண்டி நேர்ந்தது. ஆரம்பத்தில் அவர்களுக்கும் அசோகனது ஸைநிகர்களுக்கும் இடையில் சில நாழிகைத் தூரமே இருந்தது; ஆனால் வர வர அது காதங்களாய் வளர்ந்துவிட்டது. உபகுப்தனார் எட்டாவது அஞ்சலைப் போய்ச் சேர்ந்து ஜிதேந்திரனையும் ஸோமவீரனையும் தேடிப் பார்த்த பொழுது, அவர்கள் அங்கிருந்து நாலு நாளைக்கு முந்தியே புறப்பட்டுப் போய்விட்டதாகத் தெரிய வந்தது. இந்த எட்டாம் அஞ்சல் ஒருதக் கிராமத்தின் தர்மசாலையில் ஏற்பட்டிருந்தது. அந்த தர்மசாலை கிராமத்துக்கு வெளியில் ஓர் அகன்ற பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்தமையால், அங்குப் போதுமான ஏகாந்தம் குடிகொண்டிருந்தது. தர்மசாலைக்கெதிரில் ஒரு நன்னீர்க் கிணறும் அதைச் சூழ்ந்து அடர்ந்த நிழலுள்ள மா மரங்களும் இருந்தன. இராணி இந்துமதியும் சியாமசுந்தரனும் அந்த மரங்களின் நிழலில் போய் உட்கார்ந்தார்கள் செட்டியார் உபகுப்தனார் இராத்திரி சமயலுக்காகச் சாமக்கிரி வாங்கிவரக் கிராமத்துக்குப் போனார். அவர் போன சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு சீமாட்டி அந்த தர்மசாலையில் தங்கும்பொருட்டு வந்தாள். அவளோடு கூட இரண்டு வேலைக்காரரும் இரண்டு வேலைக்காரிகளும் இருந்தார்கள். அவள் வந்ததும், வேலைக்காரர்கள் குதிரைகளைக் கட்டப் போனார்கள். அவர்கள் திரும்பி வருவதற்குள் வேலைக்காரிகள் தங்கள் எஜமானி தங்கியிருப்பதற்காக தர்மசாலையில் ஓரிடத்தைச் சுத்தமாக்கிச் சித்தப்படுத்தினார்கள். சீமாட்டி அங்கே போய்ப் பார்த்தபொழுது ஏற்கனவே யாரோ சிலர் அந்த தர்மசாலையில் வந்திறங்கி யிருப்பதாகத் தோற்றியது.

அவள் சொன்னாள்—"மாதவி, யாரோ சிலர் இங்கே ஏற்கெனவே இறங்கி யிருக்கிறார்கள். அவர்களுடைய சாமான்கள் இதோ கிடக்கின்றன. அவர்கள் இங்கேயே சமீபத்தில் இருக்கக் கூடும். அந்த மா மரத்தடியில் உட்கார்ந்திருப்பது யாரென்று பார். அவர்களிடம் போய் இன்றைக்கு நாங்கள் இங்கே தங்கப் போகிறோம்; வேறே யாரும் இதில் தங்கியிருக்க முடியாது;

* உடன்கட்டையேறும் உத்தமி

அதோ இருக்கும் கிராமத்துக்குப் போங்கள் என்று சொல்லு.”

இதைக் கேட்டதும் மாதவி ஓரே பாய்ச்சலாய்த் துள்ளியோடி மரத்தடியை யடைந்தாள். அவள் தன் தலைவியின் கட்டளையை நிறைவேற்றப்போகும் சமயத்தில், தான் யாருடன் பேசவேண்டுமோ அந்த ஆளை அடையாளங் கண்டுகொண்டாள். கொள்ளவே இனி செய்வதென்னவென்று யோசித்துக்கொண்டு அங்கேயே நின்றாள்.

இராணி இந்துமதியும் அதே சமயத்தில் மாதவியை அறிந்துகொண்டாள். அவளைப் பார்த்தவுடனே இராணி இந்துமதிக்கும் சியாமசுந்தரனுக்கும் வாரிப் போட்டது போல் ஆய்விட்டது. இது வரையில் தங்களுக்குத் தெரியாமலிருக்கும் கலிங்க நாட்டுச் செய்திகள் இப்போது தெரிந்துவிடுமென்றும், அந்தச் செய்திகள் ஆசையும் நம்பிக்கையும் உண்டாக்குவனவா யிருக்குமோ அல்லது அழிப்பனவாயிருக்குமோ யார் அறிவார் என்றும் அவர்களுடைய நெஞ்சு படபடவென்று அடித்துக்கொள்ளத் தொடங்கியது. இந்துமதி தேவியின் உடம்பில் இன்னும் சுமங்கலியின் ஆபரணங்கள் இலங்குவதை மாதவி கண்டு இறும்பூதெய்தினள்.

கடைசியில் இராணி மனதைத் திடப்படுத்திக்கொண்டு,—“மாதவி நீ இங்கே எப்படி வந்தாய்? எல்லாரும் க்ஷேமந்தானே?” என்றாள்.

இராணியின் கேள்விக்கு விடையளிப்பதில் மாதவி சரியானபடி ஒன்றும் சொல்லாமல் தந்திரமாய்த் தப்பித்துக்கொள்ளப் பார்த்தாள். இராணிக்குத் தன் பதிமரித்துப்போன செய்தி தெரியவில்லையென்று அவளுடைய சுமங்கலிவேஷத்திலிருந்து தெரிந்துகொண்டாள். அவள் கூடியமட்டிலும் இந்த துக்கச் செய்தியைத் தன் வாயால் சொல்லவேண்டாமென்று தீர்மானித்து இராணியின் இரண்டு கேள்விகளில் ஒன்றுக்கு இவ்வாறு உத்தரம் அளித்தாள்—

“பிரமீலா ராணியோடு நான் பாடலிபுத்திரத்துக்குப் போயிருந்தேன்.”

“இந்தப் பிரமீலா ராணி யார்?” என்று இராணி இந்துமதியும் சியாமசுந்தரனும் ஆச்சரியத்துடன் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

“பிரமீலா ராணி வேறே யார்? கலிங்கநாட்டு ராணிதான்.”

“கலிங்க நாட்டு ராணியா?”

“ஆமாம், இதில் இவ்வளவு ஆச்சரியப்படும்படியான விசேஷம்என்னஇருக்கிறது?” என்றுமாதவி அலக்ஷியமாய் விடையளித்தாள்.

“மாதவி, நீ யாரோடு பேசிக்கொண்டிருக்கிறாய் தெரியுமா?”

“ஆஹா, நன்றாய்த் தெரியும்.”

“இல்லை, நீ ஏதோ தவறுதலாய் உளறுகிறாய். கண்ணை நன்றாய்த் திறந்து பார், தெரியும்.”

“நான்கண்ணை அகலத் திறந்துபார்க்கவேண்டிய அவசியமுமில்லை, யாரையும் அடையாளங் கண்டுபிடித்துத் தெரிந்துகொள்ளத் தேவையுமில்லை. நான் செய்ய வேண்டிய வேலை எனக்குத் தெரியும். எங்கள் கலிங்க நாட்டு ராணி உமக்குக் கட்டளையிடுகிறதாவது,—இந்த தர்ம சாலையில் நாங்கள் தங்கப் போகிறோம், நீங்கள் இங்கே இருக்கக்கூடாது; இஷ்டமானால், அதோ காணப்படுகிற கிராமத்தில் போய் இருங்கள்.”

இராணி இந்துமதி வருத்தத்துடன் விளம்பினாள்—“ஆ! உங்கள் ராணிக்கு அவ்வளவு அகந்தையா? நாங்கள் இந்த தர்மசாலையைவிட்டு போக

மாட்டோம். வேணுமானால் அவளை அந்தக் கிராமத்துக்குப் போகலாமென்று உங்கள் ராணியிடம் போய்ச் சொல்லு," என்று கூறிவிட்டு இந்தப் பிரமீலா ராணியாயிருப்பள் என்று யோசிக்கலானாள். அதற்குள் ஸாக்ஷாத் பிரமீலா ராணியே அவளுக் கெதிரில் வந்து நின்றாள்.

இராணி—"யார்? பிரமீலா?"

போலி விநயம் நடித்துப் பிரமீலை பேசினாள்—"ஆமாம், அம்மா, தங்கள் திருவடிகளுக்குத் தொண்டு பூண்ட அந்தப் பிரமீலையே."

இந்துமதி—"நீ ராணியாய்ப் போய்விட்டையாக்கும்!"

"ஆம், அம்மா, எல்லாரும் என்னை ராணியென்று அழைக்கிறார்கள்."

"எதற்காக?"

"அந்த விசாகாநந்தனார் கலிங்கநாட்டுச் சிங்காசனத்தில் இருப்பதினாலேயே."

"அப்படியானால், இப்போ கலிங்கநாட்டுச் சிங்காசனம் மந்திரி விசாகாநந்தனுக்கு ஸ்வாதீனமாய்விட்டதோ?"

பிரமீலை வாய் திறவாமலே ஆமென்றுணர்த்தினாள்.

"மந்திரியாருக்குக் கலிங்கச் சிங்காசனம் எப்படிக் கிடைத்தது? அந்தச் சிங்காசனத்தில் ஜொலித்துக்கொண்டிருந்த சோதிமணி எங்கே போய்விட்டது?"

"வாயால் சொல்ல வெட்கமாயிருக்கிறது. தங்கள் மந்திரி தங்களுக்கு துரோகம் செய்துவிட்டார். அவர் விசுவாஸகாதகம் செய்து கலிங்கநாட்டுச் சிங்காசனத்தை பௌத்தர்களின் சகாயத்தைக்கொண்டு கைப்பற்றிக்கொண்டார்." இவ்வாறு பிரமீலை இந்துமதியின் கேள்விக்கு அரைகுறையான உத்தரம் அளித்தாள்.

இராணி இந்துமதி—"என்ன சொன்னாய்? மந்திரி விசாகாநந்தன் விசுவாஸகாதகம் செய்தாரா? இந்தச் செய்தியில் என் காதுக்கு நம்பிக்கை உண்டாகவில்லையே."

"ஆனால் வாஸ்தவத்தில் நடந்தது அதுவே! தர்மத்துக்குக் கட்டுப்பட்டிருப்பதினால் நான் அவருக்குப் பத்தினியாயிருக்கும் ஸம்பந்தத்தை அறுத்துக்கொள்ள முடியவில்லை. இல்லாவிட்டால் இந்தப் பிரமீலை வாஸ்தவமான வெறும் பிரமீலையாகவே இருந்திருப்பாள். இவள் ஒரு காலும் தேவியாரின் ஆஸனத்தில் அமர ஆசைப்பட்டிருக்கமாட்டாள்."

இந்துமதி சாந்தமாய்ச் சொன்னாள்—"நல்லது இது போகட்டும். மஹாராஜாவின் சங்கதியை இன்னும் நீ சொல்லவில்லையே."

பிரமீலை மௌனம் சாதித்தாள்.

"பிரமீலா, சொல்லு, சட்டென்று சொல்லு அவர் க்ஷேமமாய்த்தானே இருக்கிறார்?"

பின்னும் பிரமீலை பேசாதிருந்தாள்.

"பிரமீலா, ஏன் பேசாமே இருக்கிறாய்? மௌனமாயிருப்பதேன்? அவர் ஸௌக்கியந்தானே?"

பிரமீலையின் வாயிலிருந்து ஒரு வார்த்தையாவது வெளிப்படவில்லை.

பிரமீலை ஒன்றும் உத்தரம் சொல்லாமலிருப்பதைக் கண்டு இந்துமதிக்கு வருத்தமாய்விட்டது. அவள் வருத்தம் தாங்கமாட்டாது கூறினாள்—"பிரமீலா இப்படி வாய் மூடிக்கொண்டிராதே.

உள்ள செய்தியை ஏன் சொல்லமாட்டாய்? சீக்கிரம் சொல்லேன்."

கபட நாடகத்தில் கைதேர்ந்த பிரமீலையின் உதடுகள் இப்பொழுது மெல்ல மெல்ல அசையத் தொடங்கின. அவள் வருத்தத்துடன் ஒரு குளிர்ந்த மூச்சுவிட்டு மொழிந்தாள்— "தேவி, இந்த அசுப சமாசாரத்தைச் சொல்லும்படி கடைசியாக எனக்கே தலைவிதி போட்டிருக்கிறது!" இப்படிச் சொல்லிவிட்டு பி.மீலை மீண்டும் மௌனமுற்றாள்.

"என்ன அசுப சமாசாரம்? பிரமீலா வெறுமனே சொல்லு."

"தங்களுடைய ஸௌபாக்கிய ரவி அஸ்தமித்துவிட்டது! தங்களுடைய வாழ்வில் பேரிடி விழுந்துவிட்டது!!" என்று சொல்லிப் பிரமீலை தலைப்பினால் கண்ணை மூடிக்கொண்டாள். தனக்குத் துக்கம் வரவில்லை யென்பதை மறைக்கவென்று அவள் கண்களைத் தலைப்பினால்மூடிக்கொண்டது; அதற்கு மாறாகத் தனக்குண்டான அத்தியந்த ஆநந்தத்தை மறைக்க வேண்டியே அவ்வண்ணம் செய்தாள். பிரமீலை கூறிய செய்தியைக் கேட்டதுமே இந்துமதிக்கு அதைத் தாங்க முடியவில்லை. இதுவரையில் மனதைக் கடினப்படுத்தி வைத்துக்கொண்டு அவள் துக்கத்தை வெளிக்காட்டாதிருந்தாள். இப்பொழுதோ அவளுக்குத் தங்கு தடையின்றிக் கடல்மடை திறந்தது போல் அழுகை வந்துவிட்டது. சியாமசுந்தரனும் தேம்பித் தேம்பி அழலானான். இராணி இந்துமதி வெகு நேரம் வரையில் புலம்பிக்கொண்டிருந்தாள். இவ்வளவில் பிரமீலை தன் சேவகர்களிடம் போய் அவர்களை அழைத்துவந்தாள். இராணி இந்துமதி சோகத்தில் மனம் வெம்பி விழுந்து கிடந்தாள். அவள் பக்கத்திலேயே பிரமீலையின் சேவகர்கள் ஒரு பெரிய அக்னி ஜ்வாலையை மூட்டினார்கள். வெகு நேரம் வரை புலம்பித் தீர்ந்த பிறகு பிரமீலை ஆறுதல் கூறிச் சமாதானப்படுத்தினதின் மேல் இந்துமதிக்குத் துயரம் சற்றுத் தணிந்தது. அவள் பொருமிக்கொண்டே, "மஹாராஜா பரகதி யடைந்தார்?" என்று கேட்டாள்.

"என்றைய தினம் பௌத்தர்கள் இந்திரபுரத்தை ஜெயித்தார்களோ, அன்றைய தினமே காலையில் மஹாராஜா எங்களைவிட்டு நீங்கினார்."

"அவருடைய சவம் எங்கே கிடைத்தது? சாஸ்திரோக்தமாக அக்கி ஸம்ஸ்காரம் நடந்ததா?"

"அவருடைய சவம் அரமனையில் அவருடைய படுக்கை யறையண்டையே கிடைத்தது; அதை—"

இந்துமதி இடையே தடுத்துக் கேட்டாள்— "படுக்கை யறையண்டை சவம் எப்படிக் கிடைத்தது?"

"அவரை வதம் செய்து, சவம் அங்கேயே போடப்பட்டிருந்தது."

"என்ன சொன்னை? அவரை 'வதம் செய்தனரோ? யுத்த ஸ்தலத்திலும் அவருக்கு மரணம் லபிக்கவில்லையா? நான் எவ்வளவு துர்ப்பாக்கியசாலி? இதுவரையில் நான், அவர் யுத்த க்ஷேத்திரத்தில் பிராணனை விட்டிருப்பாரென்றும் வீரஸ்வர்க்கம் அடைந்திருப்பாரென்றும் எண்ணியல்லவா இந்த துக்க நிலைமையிலும் ஸந்தோஷமே பாராட்டி வந்தேன். ஐயோ! ஐயோ! எவ்வளவு ஆபத்தின் மேல் ஆபத்து!! பிரமீலா, எந்த துராத்மா அவரை வதம் செய்தான்?"

"கொலையாளியின் பேரைத் தங்களுக்குச் சொன்னால், அதில் தங்களுக்கு விசுவாசமே உண்டாகாதே!"

"பிரமீலா, வெறுமனே சொல்லு, எனக்கு இப்போ எல்லா வார்த்தைகளிலுமே விசுவாஸம் உண்டாகத்தான் வேணும். ஒரு சமயம் சூரியன் கிழக்கில் உதிக்கிறதில்லை, மேற்கில்தான் உதிக்கிறதென்றாலும் நம்பியிருப்பேன்; ஆனால் மந்திரியார் கலிங்க நாட்டு ராஜ வம்சத்தாரிடம் விசுவாஸகாதகம் செய்வாரென்பதை ஒரு காலும் நம்பியிருக்கமாட்டேன். இன்றைக்கே இந்தச் செய்தியிலும் எனக்கு நம்பிக்கை உண்டாய்விட்டது. மந்திரியார் செய்த இரண்டகத்தைவிட நம்ப முடியாததும் மானுஷத் தன்மையைக் காட்டாததான வேறொரு மகா பாதகமும் இழைப்பது சாத்தியமாகுமோ?"

"அந்தக் கொலை பாதகனுடைய பேரைக் கேட்ட பிறகு தங்களுக்கு மந்திரியாரின் விசுவாஸகாதகம் ஒரு பொருட்டாகவே தோன்றாது. மன்னன் மிருகேந்திரனைக் கொலை செய்தது சிதாநந்தஸ்வாமியே."

"போதும் போதும் கேட்டது! சிவ சிவ!! கொடியதிலும் கொடியது, பயங்கரத்திலும் பயங்கரம் இன்று நான் கேட்ட செய்தி!! பிராமணர்களுக்கும் ஸஜ்ஜனங்களுக்கும் இனி இம் மண்ணுலகில் இருக்க வழியில்லை. அவர்கள் மரியாதையாய் இந்த ஸம்ஸாரத்தை விட்டுத் தொலைந்து ஓடிவிட்டாலே கடைத்தேறலாம. அதுதான் அவர்களுக்கு க்ஷேமகரம். இல்லையானால், இந்த விசுவாஸகாதகர்களும் கொலைபாதகர்களும் இழைக்கும் துஷ்கிருத்தியங்களின் விஷஜ்வாலைகள் அவர்களைச் சூழ்ந்து திக்கு முக்காடச் செய்து இவ்வுலகத்தை விட்டோடும்படி துரத்திவிடுவது நிச்சயம்."

இப்பொழுது பிரமீலைக்குத் தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டிருக்க முடியவில்லை. அவள் இந்துமதி ஸதியாக மரிக்க விரும்புவாளென்று நினைத்துத் தன் சேவகர்களைக்கொண்டு ஏற்கெனவே சிதையும் சித்தம் செய்வித்திருந்தாள். ஆனால் இவ்வளவு நேரமாகியும் இந்துமதி சிதையேறச் சித்தமாயில்லை. இதைக் கண்டு பிரமீலை தனக்குள் பொரிந்தும் தத்தளித்துத் தடுமாறி, "தேவி வீண் பேச்சுப் பேசி இந்த அருமைச் சமயத்தை இழப்பது சரியல்ல. மிருகேந்திர மகிபதி ஸ்வர்க்கத்தில் தங்கள் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருப்பார்," என்றாள்.

இது வரையில் துக்க வேகத்தினால் இந்துமதிக்கு அந்த கொடிய ராக்ஷஸியின் ஞாபகம் வரவில்லை. பிரமீலையின் வார்த்தையைக் கேட்கவும் அவளுடைய நினைவு வந்துவிட்டது. சியாமசுந்தரன் பிரமீலை கூறிய அநிஷ்டமும் அமங்கலமுமான வார்த்தைகளைக் கேட்டதும் அவளைக் கோபமாய் எறிட்டு நோக்கி,—"பிரமீலாதேவி, இந்த அசுப வார்த்தை எந்த வாயிலிருந்து வருகிறது?" என்று கேட்டான்.

பிரமீலையின் தந்திரத்தை இராணி அறிந்து கொள்ளவில்லை. அவள் சொன்னாள்: "சியாமசுந்தரரே பிரமீலை அநுசிதமாய் ஒன்றும் சொல்லவில்லை. துக்க வேதனையினால் நான் என் கடமையை மறந்துவிட்டேன். இவள் அதை எனக்கு ஞாபகமூட்டினாள். பிரமீலா! நீ எனக்குப் பெரிய உபகாரம் செய்தாய். சியாமசுந்தரரே, மேல் நடக்க வேண்டியவைகளுக்கு ஆயத்தம் பண்ணும்."

சியாமசுந்தரனுக்குப் பிரமீலையின் மேல் பெருங்கோபம் வந்தது. ஆனால் என்ன பண்ணுவான் பாவம்! தன் கோபத்தை அப்படியே அடக்கி வைக்க வேண்டியதாயிற்று. இந்துமதி ஸதியாகச் சிதையேறி வீணே தன் சரீரத்தை எரித்துக் கொள்ள வேண்டியதில்லையென்பது அவன் எண்ணம். ஆனால் அக் காலத்தில் ஸதியாகச்

சஹகமனம் செய்யும் சம்பிரதாயம் லோகமான்யமாய்விட்டிருந்தபடியால், அதைத் தடுப்பது அப்படி இறக்க விரும்பும் ஸதிக்குப் பெரிய அபகீர்த்தி இழைப்பதாகக் கருதப்பட்டு வந்தது. விவேகமற்ற எந்த ஸ்திரீயாவது ஸதியாக மரிக்க இசைந்தால், அக்காலத்தில் ஜனங்கள் அவளுக்குச் சகாயமே புரிவர். விவேகமுள்ள எவளாகிலும் ஸதியாக மரிக்க மறுத்தால், அவளை எப்படியாவது அதற்குச் சம்மதிக்கச் செய்வதே பெருமையென அக்காலத்தார் கருதினர். இக் காரணத்தினால்; இந்துமதி ஸதியாக மரிக்கக் கூடாதென்று ஸோமசுந்தரன் விரும்பினாலும், அவ்விருப்பத்தை வெளிப்படையாய் உணர்த்துவது அவனுக்குக் கஷ்டமாயிருந்தது. ஸதியின் செய்கையில், வழியில் இடையூறு உண்டாக்குவது பெரும் பாதகமாகும் என்ற பயத்தினால் அவன் வேண்டா வெறுப்பாய்ச் சிதை மூட்டத் தலைப்பட்டான். சற்று நேரத்துக்கெல்லாம் சிதை பற்றி எரியத் தொடங்கியது. இந்துமதி அதனெதிரில் கைகூப்பி நின்றாள். அவள் மனோநிக்கிரகம் செய்து கண்ணில் ஒரு பொட்டு நீரும் வரவொட்டாது செய்திருந்தும், அவளுடைய நெஞ்சம் சம்சார சம்பந்தமான பல துக்கங்களாலும் சிந்தைகளாலும் நிறைந்திருந்தது. அவளுடைய முகத் தோற்றத்திலிருந்து இவையெல்லாம் வெளிப்படையாய்த் தெரிந்தது. இளஞ்சே ஜிதேந்திரன் கதி என்னாகுப? எனக்குப் பின் அவனை யார் பார்த்துக்கொள்வார்கள்? அவனுக்கு உசிதகாமாயும் புத்தி புகட்டுவதாயும் நாலு வார்த்தை சொல்லக்கூடியவர்கள் எவர்? சங்கடகாலத்தில் அவனுக்குத் தைரியம் கூற யார் இருக்கிறார்கள்? கலிங்க ராஜ்யம் தெய்வ வசத்தால் மீண்டும் அவன் கைவசமானால், அவனை அன்புடன் கட்டியணைத்து வாழ்த்துவார் யார்? பிரணயினியோ தன்னந் தனியளாய்த் துணையின்றிப் பௌத்தர்களிடம் சிறைப்பட்டிருக்கிறாள். அவளை அவர்கள் எப்படி நடத்துகிறார்களோ தெரியவில்லை. உண்மை நிலைமை தெரிந்து போனால் அவர்கள் அவளை எப்படி அவமதிப்பார்களோ, அல்லது உண்மை நிலைமை தெரியாதிருந்தால், யுவராஜனென்றே எண்ணி அவளை எவ்விதம் கஷ்டப்படுத்துவார்களோ, அதுவும் தெரியாது. இவையும் இவை போன்ற இன்னும் பல சிந்தைகளும் விசாரங்களும் அப்பொழுது இந்துமதியின் இருதயத்தை அலைக்கழித்தன. அவளுக்கு ஸதியாக விருப்பமில்லை, பிழைத்திருக்கவே பெரிதும் விரும்பினாள். பிழைத்திருந்தால், தன் வம்சத்தின் துர்த்திசையைச் சீர்படுத்தலாம், இளஞ்சேதாவுக்குத் தைரியமூட்டலாம், பிரணயினியின் விடுதலைக்காக முயற்சி செய்யலாம். இது மட்டுமேயன்று இதைவிட அதிகமாகவும், சிறுக்கனடையில் மனையில் பெற்ற போதனை வழி நின்று எவ்வளவோ சாதிக்கலாம். ஆகவே ஸதியாகச் சிதையேறி மரிக்காமல் ஜீவித்திருக்க வேண்டுமென்றே அவள் மனப்பூர்வமாய் விரும்பினாள். உபகுப்தன், குந்தை, இவர்களின் புது உதாரணமும் அவளுக்கெதிரிலே இருந்தது. உயிரோடிருந்தால், குந்தையைப் போல் ஆத்மோத்தாரணம் செய்துகொள்ளலாமே என்றெண்ணினாள். ஆனால் இன்னொரு விசாரம் தோன்றி அவளை ஸதியாக மரிக்கும்படி வற்புறுத்தியது. அதென்னவெனறால், தான் ஸதியாய் மரிப்பதினின்றும் வழுவிப் பின்னடைந்ததாகவும், பதியின் மரணத்துக்குப் பிறகும் ஜீவித்திருக்க இச்சிப்பதாகிய பெரும் பாதகத்தைச் செய்ததாகவும் உலகத்தில் பிரசித்தமானால் ஜனங்கள் தன் கற்பைச் சந்தேகப் பார்வையுடன் நோக்காமலிரார் என்றெண்ணலானாள். கலிங்க ராஜ்ய வம்சத்தின் விமல கீர்த்தி தன்னால் மலினமாக்கப்பட்டதென்றும் மண்ணோடு மண்ணாக்கப்பட்டதென்றும்கூட அவர்கள் தூற்றுவார்களென்றும் அவள் கருதினாள்.

அவள் உலக நிந்தனையை அஞ்சினாள். இவ் வழக்கத்தை எதிர்த்து உலக நிந்தனையைப் புறக்கணிக்கக்கூடிய அவ்வளவு சாகசம் அவளுக்கு உண்டாகவில்லை. ஆகவே அவள் ஜீவித்திருக்க விரும்பிய போதிலும், எஞ்சிய வாழ்நாளை ஈசுவர பஜனத்திலும் புண்ணிய கர்மாசரணத்திலும் கழிக்க அவள் இச்சித்த போதிலும், கேவலம் லோகாபவாத பயத்தினாலேயே வழக்கத்தை அநுசரித்து ஸதியாய் மரிக்க ஆயத்தமானாள்.

ஸதி சஹகமன ஸம்ஸ்காரத்தில் சில மந்திரங்கள் ஓதப்படுவதுண்டு. அந்த வேலையை சியாமசுந்தரன் துக்கம் தோய்ந்த இருதயத்துடன் செய்து கொண்டிருந்தான். பிரமீளா ராணி, இவள் இன்னும் சற்று நேரத்தில் எரிந்து சாம்பராய்ப் போய் விடுவாளென்று மனமகிழ்ச்சியுடன் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாள். இந்துமதி தேவி தான் அணிந்திருந்த சொற்ப நகைகளை பிரமீளையின் வேலைக்காரிகளுக்குப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டிருந்தாள். ஸதி சிதையேற வேண்டிய வேளை வேகமாய்ச் சமீபித்துக்கொண்டிருந்தது. இவ்வளவில் உபகுப்தனார் கிராமத்திலிருந்து போஜன சாமக்கிரிகளுடன் திரும்பி வந்தார். இந்தக் காட்சியைப் பார்க்கவும் அவருக்கு மிக்க வியப்புண்டாயிற்று. அவர் சியாமசுந்தரனை நோக்கி,—"இது என்ன நடந்துகொண்டிருப்பது?" என்று கேட்க, அவன்,—"இந்துமதி ராணியார் ஸதியாக மரிக்கப் போகிறார்," எனவும் அப்பொழுதுதான் அவருக்குத் தம்முடன் கூட வந்த தேவி வேறொருத்தியுமல்ல, கலிங்காதிபதியின் பத்தினியேயென்று முதன் முதலாகத் தெரியவந்தது. அவர் தேவியின் அடியிணைகளில் விழுந்து, "தாங்கள் இந்தப் பாபகார்யத்தில் பிரவர்த்திக்கக் கூடாது. இப்படி தற்கொலை செய்துகொள்ளக் கூடாது," என்று மென்மேலும் வேண்டிக்கொண்டார். பிரமீளை பார்த்தாள்—அவள் வழியில் இது புதிய ஆபத்தாய் வந்து முளைத்தது. அவள் தன் சேவகர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டாள்:—

"இவன் யார் மூர்க்கன் குறுக்கே வந்து நுழைந்தது? ஸதியின் இந்தப் புண்ணிய கர்மத்தில் விக்கினம் செய்கிறவன் இவன் யார்? இவனை இப்பொழுதே இங்கிருந்து துரத்துங்கள்—பிடித்துத் தள்ளுங்கள். தேவியின் இந்த தார்மிகக் கிரியையைத் தடை செய்கிற இந்தத் துடியன் யார்?".

உபகுப்தனார் ஆவேசத்துடன் சொன்னார்—"உங்கள் தார்மிகக் கிரியையில் இடி விழ! ஸதியாய்ச் சாவது தற்கொலை செய்துகொள்வதேயாகும். தற்கொலைக்குச் சமமான பிறிதொரு குற்றமில்லை. தற்கொலை புண்ய கர்மமென்று கூறும் தரும நூல்கள் தரும நூல்களே அல்ல. தேவி, நான் தங்களை ஸதியாய் மரிக்கவிடமாட்டேன்."

"அடே மூர்க்கா, நீ செய்யும் தடை எவ்வளவு நிஷ்பிரயோஜனமானதென்று இதோ காட்டுகிறேன் பார்," என்று கர்ஜித்துவிட்டுப் பிரமீளை தன் சேவகர்களைப் பார்த்து உபகுப்தனை அங்கிருந்து துரத்திவிடும்படி உத்தரவு பண்ணினாள்.

இந்துமதி—"பிரமீலா, செட்டியார் உபகுப்தனார் மேல் நீ கோபங்கொள்ள யாதொரு காரணமும் இல்லை. அவர் வார்த்தையை நான் கேட்கட்டும். அவருடைய யோக்கியதை சாமானியமன்று."

இந்துமதி இவ்வாறு கூறியதைக் கேட்டுப் பிரமீலா ராணியின் பரிவாரம் முன்னேறத் துணியாமல் பின்னிடைந்தது.

இந்துமதி சாந்தமாய்ச் சொன்னாள்—"செட்டி

யாரோ, எழுந்திருங்கள், காலைப் பிடித்துக்கொள்ள வேண்டிய அவசரம் கொஞ்சமும் இல்லை. தாங்கள் சொல்லுவது எவ்விதத்திலும் பயன்படுமென்று நினைக்கவில்லை. ஸஹகமனம் செய்வது—ஸதியாக மரிப்பது—பதிவிரதாஸ்திரீகளின் தர்மந்தானே?"

சியாமசுந்தரன் இடையே தடுத்துச் சொல்லலுற்றான்—"ஆனால் இன்றைக்குச் செய்யும் இந்த ஸஹகமனம் எப்படி ஸார்த்தகமாகும்? கலிங்காதிபதி திருநாட்டுக்கெழுந்தருளி இன்றைக்குப் பதினைஞ்சு இருபது நாளைக்கு மேலாய்விட்டது. அவருடைய பிரேதம் எரிந்து சாம்பலாய்ப்போய் விட்டது. அந்தச்சாம்பலும் அப்போதே மண்ணோடு மண்ணாய் விட்டது. தாங்களோ இத்தனை நாள் கழித்து இன்றைக்குத்தான் காஷ்டாரோஹணப் போகிறீர்கள்; இதில் என்ன புண்ணியம்?"

பிரமீலை சியாமசுந்தரன் பக்கல் கோபதிருஷ்டியுடன் பார்த்து—"இதில் என்ன புண்ணியமா? நீ வைதிகதர்மத்தின் நிஷ்கண்டகனாய பக்ஷபாதியாயிருந்தும், உனக்கு உன் தர்மத்தின் சொரூபமும் அதன் பழக்க வழக்கங்களின் பண்பும் கொஞ்சமுந் தெரியாதிருப்பதும், நீ இவ்வளவு ஞானசூனியனாயிருப்பதுதான் புண்ணியமென்றேன்!" என்று சொல்லி மீண்டும் இரத்நமதியின் பக்கல் திரும்பி இவ்வாறு கூறினாள், "தேவி, இவர்கள் தாங்கள் மேற்கொண்ட காரியத்தைத் தடை செய்து நிற்கிறார்கள். இவர்கள் சொல்வதைத் தாங்கள் கேட்கவேண்டாம். ஸத்காரியங்களுக்கு இப்படிப்பட்ட விக்னங்கள் உண்டாவது சகஜமே. ச்ரேயஸி பஹு விக்னாநி. சுவர்க்கலோகத்தில் மிருகேந்திர மஹாராஜனுடைய ஆத்மா தங்கள் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும். அவரை அதிக காலம் காத்திருக்க வைத்துக் கஷ்டப்படுத்துவது சரியல்ல, தேவி, இம் மண்ணுலக சுகத்தில் ஆசையை ஒழித்தால் தான் தங்கள் பதியுடன் தாங்கள் சுவர்க்க லோகத்தின் அகண்ட சுகத்தை அநுபவிக்க முடியும்".

உபகுப்தனுக்குப் பிரமீலை யாரென்று தெரியாது. அவர் சொன்னார்—"ஏ மேதாவி, நீ இன்னும் சிறு குட்டி; மரப்பாச்சி விளையாட்டை நேற்றுதான் விட்டிருப்பாய். அதற்குள் தர்ம கர்மங்களைப் பற்றி அகலமும் நீளமுமாய்ப் பேச வந்து விட்டாய்—"

"நீர் வயதால் விருத்தராக்கும். ஆகையால் ஞானோபதேசம் பண்ண வந்து விட்டீர்." என்று இடையே செருகினாள் பிரமீலை.

இராணி இரத்நமதி—"உபகுப்தனார் வயதில் ஒரு வேளை இளையவராயிருக்கலாம். ஆனால் ஞானத்தில் அவர் நிச்சயமாய் விருத்தரே."

உபகுப்தனார் கூறினார்—"சுவர்க்கத்தில் தன்னுடைய பதி தன்னை எதிர்பார்த்திருப்பானென்று எண்ணியும், விண்ணுலகத்தில் மண்ணுலகத்துச் சதிபதிகள் மீண்டும் சந்திக்க முடியுமென்று நம்பியும் ஸதியாக மரித்தல் பெரும் பிசகு. மகா சமுத்திரத்தில் இரண்டு கட்டைகள் தற்செயலாய் ஒன்று சேர்ந்து பிறகு பிரிந்து போகின்றன. அவை மறுபடியும் ஓரிடத்தில் சேருமென்பது ஹாஸ்யம். அப்படியே இந்த பவசமுத்திரத்தில் பதிபத்தினிகள் சேர்வது சகஜமாகவே இருக்கிறது. ஆனால் மரணத்தினால் அவர்கள் ஒரு முறை பிரிந்து போய் விட்டால், மறுபடியும் சேர்வது சாத்தியமில்லை. ஒவ்வொரு பிராணியும் தன் கர்மானுசாரமாய் மறுஜன்மம் எடுக்கிறது. ஒருமுறை சேர்ந்த இரண்டு ஆத்மாக்கள் அதே ஸ்வரூபத்தில் அதே சம்பந்தத்தினால் மறுபடியும் சேருமென்று ஆசைகொள்வதும் விசுவசிப்பதும் மூடத்தனமே. உங்களுடைய வைதிகதர்மசித்தாந்தமும் இதுவேயாகும்

அப்படி இருந்தும் தாங்கள் தங்கள் பதியைச் சுவர்க்க லோகத்தில் சந்திக்கலாமென்னும் ஆசையால் தற்கொலையாகிய பாதகத்தைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறீர்கள். இனி தங்களுக்கு என்ன சொல்லலாம்? தர்ம சாஸ்திரவாதவிவாதம் செய்து, ஸதியாய் மரிக்கும் ஸம்பிரதாயம் தர்மபாஹ்யமென்று சித்தாந்தஞ் செய்வதற்கு இது வல்ல சமயம்."

பிரமீலைக்கு இப்போது எங்குமில்லாத கோபம் வந்துவிட்டது. அவள் சொன்னாள்—"அப்படியானால் நீர் என் நடுவில் தலையிடுகிறீர்? பாரம்பரையாய் வருகிற இந்த வழக்கத்துக்குத் தர்மத்தில் ஆசிரயம் இருக்கிறது, ஆகாரம் இருக்கிறது. இன்றைக்கு ஆயிரம் வருஷ காலமாய் வழங்கி வரும் ஆசாரமானது ஸதியாய் மரிக்க வேண்டியதை வற்புறுத்துகிறது. அப்படியிருக்க ஓர் அபலையை அவளுடைய பவித்திரமாகிய கர்த்தவிய தர்மத்திலிருந்து விலக்குவது உமக்கு உசிதமாகுமா?"

உபகுப்தனார் பிரமீலையை நோக்கிக் கூறினார்—"உன்னுடைய அந்தக் கரணம் மிகப் பொல்லாதது. நீ கொடிய ராக்ஷஸியே தேவியைத் தற்கொலையினின்று தடுக்கவேண்டியது போக, நீ அவரை உபசாகப்படுத்துகிறாயே! தேவி, நான் தங்களை ஸதியாக மரிக்க வொட்டேன்."

பிரமீலை உரத்த குரலில் கூறினாள்—"தேவியார் தம் ஸதீத்துவத்தை (கற்பைக்) காத்துக்கொள்ளும் பொருட்டும், உலக நிந்தையிலிருந்து தப்பும் பொருட்டும், வழி வழியாய் வரும் தர்மத்தை பரிபாலிக்கும்பொருட்டும், கலிங்கதேச ராஜவம்சத்தின் களங்கமற்ற கீர்த்தியை நிலை நிறுத்தும் பொருட்டும் ஸதியாய் மரிக்கவே வேணும்"

பிரமீலையின் இந்தப் பிடிவாதத்தைப் பார்த்து உபகுப்தனாருக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று.

இந்துமதி தேவி தயாம் தோய்ந்த குரலில் கூறினாள்—"ஆமாம் செட்டியாரே, நான் ஸதியாக மரிக்கத்தான் வேணும்; ஸதியாய் மறிப்பதைவிட எனக்கு கரைபேற வழி வேறில்லை."

உபகுப்தனார்—"என் பிரார்த்தனையைப் புறக்கணித்துவிட்டுக் கடைசியில் தங்கள் ஸதியாக மரிக்கவே செய்வீர்களாக்கும்!"

"ஆமாம், அப்படிச் செய்யாவிட்டால் வேறே விதியில்லை."

"தங்களைச் சாப்பலாக்கிக்கொள்ளப் போகிறீர்களோ? பிரேம பாவத்தை ஸம்பாதித்துக்கொள்ளப் போகிறீர்களோ? ஆத்மோந்நதியை இழக்கப் போகிறீர்களோ? கோர நரகத்தில் வாஸம் செய்யப் போகிறீர்களோ? வேண்டாம், தேவி, இந்தக் கொடிய வழக்கத்துக்கு இரையாகிவிட வேண்டாம்"

பிரமீலை பற்களை நறநறவென்று கடித்து இவ்வாறு கொக்கரிக்கலாயினாள்— "எங்கிருந்தோ வந்து சேர்ந்ததே இந்த அதியப் பிரஸங்கிச் சனியன்! தேவியே தம்முடைய நிச்சயம் இன்னதென்று தெரிவிக்கும்போது, என்ன காணும் நீர் கற்ற வித்தையெல்லாம் காட்டி அலப்புகிறீர்? நீர்தான் மஹா ஞான விருத்தரென்று காட்டிக்கொள்ள ஒன்றின் மேல் ஒன்றாய் மேலும் மேலும் என்னென்னவோ பிதற்றிக்கொண்டு போகிறீரே! வயது ஆக ஆக புத்தி தேய்ந்துகொண்டே வருகிறதாக்கும்! அதைப் போலவே ஞானம் அதிகமாக ஆக, மநுஷ்யனுக்கு விவேகமும் குன்றிப் போகிறது போல் தோன்றுகிறது!"

இந்துமதி—பிரமீலா,உன் வாய்க்கு விவஸ்தை இல்லை போலிருக்கிறது. செட்டியாரே இந்த அசட்டுகுட்டியின் வார்த்தைகளைச் சட்டை பண்ணவேண்டாம்.என் ஜீவேந்திரன் பேரில்கிருபை

கூறுங்கள். "அசோகனுடைய பிடியிலிருந்து அவனை விடுவிக்கும்படியான பிரயத்தனம் செய்யுங்கள். ஸதியாவதைவிட எனக்கு வழி வேறில்லை."

பிரமீலா—"என்ன சொன்னீர்கள்? யுவராஜன் ஜிதேந்திரன் பிடிக்கப்பட்டானா?"

உபகுப்தனார்—"ஆமாம்"

அப்பொழுது பிரமீலையின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தெழுந்தது. அந்த நிலைமையில் பிரமீலை ஆநந்தப்படுவதைக் கண்டு இந்துமதிக்கு ஆச்சரியம் உண்டாயிற்று.

உபகுப்தன் செட்டியார் நிராசையுற்றுச் சும்மா உட்கார்ந்துவிட்டார். இராணி இந்துமதி எல்லாரிடத்தும் பிரியா விடை கொண்டாள். சியாமசுந்தரன் செய்யும் மந்திரோச்சாரணை நடந்துகொண்டே இருந்தது. சிதை சாந்தமாய் எரிந்து கொண்டிருந்தது. இந்துமதி தன் பிரிய பதியின் வடிவத்தை உள்ளத்தில் பாவனை செய்து கொண்டாள். ஊனக்கண் மூடியது, ஞானக்கண் உள்ளத்தில் அமர்ந்த வடிவத்தில் நாட்டங்கொண்டது. ஓரடி எடுத்துத் தீயிடை வைத்தாள், மற்றதை உயர்த்திச் சிதையில் விழவிருக்கும் தறுவாயில், பிரமீலையின் கரகரப்பான குரலோசை அவள் காதில் விழுந்தது.

பிரமீலை கரகரப்பான தொண்டையை எடுத்து கர்ஜிக்கலாயினாள்—பெருமையை இழந்த ராணி "இந்துமதி, நீ சுவர்க்கமடைந்த பிறகு, ஒன்று, உன் வரவை எதிர் பார்த்திருக்கும் உன் பதியின் தரிசனமாவது உனக்குக் கிடைக்கும், அல்லது உன்னைச் சந்திப்பதற்காக உன் பின்னாலேயே உன் புருஷன் சுவர்க்கத்தில் விரைவில் வந்து சேர்வான். அப்பொழுது அவனிடம் என் செய்தி ஒன்றைச் சொல்லக் கடவாய். அதாவது எந்த பிரமீலையை நீ பரிஹாஸம் செய்தையோ, அந்தப் பிரமீலையே கலிங்க நாட்டின் புராதனராஜ வம்சத்தை அழித்துத் தன் சொந்தச் சாகசத்தினால் அக்கலிங்க நாட்டின் அரசியாய்விட்டாள்! இந்திரபுரத்து அரமனையின் தேவியாய்விட்டாள்! இதுதான் நான் அவனுக்குச் சொல்லியனுப்பும் செய்தி. இதை அவனிடம் தவறாமல் சொல்லு போ!'

இந்த வார்த்தைகள் இந்துமதியின் செவிகளில் விழுந்தன. உடனே சிதையை விட்டு வெளியே வரவேண்டுமென்று ஓர் ஆசை அவள் உள்ளத்தில் எழுந்தது. அவ்வளவு மோஹன சக்தி பொருந்தியிருந்தது அவ் வார்த்தைகளில். ஆனால் இனி சிதையிலிருந்து இறங்கி வருவது அவள் சக்திக்கு மிஞ்சின காரியம். அப்பொழுது அவள் சிதையில் மிகவும் அடங்கி ஒடுங்கிப் போயிருந்தாள். உந்தித் தள்ளிக்கொண்டு எழுந்திருக்கத் தக்க சக்தி அவளிடத்தில் இல்லை. ஆனால் அவளுடைய நாவன்மை இன்னும் குறையாமலே இருந்தது. அவள் மிக்க கஷ்டத்துடன் 'ஐயோ, யாராவது என்னைக் காப்பாற்றுங்களேன்!' என்று பரிதாபகரமாய்க் கதறினாள். உபகுப்தனாரும் சியாமசுந்தரனும் சேர்ந்து சிதையை நோக்கி ஓடி வந்தார்கள்.

பிரமீலை வாளை வேகமாய் உருவிக்கொண்டு,—"பதனம், யாராவது ஓர் அடியாகிலும் முன்னே எடுத்து வைக்கப் போகிறீர்கள்! அப்படித் துணிந்து செய்தீர்களோ, நீங்கள் என் வாளுக்கு இரையாவது திண்ணம். இவளை இப்படியே எரித்தே தீர வேணும்," என்று அச்சுறுத்தி அட்-

டஹாஸம் செய்து, பிறகு தன் சேவகர்களை நோக்கி அவ்விருவரையும் பிடித்து வைக்கும்படி கட்டளையிட்டார். அதன் மேல் இருதரத்தாரும் கை கலக்கலாயினர்.

இங்கே சிதை தன் வேலையைச் செய்ய தொடங்கியது. இராணி இந்துமதி மிகுந்த கஷ்டத்துடன், 'இப்போதாவது என்னைக் காப்பாற்றுங்களேன்,' என்று அரற்றிய வண்ணமாயிருந்தாள். இதற்குள் பௌத்த வேடம் பூண்ட ஓர் இளங்குமரன் அங்கே வந்தான். அவன் மின்னலைப் போல் சிதையைத் தாவி அரை நொடியில் இந்துமதியைத் தூக்கிச் சிதையினின்று வெளியே கொண்டுவந்துவிட்டான். அப்பொழுது சியாமசுந்தரனும் உபகுப்தரும் சிதையை நோக்கிச் செல்லும் பிரயத்தனத்தை விட்டுவிடவேண்டியதாயிற்று. இருவரும் இந்துமதியின் கிட்ட வந்தார்கள். அவளுடைய சரீரம் தீய்ந்து போயிருந்தது; ஆயினும் பிராணஹானி உண்டாகும்படியான அளவுக்கு ஒன்றும் நேரவில்லை. பிரமீலை பக்கத்திலேயே நின்று அந்தக் கருணைபிக்ஷுவைக் கண்கொட்டாது நோக்கியவண்ணமாயிருந்தாள். அவளைத் தடுக்கவேண்டுமென்றஎண்ணந்தானும் அவளுக்கு உண்டாகவில்லை.

இராணி இந்துமதி இன்னமும் பிரக்ஞையற்று அந்த பிக்ஷுவின் மடியில் படுத்திருந்தாள். அவளைத் தெளிவித்துச் சைத்தியோபசாரம் செய்யவேண்டியது அவசியமாயிருந்தது. அதற்காக அவளை அருகிலிருக்கும் கிராமத்துக்குக்கொண்டு போனால், அங்கு மருந்துபோட்டு ரணங்களை ஆற்ற ஏற்பாடு செய்யலாமென்று சொல்லி உபகுப்தர் இராணியை ஏற்றிச்செல்லப் பல்லக்கோ டோலியோ பார்த்துக்கொண்டு வரும் பொருட்டு வேகமாய்க் கிராமத்தை நோக்கி நடந்தார். சற்றுநேரங் கழித்துப் பிரமீலை இங்கே எவ்வளவு நாழிகை நின்றிருப்பது, நெடுநேரம் இங்கே தங்கியிருப்பது சரியில்லையென்று யோசிக்க, ஆனால் அந்தக்கருணை பிக்ஷுவை விட்டுப்பிரிய மனமில்லாமல் அவனைத்திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தர்மசாலைக்குப் போய்விட்டாள். ஆனால் அவள் தேகமட்டும்தர்மசாலைக்குவந்ததேயின்றி இருதயம் பௌத்த பிக்ஷு இருந்த இடத்திலேயே தங்கிவிட்டது. சியாமசுந்தரன் வெகுநேரம்வரையில் அந்த பௌத்த பிக்ஷுவின் முகத்தைக்கண்கொட்டாது பார்த்தவண்ணமாயிருந்தான். அக்கம் பக்கத்தில் ஒருவருமில்லையென்றுகண்டவுடனே மெல்ல வினவினான், "யுவராஜ ஜிதேந்திர மஹாராஜாவா?" என்று.

"ஆம், சியாமசுந்தரரே, எப்படியோ மெல்லக் கண்டுபிடித்துவிட்டீரே! நான் சரியான சமயத்துக்கே வந்து சேர்ந்தேன். சற்றுத் தாழ்ந்து வந்திருப்பேனானால், அம்மா போய்விட்டிருப்பள். நீர் அம்மாவை இந்தக் கிராமத்துக்கு எடுப்பித்துக்கொண்டு போய் மருந்து முதலானது போட்டுச் சொஸ்தப்படுத்தும். பிறகு என் தகவலைச் சொல்லலாம். இந்த உடையில் என்னை ஒருவரும் தெரிந்துகொள்ள முடியாது. நீர் என்னுடன் நெருங்கிப் பழகினவராகையால் தெரிந்துகொண்டீர். இனி என் பெயரை இங்கே எடுக்க வேண்டாம். இன்னும் ஒரு விஷயம் உம்மிடம் சொல்ல வேண்டியிருக்கிறது. மஹாராஜா கொலை செய்யப்பட்டாரென்று சொல்லிக் கேட்டேன். இது வெறும் புரளி யென்று நினைக்கிறேன். ஏனென்றால் மஹாராஜா வென்று சொல்லி அந்த துஷ்டை பிரமீலா அனுப்பின சவம் தலையில்லாதிருந்ததாம். ஆனால் மஹாராஜா இந்திரபுரத்தில் இல்லை யென்பது வாஸ்தவம். எங்கேயோ ஒருவருக்கும் தெரியாமல் போயிருக்க வேணும். அது எங்கே, என்பது தான் தெரியவில்லை. வருகிற வழியில் இந்தப்

பிரமீளை பாடலிபுத்திரத்துக்குப் போய்க்கொண்டிருப்பதாக இந்திரபுரத்தில் கேள்விப்பட்டேன். இவளைப் பின் தொடர்ந்து சென்றால் ஒரு வேளை ஏதாவது கிடைக்கலாமென்ற எண்ணத்துடன் இவளைத் தொடர்ந்து இங்கே வந்தேன். வந்த விடத்தில் இந்த துக்ககரமான நிகழ்ச்சியைக் கண்டேன். இருக்கட்டும். அம்மாவிடம் இந்தச் சங்கதிகளை யெல்லாம் சொல்லும். இது வுமல்லாமல், இன்று முதல் நாலு மாசத்துக்குள் நான் மஹா ராஜாவைப் பற்றிய தகவல் கொண்டு வருகிறேன் என்றும், அது வரையில் ஸதிபாக மரிக்க வேண்டாம் என்றும் என் சார்பாக இந்தப் பிரார்த்தனையை அவருக்கு அறிவியும். நாலு மாசத்துக்குப் பின் மஹா ராஜாவின் தரிசனம் ஆகாவிட்டாலும் அல்லது அவரைப் பற்றிய தகவல் கிடைக்காவிட்டாலும், அப்பால் அம்மாவுக்கு இஷ்டமானபடி செய்பட்டும், எனக்கு எவ்வித ஆக்ஷேபமும் இல்லை." ஜிதேந்திரன் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில், உபகுப்தன் செட்டியார் ஒரு டோலியையும் டோலி தூக்கிகளையும் கொண்டுவந்து சேர்ந்தார். இதைக்கண்டதும் சியாமசுந்தரன் குதிரைகளையும் சாமான் மூட்டைகளையும் தர்மசாலையிலிருந்து எடுத்துக் கொண்டுவந்தான். இளங்கோ தன் தாயாரை ஒருதரம் அன்புடன் நோக்கினான். அவ்வம்மையை அந்தப் பிரக்ஞையற்ற நிலைமையிலேயே டோலியில் ஏற்றிக்கொண்டு சியாமசுந்தரனும் உபகுப்தனும் அடுத்த கிராமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். ஜிதேந்திரன் சிந்தையில் ஆழ்ந்து அங்கேயே நின்றிருக்கையில், பிரமீளை அவ்விடம் வந்து பிக்ஷுவைக் கண்ணெடுத்துப் பார்த்தாள். பிறகு அத்தியந்த விநயமாய் அன்புடன் மொழிந்தாள்—

"இளம் பிக்ஷு சிரேஷ்டரே, சந்தியாகாலமாகிறது. சுற்றுப்பக்கத்தில் இந்த ஸ்தானத்தைப்போல் ரம்மியமான இடம் வேறொன்றில்லை. நானும் என் சேவகர்களும் இங்கேயே இந்த தர்மசாலையில் இறங்கியிருக்கிறோம். தயை செய்து அங்கே எழுந்தருளத் திருவுள்ளம்பற்றவேணும். அங்கே தேவரீருடைய தர்மகாரியங்கள் நிர்விக்கினமாய் நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும். அன்றியும் தேவரீர் அமுது செய்யவும் திருக்கண் வளரவும் யதேஷ்டமான சௌகரியங்களை அடியேன் செய்து தர ஸித்தமாயிருக்கிறேன்"

மஹாராணியின் வேண்டுகோளைபிக்ஷு ஏற்றுக் கொண்டான். பிரமீளை தருண பிக்ஷுவை இட்டுக்கொண்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் தர்மசாலைக்குள் சென்றாள்.

சூழ்ச்சியில் வல்ல பிரமீளைக்கு இந்தக் கபட நாடகம் புதிதல்லவே!

அவர் பௌத்த பிக்ஷு இன்னானென்பதை அறிந்துகொண்டாளோ?

# கபிலர்

(ஸ்ரீ ரா. முத்தையர் எழுதுவது)

## தோற்றுவாய்

முதல் இடை கடைச் சங்கங்கள் நின்று நிலவிய காலத்தில் தமிழ் வளர்த்த அரசர்களுடையவும் பெரும்புலவர்களுடையவும் வரலாற்றுப் பொதிபொருள் மூடைகள், இன்னும் அனைவரும் ஐயமற அவிழ்ந்து தெளியும்படி அவிழ்க்கப்பட்டில. அதற்குக் காரணம் முன்னோரது செய்கைக் குறைவும் கருத்துக் குறைவுமென்று சொல்லச் சான்றுகளும் வேண்டுவனவோ? மேல் நாட்டார், தம் நாட்டு அரசர், புலவர், ஆராய்ச்சிக்காரர் முதலியோருடைய பொருள், காகிதம், எழுதுகோல், மைப்புட்டி, அவர்கள் எழுதின தினசரிக் குறிப்பு, அவர்களால் இயற்றப்பட்டு முதலில் அவரவர் கைப்பட எழுதிய கையெழுத்துப் பிரதிகள், அவர்கள் இருந்த வீடு, இருக்கை முதலிய சான்றுகளை இன்னும் பொன்னே போலும் கண்ணே போலும் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். அதனாலன்றோ அவர்களது வரலாறும் ஜீவ சரித்திரங்களும் இன்னும் ஐயமற நாமும் கற்று ஆனந்தமடைகிறோம். நம்மனோர் இத்தகைய பேர் உபகாரங்களைச் செய்தாரில்லை. ஆதலால் பல அருமையான நூல்கள் சிதல்வாய்ப்பட்டுப் போய்ப் பெருநஷ்டமடைந்தது மன்றி, ஏதாது நூலாசிரியரின் பெயரும் வரலாறும் நாம் நன்கு அறிய முடியாதபடி பெருங்காற்றில் திசை தப்பிய மரக்கலம் போன்று மயங்கித் தெளிவடையாதிருக்கின்றோம்.

கல்வித் துறையில் கைதேர்ந்து எதிர்காலத்தையும் அறிந்த நம் பெரும் புலவர்கள், தம்மை ஆதரித்த அரசர் முதலானோர்களைப் பாடுகிற பொழுது, நம்பின்னோர் நம்மனோருடைய ஜீவ சரித்திராதிகளைத் தனிமையாகப் போற்றார்' என அறிந்தபோலும்! தாம்பாடுகிற பாடல்களில் தம்மோடொத்த பெரும புலவர்களின் பெருமை முதலிய சிறப்புக்களை வைத்து வைத்தனர். அப் புலவர்கள் பெரும்பாலும் தம்மை ஆதரித்த அரசர்களையே புகழ்ந்து, அவர்கள் குணம், சிறப்பு முதலியவைகளை தோன்றப் பாடியிருக்கின்றனர். அவைகளையே இப்பொழுது சங்க இலக்கியங்களாக நாம் சொல்லுகிறோம். காவியங்களிலும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க் கணக்கு முதலிய நூல்களிலும் சில கதைகளையும் நீதி நூல்களையும் தவிர, பல அரசர்களது வள்ளன்மை முதலிய சிறப்புகளைக் குறித்தே பல புலவர்களால் அப்போதைக்கப்போது பாடப்பட்டவை. இவைகளே இப்பொழுது தமிழ் நாட்டினுடையவும் நாடாண்ட அரசர்களினுடையவும் பல புலவர்களினுடையவும் சரித்திரங்களை அறிய ஆதாரங்களாயிருக்கின்றன. இவைகளும் இன்றேல் சீர் தூக்கும் நாகரீகங்களும் மலிந்திருக்கின்றனவென்று இவர் சொல்லுகிற இக் காலத்தில் நமது தமிழின் நிலைமை எவ்வாறு இருக்குமென்பது அறிஞர் ஊகிக்கத்தக்கது.

இஃதன்றிச் சிலாசாஸன பரிசோதனையினாலும் அயல் நாட்டார் வாணிபத்திற்காக இந் நாடு வந்த குறிப்புகளாலும், இந் நாட்டார் அயல் நாடு சென்று செய்த வர்த்தகக் குறிப்புகளாலும் பெரும்பாலான தமிழ் நாட்டரசர்களின் லக்ஷியங்களும் இப்பொழுது கிடைக்கப் பெற்றுள்ளன. இக் குறிப்புகளை வைத்தே ஆங்கிலேயரும் நம் நாட்டு நாகரீகம், அரசர், புலவர், முதலியோருடைய செயல்கள் முதலியவைகளை ஊகித்தெழுதியிருக்கிறார்கள். அவ்வாறன்றி சங்க இலக்கியங்களிற் கிடைக்கிற சில ஆதாரங்களை வைத்துப் பெரும்புலவரான கபிலரின் வரலாற்றைச் சிறிது சுருக்கி எழுதுவோம்.

வரலாறு

கபிலர் என்ற பெயரோடு கூடியவர். மூவர்.முதலவர், யாகக் குதிரையைத் தேடிப் பாதாளஞ் சென்ற சகரர்களைச் சபித்த கபிலர். மற்றவர் தனுஜ புத்திரர்களில் ஒருவர். மூன்றுமவர்தான் நாம் இப்பொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொண்ட கடைச் சங்கப் புலவர்களில் ஒருவரான கபிலர்.

இலக்கணத்தில் எண்ணல் உம்மைத் தொகைக்கு உதாரணமாக "கபில பரணர்" என்று மேற்கோள் காட்டியிருக்கிறதை நாம் படித்திருக்கிறோம். இஃதன்றி ஏனைய பல வார்த்தைகளிருக்க, இவ் விரண்டு வார்த்தைகளையும் ஒன்று சேர்த்த காரணத்தைச் சிலரே நன்கறிவார். "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்கிறபடி நம்மனோர் ஒவ்வொரு சொல்லிலும் அச் சொற்கள் சேர்த்த சொற்றொடர்களிலும் ஒவ்வொரு நுட்ப உண்மைகளையே அமைத்திருக்கின்றனர். அவைகளை ஆராய்ந்தால் உண்மைகள் தெள்ளற விளங்கும். அவ்வாறு ஆராயுங்கால் இவ் விருவரும் மிக்க கல்வி கற்றுத் தேர்ந்த ஒத்த அறிஞர். முன்பு சிறுகாலம் கல்விச் செருக்கினால் ஏற்பட்ட பகையுடையவராய்ப் பிறகு இணைபிரியாத அகாத நட்புடையவராயினர் என்பது புலப்படுகின்றது. ஆகலால் இது போல ஒவ்வொரு உதாரண மேற்கோளையும் உதாரண மாத்திரத்திரத்தில் வைக்காது ஆராயவேண்டும். நம்மனோர் இதுபோலவே நாம் பொருளில்லை யென்று தள்ளுகிற சிறு வார்த்தைகளிலும் பெரும் பொருள்களை வைத்திருக்கிறார்கள். இவ்வாறு காலம் போக்காது மேற் செல்லுவோம்.

முதலாக இவரது பிறப்பு வளர்ப்பைப் பார்ப்போம். பகவனென்னும் பிராமணனுக்கு ஆதி என்னும் பெண் வயிற்றில் இவர் பிறந்தனர். அவர்கள் நியமனப்படி பிறந்தவுடனே ஏனைய குழந்தைகளை விட்டகன்றது போல இவரையும் சோழ நாட்டில் ஓர் ஆற்றங்கரையில் விட்டகன்றனர். திருவாரூர் பிராமணர்களில ஒருவர் இக் குழந்தையின் அழகு முதலிய தோற்றங்களைக் கண்டெடுத்து அன்பாகத் தன் குழந்தை போல வளர்க்க வளர்ந்தவர். கபிலர் என நாமஞ்சூட்டி முறையாக வித்தியாரம்பஞ்செய்ய இவரும் கற்று வந்தார். அப்பால் இவருக்கு உபநயனஞ் செய்யவேண்டுமென்று வளர்த்த தந்தையார் தொடங்க ஊர் அந்தணர் "காட்டுக் கோழிக்குச் சங்கராந்தி என்னே" என்றதுபோல, இப்பிள்ளை நம் மரபில் பிறந்ததல்லாமையால் உபநயனம் ஏது! செய்யக்கூடாதெனமறுக்க,பிராமணன் மனங் கலங்கி நின்றதைக் கண்ட கபிலர், கடவுள் திருவருள் பெற்று அவ்வேதியர் கூட்டத்திற் சென்று ஓர் அகவல் பாடி போதிப்பித்தனர் என்பார். அப்பாட்டில்

அருந்தவ மாமுனியாம் பகவற்குக்
கருவூர்ப் பெரும்பதிக்கண் பெரும் புலைச்சி
ஆதி வயிற்றினில் அன்று அவதரித்த
கான்முளை யாகிய கபிலனும் யானே"

எனவும்,

"பாரூர் நீர் நாட்டு ஆரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்"

எனவும்,

"சிறப்பும் சீலமும் அல்லது
பிறப்பு நலம் தருமோ பேதையீரே"

எனவும் இறுதியுடைய பாடலைப் பாடியருளினர் என்பர். அப் பாடலில் வேத இருடிகளின் பிறப்புகள் முதலிய அரிய பொருள்கள் அடங்கியிருக்கின்றன. இவ் வழியாகப் பார்க்கிறபொழுது இவரோடு கூடப் பிறந்தவர் இவர் வாக்குப்படி

"என்னுடன் பிறந்தவர் எத்தனை பேர் எனில்
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்"

ஆண்பாலர் வள்ளுவர், அதிகமான், கபிலர், என மூவரும், உப்பை, உறுவை, ஔவை, வள்ளி யென பெண்பாலர் நால்வரும் ஆக இவரோடு எழுவர் ஆகின்றனர். நிற்க.

இப் பாட்டினாலே கன்மத்தாலன்றிச் சென்மத்தால் சாதி யென்பதொன்றில்லையெனச்சித்தாந்தம் செய்தருளி

ளர். பின்னர் அந்தணர் அனைவரும் உட்கொண்டு அதே விதிபாகக் கபிலருக்கு உபநயனச் சடங்கு நிறைவேற்றியருளினர். சிறு வயது முதலேயே தக்க ஆசிரியரிடம் தெள்ளறக்கற்றுத் தேர்ந்து பாடல் புனைவதிலும் இணையற்ற நிபுணராய்,பருவகாலத்தே கடையெழு வள்ளல்களில் மிக்க கொடையினுல் மேம்பட்ட "பாரி" யினிடம் பிரியா நட்புக் கொண்டனர். இவை ஒருபால் இருக்கட்டும். சங்க இலக்கியங்களில் கிடைக்கிற ஒன்றிரண்டு தெளிவுகளை வைத்து மேற் கொள்கைகளை அறிவோம்.

இவரால் பாடப்பட்ட அரசர் பாரி முதல் பலர்.அவர்களில் இவர் இருங்கோ வேளையும் விச்சிக்கோனையும் பாடுகிறபோது முறையே தன்னை "அந்தணன் புலவன் கொண்டுவந்தனனே"(புறம் ௨0௧) "யானே, பரிசிலன் மன்னும் அந்தணனெனவும், புலவன், பரிசிலன்" எனவும் கூறுகின்ருர்.

இதுவன்றி மலையமான் திருமுடிக்காரியை கப்பசலையார் பாடும்போது, காரி! நினது புகழை,

"புலனழுக் கற்ற அந்த ணாளன்
இரந்து சென் மாக்கட்கு இனி இட னின்றி
பரந்து இசை நிற்கப் பாடினன்" (புறம் ௧௨௬)

'மாசற்ற அறிவையுடைய அந்தணனுகிய கபிலன் இரந்து செல்லும் புலவர்க்குப் புகழ்தற்கு இடமில்லை யாகும்படி பரந்து புகழ் நிற்கப் பாடினன்' எனக் கூறியிருக்கின்றனர். இதனுல் இவர் அந்தணர் எனத் தெரியவருகிறது. இக் கப்பசலையாரே திருக் கண்ணனைப் பாடுகிற பாடலில் "பொய்யா நாவிற் கபிலன் பாடிய மையணி நெடுவரை" (புறம் ௧௭௪) எனப் புகழுகிறதினுலே நாவினுல் பொய் சொல்லாதவரெனவும் விளங்குகின்றது.

இவரது புலமைத் திறத்தை அடியில் வரும் உதாரணங்களால் நன்கு விளங்கும். முதலில் இவரால் பாடப்பட்ட பாடல்களே முதற் சாக்ஷியாகும். வேறு சான்று காட்டுதல் மிகையே யாம். ஆயினும் இவரோடொத்த புலவரின் அபிப்பிராயம் என்னவெனக் கவனிப்போம். இக் காலத்துப் புலவர்களைப் போல அப்புலவர்கள் "கொடுக்கிலாதானைப் பாரி"யென்றும் "தருக்காவலாய்" என்றும் கூறமாட்டார்கள். வர்ணனையில் உத்பிரேக்ஷை, உவமை முதலியவைகள் கூட பெரும்பாலும் உய்த்துணர்வவில் திறத்திவிடாமல் அனைவரும் கண்டவைகளை வைத்தே புனைவார்கள். ஆதலால் உண்மைப் பொருள்களையே கூறுவர் என்பது தேற்றமாகின்றது. இவ்வாறு கவி புனைவதில் நம்து கபிலர் கைதேர்ந்தவர்.

இளங்கீரனுர் என்பவர் சோழன் மாந்தரஞ்சேரலிரும்பொறையைப் பாடுகின்ற பாடலில்,

................................"தாழாது
செறுத்த செய்யுள் செய் செந்நாவில்
வெறுத்த கேள்வி விளங்குபுகழ் கபிலன்"
(புறம் ௫௩)

அதாவது'பலபொருள்களையும் அடக்கிய் செய்யுள்களைச் செய்யும் செம்மையான நாவினையும், மிக்க கேள்வியையும், விளங்கிய புகழையுமுடைய கபிலன்' எனப் புகழ்ந்திருக்கிருர். அதிலும் குறிஞ்சித் திணைப் பொருள்களை அமைத்துப் பாடுவதில் இவர் நிகரற்ற மேதாவி. "கற்றறிந்தோர் போற்றும் கலித் தொகை"யில் குறிஞ்சிக் கலியைப் பாடியவர் இவரே. ஆதலால் "கருதும் குறிஞ்சி கபிலன்" என அடை கொடுத்தார்.

தற்காலத்தில் தமிழ் ஒன்றையே கற்ற பெரிய வித்துவான்களின் புலமையை அறிந்து ஆதரிப்பாரின்மையால் அவர்கள் "அட்டெடுவாய் பல தொழிலு மிருக்க கல்வி யதிகமென்றே கற்றுவிட்டேன் அறிவில்லாமல், நடமுலை வேசியராய்ப் பிறந்தோமில்லை, களைக்கூத்தாடக் கற்றோமில்லை, செப்படிவித்தைகளாடத் தெரிந்தோமில்லை" என்று தன்னைத்தானே சொல்லிக்கொள்கிறதைப் போலன்றி, அக் காலத்தில் அரசர்களும் தம் நாட்டில் தம்மைப் புகழ்ந்து பாடிய புலவர்களுக்குத் தகுந்த பரிசுகளளித்து, அவர்களையும் தம்மைப் போல எண்ணி எப்பொழுதும் தம் பக்கத்தே வைத்து, அவர் மொழியும் அறமொழிகளைக் கேட்டு ஆதரித்து வந்தனர். இதற்குச் சான்றுகள் பல காணப்படுகின்றன.

விரித்தால் பெருகுமென விடுக்கின்றேன். நம் கபிலரும் அதுபோல எவ்வரசனைப் பாடி எத்தகைய பரிசு பெற்றனர் எனப் பார்க்கும் பொழுதும் கேட்கும் பொழுதும் பெரு வியப்படைந்து ஸ்தம்பித்துவிடுவோம் என்பது திண்ணம். இவர் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் புகழ்ந்து பாட, அவன் மிகக் களித்து; அப் பாடலை ஏற்றுக்கொண்டு அதற்குப் பரிசாக நூறாயிரம் காணமும், (பொன்னும்) நன்றா வென்னும் குன்றின் மேல் ஏறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடுகள் அனைத்தையும் கொடுக்கப் பெற்றவர். கூழுக்கும் பாடியிருக்கிற அக்காலத்தில் புலவரின் ஏற்கையும் மன்னரின் கொடையும் எத்தன்மைத் தென்பதை கண்டு கருதத் தக்கதே.

தவிரவும் அவனைச் சூரியனுக்கு ஒப்பிட்டுப் பார்த்து அரசனுக்கு மிகுதிப்பாடு இருப்பதால் சூரியனிறும் மேம்படுத்திக் கூறுகிறார். ஒரு நாள் இவ்வரசன் கபிலரது கைகளைப்பற்றி, நுமது கைகள் மெல்லியனவாயிருக்கின்றனவே என்று சொல்லக்கேட்ட கபிலர், பெருமானே! உமது கைகள் யானையை யடக்க அங்குசத்தைப் பிடிக்கவும், குதிரையின் பிடரி மயிரைப் பிடிக்கவும், வில் நாணில் அம்பை வைத்துச் செலுத்தவும், பரிசிலர்க்கு ஆபரணங்கள் கொடுக்கவும் வலியவாயிருக்கின்றன. பின்னை பாடுவாரது கைகளோ ஊனையும், துவையையும், கறியையும், சோற்றையும் உண்டு வருத்தப்படுகிறதைத் தவிர வேறு வருத்த மறியாவாயின. ஆகலால் இதன் தன்மை அறிவாயாகவென்றனர். இக் கேள்வி விடையினாலும், இவர்க்குக் கொடுத்த பரிசுகளினாலும் இவ் விருவருக்கும் ஏற்பட்ட நட்பும் ஆதரவும் நன்குவிளங்கும். குளிர் தாங்காத மயிலுக்குப் போர்வையளித்த வையாவிக்கோப் பெரும் பேகன், தன் மனைவியான கண்ணகியாரை ஒருசமயம் தள்ளிவிட கபிலரும் அவனைப் புகழ்ந்து குறைவேண்டி மறுபடியும் அவளை அவனோடு சேர்த்து வைத்தார். இக் காரியத்திற்கு இவரோடு சேர்ந்து பரணர் அரிசிற் கிழார், பெருங்குன்றூர்க் கிழார் முதலியோரும் பேகனை வேண்டிப் பல துறைபடப் பாடினர். இவன் பரிசிலர்க்கு யானைகொடுக்கிறகொடையாளி. இவனை,

மணநாறு மார்பின் மறப்போர் அகுதை
குண்டுநீர் வரைப்பிற் கூட லன்ன"

என்று இவனது ஊர் பெயர் முதலிய பிறவும் கபிலர் புகழ்ந்திருக்கிறார். இவர்களை யன்றி வேறு சிற்சிலரையும் இவர் ஆங்காங்கு புகழ்ந்திருக்கிறார்.

அப்பொழுது இவ்வாறு மன்னர்கள் மட்டுக்கடங்காத வரிசைகள் வழங்கினதாலன்றோ புலவர்களும் தட்டுத் தடங்கலின்றி செம்பொருளமைந்து உணர்ச்சியோடு கூடின பாடல்களைப் பாடி வைக்க, நாமும் இப்பொழுது அக்காரை அடிசில் அயின்றதினும் அதிகமாக நன்று நன்றெனச் சொல்லிச் சிரக்கம்பமும் கரகோஷமும் செய்கின்றோம். நிற்க, வாழியாதனைப் பாடின பாடல்களே இப்பொழுது பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தாக விளங்குகின்றன. அவைகளின் ஆராய்ச்சியைத் தனிமையாக எழுத வேண்டும். பரிசில் கொடுத்தவர்களை ஏற்றுதலுமன்றி தக்க பரிசில் தக்கபடி கொடாதாரைக் கொடுக்கும்படி செய்விக்கிறதும் கபிலர் குணமென்பதும் அடியில் வரும் குறிப்பால் விளங்கும்.

மலையமான் திருமுடிக்காரியிடம் இவர் பரிசில் பெறச் சென்றபோது, அவன் வரிசை யறியாது கொடுத்த விடத்து, அவனைப் பார்த்து "ஈவோனே! வள்ளியோனாகிய ஒருவனை நினைத்து நான்கு திசைகளிலிருந்தும் பரிசு பெறுவோர் பலரும் வருவர். அதில் அவரவர் வரிசை யறிதல் அரிது, கொடுத்தல் எளிது. நீ வரிசை யறிதலை நன்றாய் அறிந்தாயாயின் அறிவுடையோரிடத்தில் வரிசையைக் கருதாமல் ஒருதரமாகப் பார்த்தலைத் தவிர்ப்பாயாக" என்னும் பொருள்பட்ட (புறம் ௧௨௧) பாடலைப் பாடினர் என்று தமிழ் நாவல் சரிதை கூறும். தவிர, தமிழின் மணம் அறியாத ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவுறுத்த வேண்டிக் குறிஞ்சிப்பாட்டை பாடியருளினர். அது பத்துப் பாட்டில் எட்டாவது பாட்டாக விளங்குகின்றது. என்னே! அக்காலத்துப் புலவர்களின் தமிழ் அபிமானம்.

இவர் குறுந்தொகையில் கடை எழுவள்ளலான ஓரியென்னும் அரசனது கொல்லி மலையையும், காரி

அரசனது முன்னூர்க்கானத்தையும் மிக்க சமத்காரமாக வர்ணித்துப் புகழ்ந்துள்ளார். நற்றிணையில் காரி தாசன் தன் காரியென்னும் குதிரையின் மேலேறி நிரை கவர்தலையும், தன் பகைவனான ஓரியரசனைக் கொன்ற வரலாற்றினையும் பிறவும் அமைத்துப் பாடியுள்ளார். கபிலம் என்னும் நூலும், பதினெண் கீழ்க்கணக்கில் இன்னா நாற்பது என்னும் நீதிநூலும், அகநானூறில் ஏறக்குறைய பதினெண் பாடல்களும், புறநானூறில் ஏறக்குறைய முப்பது பாடல்களும் பிறவும் இவரால் பாடப்பட்டன. அகநானூறில் அகப்பொருள் துறைகளைப் பொதிந்து புனைந்திருக்கிறார். புறநானூறில் பெரும்பாலன பாரியைக் குறித்தனவேயாம். இவ்விரண்டிலும் கிடைக்கிற ஆதாரங்களை வைத்து இவர் பாரியோடு நடந்துகொண்டதையும் இவரது செயல்களையும் சிறிது எழுதி நிறுத்துவோம்.

பாரி தனது அளப்பருஞ் செல்வத்தைப் பரிசிலர்க்கு வரையாது கொடுத்தே செலவுபண்ணிக் கொண்டிருந்தான். அவ்விபரத்தை

> "பழிப்பது போல பான்மையின் மேன்மை
> புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி"

என்ற இலக்கணத்திற் கிணங்கப் பாரியைப் பழித்துச் சொல்கின்றது போல அவன் புகழ் முதலியன புலப்படக் கூறுகிறார். அது வருமாறு

> "பாரி பாரி என்று பல ஏத்தி
> ஒருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
> பா[ரி] ஒருவனு மல்லன்
> மாரியும் உண்டு ஈங்கு உலகு புரப்பதுவே"

அதாவது, 'செந்நாப் புலவர்கள் பாரி பாரி என்று ஒருவனையே புகழ்ந்து கூறுகின்றனர் உலகத்தைக் காப்பதற்குப் பாரி என்ற ஒருவனும் அன்று மழையுங்கூட உண்டு' என்பதாம்.

பாரியினது சிறப்பான கோட்டையையும், நால்வகை வளங்களும் பொருந்தின அவனது பறம்பு என்னும் மலையையும், மூவேந்தரும் கைக்கொள்ள வேண்டுமென வந்து சூழ்ந்து கூடாரங்கள் அடித்திருந்ததைக் கண்ட நம் புலவரான கபிலர் அவரிடம் சென்று 'மன்னர்காள் உங்கள் யானை, தேர், குதிரை, வாள் முதலியவைகளின் பலத்தினால் பாரி தனது உடைமையாகிய நாட்டையும் மலையையும் தாரான். ஆனால்,

> "முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நல் நாடு
> முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்
> யாமும் பாரியும் உளமே
> குன்றும் உண்டு"

அதாவது, 'ப[ற]ம்பு நாடு முந்நூறு ஊர்களை யுடையது அவையனைத்தையும் [ப]ரிசிலர் பெற்றனர்; இப்பொழுது யாமும் பாரியும் உளோம். இப் பறம்பு மலையும் உண்டு. ஆதலால்,

> "அளிதோ தானே பேர் இருங் குன்றே
> வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே
> நீலத் திணைமலர் புரையும் உண்கண்
> கிணைமகட்கு எளிதால் பாடினள் வரினே"

அதாவது, 'பெரிய குன்றத்தை இரங்கத்தக்கது; வேலினால் வெல்லுதல் வேந்தர்க்கு அரிதாகும்; மையுண்ட கண்ணையுடைய விறலி [ப]ாடிக்கொண்டு வருவாளானால் அவட்கு எளிதாகும்' என்று அறிவீர்கள். பாரியிடமிருந்து நீங்கள் அவைகளைக் கைக்கொள்ள வேண்டுமானால்

> "யான் அறிகுவன் அது கொள்ளும் ஆறே
> சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
> விரையொலி கூந்தல் நும் விறலியர் பின்வர
> ஆடினர் பாடினிர் செலினே
> நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே"

அதாவது, 'நீவிர் முறுக்கான நரம்பினையுடைய சிறிய யாழைப் பண்ணி வாசித்து, நுமது மனைவியர் விறலியராகப் பின்வர, ஆடிப்பாடிச் செல்வீரானால் பாரி நுமக்கு நாட்டையும் மலையையும் பரிசிலாகக் கொடுப்பான்' என பாரியைப் புகழ்ந்து மூவேந்தரையும் மதியாது கூறினார். அது கேட்டு [illegible] சென்றனர் என்பார்.

பாரிக்கு இரண்டு பெண்மணிகள் உளர். அவர்களும் விதவைகளென்றே அறியப்படுகிறது.

இப் பெண் மணிகளின் இயற்கை யழகைப் பார்த்தே தேவ மாதரும் செயற்கையழகு புனைந்து கொள்வார் என்று சொல்லலாம். மூவேந்தரும் அப் பெண்மணிகளைத் தந்தமக்கு மணஞ் செய்து தரவேண்டுமென்று வேண்டினார்கள். அதற்குப் பாரி மறுத்த தன் காரணமாக மூன் படையோடு சேர்த்து முன்னிலும் அதிகமாகச் சினங்கொண்டு, அவனைப் பகைத்தும் பறம்பு மலையை வளைத்துக்கொண்டார்கள். அப்பொழுது உள்ளே உணவில்லாது வருந்திய பாரி முதல் அனைவருக்கும் உணவளிக்க, கபிலர் கிளிகளால் செங்கதிர்களைக் கொண்டு வரச்செய்து கொடுக்க, அனைவரும், கதிர்களால் வரப்பட்ட நெல்லைக் குத்தி அரிசியாக்கிச் சமைத்து உண்டு சிறுகாலம் சுகமடைந்தனராம். இவ் விவரம் அகநானூறில்,

“உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செய் நெல்லின் விளைகதிர் கொண்டு
தடந்தாள் ஆம்பல் மலரொடு கூட்டி
யாண்டு பல கழிய வேண்டுவயிற் பிழையாது
ஆளிடூஉக் கடந்து வாளமர் உழக்கி
எந்துகோட்டு யானை வேந்தர் ஓட்டிய
கடும்பரிப் புரவி கைவண் பாரி”

என்ற நக்கீரர் வாக்காலும்;

“உரைசால் வண்புகழ் பாரி பறம்பில்
நிரைபறைக் குரீஇ இனம் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெல் தரீஇயர் ஓராங்கு
இரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்ந்த தாங்கு”

என்ற ஔவையார் வாக்காலும் நன்கு அறியக் கிடக்கின்றது. இத்தகைய அறிவு குறைந்த விலங்குகள் மூலமாகப் பெருங்காரியம் நடத்தின அற்புதத் தெய்வ வலிமை வேறெந்தப் புலவருக்கும் இருந்ததாகத் தெரியவில்லை.

இவ்வாறு மூவேந்தரும் நாளுக்குநாள் தாக்கித் தன் புறத்தி லா இறுதியாகப் பாரியை, ‘தங்களது கொடை வீரம் முதலிய பண்புகள் பாரி ஒருவன் இருத்தலினால் சூரியன் முன் மின் மினி போலாயின என நினைத்துப் போலும்! வாளுக்கிரை யாக்கினர். என்னே அரசரின் கொடுமை! என்னே அரசரின் பொறாமை! நீதி தவறாமல் செங்கோல் கோணாமல் அரசாண்டு குடிகளிடம் ஓர் சிறு குற்றம் காணினும் தண்டித்த ஆண்ட அரசரும் “இமைதான் பிறரைக் காத்துத் தான் செய்தாற் றீதன்றுமோ” என்கிறபடி தம் விஷயத்தில் நடுவுநிலைமை நீங்கினர் போலும். பிறகு பறம்புமலையையும் வேந்தர் கைக் கொண்டனர்.

தன் கண்மணி போலும் பாரியைப் பறிகொடுத்து விட்டுக் கபிலரும் பாரியின் மகளிரான இரண்டு பெண்களுமே தனித்தனர். இப் பெண்மணிகள் பாரியைக் கொல்ல வந்த மூவேந்தருடைய குதிரைகளைக் கண்டு அதிசயத்து பறம்பு மலையில் மேலேறி அக் குதிரைகளை எண்ணிக்கொண்டிருந்ததைக் கண்ட கபிலர் மனவருத்தப்பட்டு தம் தந்தைக்கு வந்திருக்கும் துன்பத்திற்கு வருந்தாமல்,

“அண்ணல் நெடுவரை யேறித் தந்தை
பெரிய நறவிற் கூர்வேற் பாரியது
அருமை அறியார், போரெதிர்ந்து வந்த
வலம்படு தானை வேந்தர்
பொலம்படைக் கலிமா எண்ணு வோரே”

பகைவரின் வகைக் குதிரைகளைக் கண்டு ஆச்சரியங் கொண்டு எண்ணிக்கொண்டிருக்கிறார்களே என்றும் பாடியிருக்கிறார். பிறகு பாரியின் வெற்றி, கொடை, நாடு, மலை, முதலியவைகளைக் குறித்துப் பலவாறாகப் புகழ்ந்து பாடியிருக்கிறார்.

மேல் வருஞ் செயல்களை நோக்கி இப் பெண்மணிகளைக் குறித்து இரண்டொரு விஷயம் கூறுதல் மிகையாகாதென நினைக்கிறேன். அத்திரி முனியின் மனைவியான அனுசூயையின் கற்பை வெளிக்குக் காட்ட வேண்டியும், கற்புடையவளை மும்மூர்த்திகளும் ஒன்றும்

செய்ய முடியாதென்றும் உலகத்தாருக்கு விளக்கிக் காட்ட வேண்டியும் நாரதர் இருப்புக் கடலையை வேக வைத்து வாங்கினர் எனக் கேட்டிருக்கிறோம், படித்து மிருக்கிறோம். அதைப் போல இப் பெண்மணிகளில் ஒருத்தி, மழை பெய்யாமல் வறந்த பஞ்ச காலத்தில் ஓர் பாணன் சோறு பெறாமல் வந்து யாசிக்க, உலையில் பொன்னைப் பெய்து சோறாக்கிக் கொடுத்தனளாம். இச் செய்தி அடியில் வரும் வெண்பாவால் விளங்கும்.

"மாரியோன் றின்றி வறந்திருக்க காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுள்
பொன்றந்து கொண்டு புகவாக நல்கினள்
ஒன்றாற மூன்றிலோ வில்".

தவிர இப் பெண்மணிகளும் கற்றுத் தேர்ந்து கவிபாடு தலில் வல்லமையுடையவரெனவும் விளங்குகின்றது தம் தந்தையை இழந்த மாதங்கள் சென்ற பிறகு அச் செயலை நினைந்து வருந்திப் பாடினதாக ஓர் பாட்டுத் தென்படுகின்றது. அதன் பொருள் அறிஞர் வியக்கத் தக்கதே யாகும்.

"அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம், எம் குன்றும் பிறர்
[கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்
வென்று எறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எம் தந்தையும்
]இலமே.'

இப்பேர்ப்பட்ட வருந்திய தந்தையின்றித் தாரகமில்லா பெண்களையும் அழைத்துக்கொண்டு, இப் பெண்களுக் குத் தக்க கணவனைத் தேடிக்கொண்டு போகிறபொ ழுது பறம்புமலையைவிடுத்துப் பாடுகிறார்.

பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும்; வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே"

பறம்புமலையே நீடூழிவாழி பாரி மாய்ந்தனனாக யான் நீரை ஒழுகு கண்ணையுடையவனாய் உன்னைத் தொழுது புகழ்ந்து இப்பெண்களின் நிறைந்த கூந்தலைத் தொடு தற்கு உரித்தானவரைத் தேடிச் செல்கின்றேன். என இத் தொடக்கத்தன பலபாடல்களால் அழுது கொண்டு செல்கின்றபொழுதே அந் நாடும் மலையும் தங்கண்ணுக்கு மறைகிற மட்டுக்கும் புகழ்ந்து கூறியிருக் கிறார்.

இப் பெண்மணிகளோடு சிற்றரசனாகிய விச்சிக்கோனி டம் சென்று அடியில் வருமாறு பாடியிருக்கிறார். அதா வது.

"விளங்குமணிக் கொடும்பூண் விச்சிக் கோவே!
இவரே, பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடாதாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்
யானே, பரிசிலன் மன்னும அந்தணன் நீயே,
வரிசையில் வணக்கும் வாள் மேம்படுந;
நினக்கு யான் கொடுப்பக் கொண்மதி"

'விச்சிக்கோவே! இப்பெண்கள் தன்னைப் புகழ்ந்து பாடாத முல்லைக்கொடிக்குத் தன்தேரையளித்த பாரி யின் மகளிர்யானோ பாடிப்பரிசுபெறும் அந்தணன். நீயோ, பகைவரை வணங்கச்செய்யும் வாள் தொழிலில் சிறந்தவன். இவர்களையான் நினக்கு மனைவியாகக் கொடுக்க நீ கொள்வாயாக' என்று வேண்டினர். அதற்கு அவன் மறுத்தமைக்கண்டு அவனை வெறுத்து விட்டு, அவரை யழைத்துக்கொண்டு இருங்கோவேளி டைச் சென்று

நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றி
செம்பு புனைந்து இயற்றிய சேண்நெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறல்போர் அண்ணல்
தாரணி யானை சேண்இருங்கோவே"

'வெற்றிப் போரையும் மலையையும் உடைய பெரிய இருங்கோவே! நீ வடபக்கத்து முனிவனுடைய ஓம

குண்டத்தில் தோன்றி, செம்புக்கோட்டையையுடைய துவாரகையை ஆண்ட நாற்பத்தொன்பது தலைமுறை தொன்று தொட்டு வந்தவேள்களுள் வேளாயுள்ளவன்.

“இவர் யார் என்குவையாயின், இவரே,
ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்லிசை
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர்”

‘இப் பெண்மணிகள் யார் என்பாயாகில் தனது ஊர் எல்லாவற்றையும் இரப்போர்க்கு அளித்ததுமன்றி தன்தேரையும் குதிரையோடுகூட முல்லைக்கொடி ஏறிப், படர்தரதுக்கொடுத்த யானையையுடைய பறம்புக்குத் தலைவனான பெரியபாரியின் மகளிர்.

............................................யானே
தந்தை தோழன் இவர் என் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே”

யானோ இவர் பிதாவின் தோழனாதலால் இவர் என்னுடைய மகளிர். அந்தணனாகிய புலவன் இவர்களைக் கூட்டிக் கொண்டு வந்தேன் ஆதலால்,

“யான் தர இவரைக் கொள் மதி”

யான் இவரை உனக்கு மனைவியராகத் தருகின்றேன், இவரைக் கொள்வாயாக’ எனப் புகழ்ந்து வேண்டினர். இதைக்கேட்ட இருங்கோவேளும் மறுத்ததைக் கண்டு அவனையும் வெறுத்து “கழாத்தலையார் என்னும் புலவரை உன் குலத்தோர் வெறுத்தமையால் உன் குலத்துக்கு வந்த கேட்டைப் போல, என் சொல்லையும் இகழ்ந்த உனக்கும் கேடு வரும் என்றுகுறிப்புப்பொருள் படும்படி பாடிவிட்டு

யாராகுவர் கொல் தாமே சேரிசுழ
யுரித்தல் பல் சுணங்கு அணிந்த
மருப்புஇள வனமுலை ஞெமுக்குவோரே”

பெண்களும் முதிர்ந்தனர், இனி இவர்களின் இளமுலைத் தடத்தில் தோய்வார் யாரோ எனவருந்திச் சென்றனர்.

இவ்வாறு தேடிச் சென்று இறுதியில் அப் பெண்களைப் பிராம்மணர்க்கு மணஞ் செய்து கொடுத்தனர். அதன் பிறகு தானும் “இதற்கு மேல் (பாரியைப் பிரிந்து) எனக்கு இப் பூமி வாழ்க்கை வேண்டுவதில்லை. யானும் பாரியோடு கூடவே இருப்பேன்” என்று எண்ணி, “பறம்புக்குரிய பாரியே யாம் இருவரும் கலந்த நட்புக்குத் தக்கவாறு நடக்காமல் நீ என்னை முன்னதியாகவே வெறுத்தாய். யான் நின்னோடு உயிர் விடாததால் நட்புக் கொள்ளத் தகுதியில்லை னாயினும், இப் பிறப்பில் யாம் இருவரும் கூடி இன்புற்றிருந்தவாறுபோல மறு பிறப்பிலும் கூடி வாழ்தலை உயர்ந்த விதி கூட்டுவதாக” என்று பொருள் கொண்ட பாடலை பாடிவிட்டு வடக்கிருந்து உயிர் துறந்தனர்.
இவ்வாறன்றி,

“புதுமத மிடறி பொரக்கலிங் கிடந்து
மொதுமொது முத்தினா விலக்கிக் கதுமன
வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென்கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலும் முத்தமிழ் கபிலன்
மூரிவண் தடக்கைப் பாரிதன் அடைக்கலப்
பெண்ணை மலையர்க்குதவி, பெண்ணை
அலைபுனல் அழுவத்து அந்தரிகூம்செல
மினல் புகு வீடுபே றெண்ணிக் கனல் புகும்
கபிலக் கல்லது”

என்னும் திருக் கோவலூர் சிலாசாஸனத்தால் “தம்மகளிருள் ஒருத்தியை திருக்கோவலூர் மலையனுக்கு மணஞ்செய்து கொடுத்துவிட்டு.பெண்ணை யாற்றின் நடுவில் ஒரு பாறையில் தீ வளர்த்து அதில் புகுந்தனர்” என வெளியாகின்றது. (செந்-தொகு-௪-பகுதி. பக் ௨௬௨)விரித்தால் இம் மட்டோடன்றி வளர்ந்து உரை பெருகுமாதலால் ஈண்டு சுருக்கி எழுதப்பட்டது.

# குடி அரசும் இந்தியாவும்

(திரு ச. செல்லம் எழுதுவது)

குடியரசில் ஆசை கொண்ட ஒரு கூட்டம் உலகத்திலுண்டானது ஆங்கில ஆட்சியால் வந்த நாகரிகத்தின் தோற்றமென்று சிலர் கருதுகிறார்கள். இவர் கொள்கை உறுதியற்றதென்று நமது முன்னோரின் ஆட்சி முறையின் தன்மையாலுணரலாம். இதை நூல்களாலும் நமது நாட்டிற்கு வந்த யாத்திரிகர்களுடைய குறிப்புகளாலும் அறியலாம். உலக விவகாரத்தில் எப்பொழுதும் கலந்து புகழத்தக்க முன்னேற்றத்தை யடைந்த மேனாட்டவரினும், மேலான ஆன்ம விசாரணையில் அறிவைச் செலுத்திக் கேவலம் பண்டாரப்பாட்டுப் பாடித் திரிந்த பண்டையப் பாரதியர் ஆட்சிமுறையில் தலைமை பெற்றதெனக் கருதும் குடியரசை அனேக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கைக்கொண்டு ஒழுகினரென்பதை யறிய நமக்குப் பெரிய உணர்வுண்டாகுமல்லவா?

குடியரசைப் பற்றி கி—பி க—ம் நூற்றாண்டு வரையிலும் மேனாட்டவர் அறிந்ததாகச் சரித்திரத்தில் காணவில்லை. ஆனால் கிறிஸ்து பிறப்பதற்கு அனேக ஆண்டுகளுக்கு முன்பு சிறப்புற்று வாழ்ந்த பாரத நாட்டிலுள்ள ஆசிரியர்கள் ஆட்சி முறையைப்பற்றிக் கூறியுள்ள தத்துவங்கள் தற்போதைய ஆசிரியர்களுக்கு அதிசயத்தை யுண்டுபண்ணத் தக்கனவே. பண்டைய ஆசிரியரில் முதல்வனும் கௌடில்யன், ஆட்சி முறையைப் பற்றி விரிவாக தன் சாத்திரத்தில் கூறுகிறான். அவைகள் தற்காலப் பண்டிதர்களுக்குத் தெரியாதன. வியாழனால் நடத்தப்பட்ட கலவிச் சாலையில் ஆட்சி முறையையும் தனசாத்திரத்தையும் முக்கியமாய்க் கற்றுக் கொடுத்தனர். இந்திய ஆட்சி முறைக்குப் பெரிய உயர்வு கொடுத்திருந்தார்களென்பதற்கு இராமாயணம், பாரதம், நைடதம் முதலியன ஆழ்ந்து வாசிப்போர் கொள்கை சான்று பகரும். நீதி நூல்கள் யாவருடையவும் சமுதாயத்தினுடையவும் பலத்திற்கு இன்றியமையாததென்று வெள்ளி கூறுகிறார். காமந்தகனென்பவரது கொள்கை முன்னையதோடு பொருந்துகிறது. கௌடில்யன் தனசாத்திரத் தத்துவங்கள் கண்ட போதிலும் அவைகளை மனு, வியாழன், சுக்கிரன், யாக்ஞவல்கியன், காமந்தகன், சோமதேவன், நீலகண்டன், முதலியோர் அதை நிலை நாட்டினார்கள். காவியத்திற்குப் பிறகு ராமதாஸர் சீர்திருத்தினர். பிறகு சிவாஜியும் பெஷ்வாக்களும் அதைப் பயன் படுத்தினார்கள்.

எந்த நாட்டினுடைய பழைய சரிதங்களைப் பார்ப்பினும் மனித வாழ்க்கையின் தொடக்கத்தில் அரசன் இல்லையென்றுப் புலப்படும். காலத்தினுடைய நிலைமாறி வரும்போது மனிதர் மனோநிலையும் மாறி, பேராசை பொறாமை முதலிய கெட்டகுணங்களால்ஒருவருக்கொருவர்சண்டையிடவே தண்டனைக்கு இன்றியமையாத காலமும் அணுகியது. அக்காலத்தில் நியாய பரிபாலனத்தின் பொருட்டே அரசனுண்டானான். மற்ற மனிதர் அவன் கட்டளைப்படி நடப்பதற்கு சித்தமாயிருந்தார்கள். இவ்விதம் அரசு உலகத்தில் முதலில் உண்டாயது. 'குடிகளுக்கு உவகை யூட்டுவோன் கொற்றவன். முன்னையராட்சி மிகவும் மேன்மையாக விருந்தது. மறையவர் முதல் பறையர் வரை யாவரும் ஆட்சி முறையிலுண்டாகும் குறைகளைக் கூற உரிமையுண்டு. ஜனங்கள் அரசனைத் தேர்ந்து எடுப்பார்கள். மனி

பதித்த மகுட மணிந்த பின் ஜனங்கள் ஒத்து ழைப்பை நாடி அவர் விருப்பத்தின்படி நாடாண்டு வருவான். ஜனப் பிரதிநிதி சபையின் மூலமாகவே எக் காரியமும் நடை பெறும்.

அரசருக்கு இருக்க வேண்டும் சிலங்களைப் பாரதம் சாந்தி பருவம் விதந்தோதுகிறது. நாடு, அரண், அரசன், அமைச்சன், படை, படைத் தலைவன் முதலியோர் இலக்கணத்தைத் திருக்குறள் விரித்து இயம்புகிறது. வடமொழி நூல்களுள்ளும் ஏனைய இந்திய மொழி நூல்களிலும் ஆட்சி முறையைப் பரக்கக் காணலாம்.

அரசரும் நற்சிலங்களைக் கைகொண்டு ஒழுகினர்.

ஆதிம் மதியும் மருளும்
மறனும் மமைவும்
எதின் மிடல் விரமு
மிகைபு மெண்ணில் யாவும்
நீதிந் நிலைபும் மிவை
நேமியினோர்க்கு நின்ற
பாதிம் முழுதும் மிவர்க்கே
பணி கேட்ப மன்னோ

என்று இராமாயணத்தில் தசரதரின் குணங்களைக் கூறியிருத்தலைக் காண்க.

நாட்டினுடைய ஆட்சியை ஒரு சபையே நடத்தி வந்தது. அதற்கு மந்திர சபையென்று பெயர். ஐம்பெருங்குழு என்பேராயமெனச் சிலப்பதிகாரம் கூறும். இராமயணத்தில் தசரதனுடைய ஆட்சி மாப் பெரும் முனிவராம் வசிட்டர் அபிப்பிராயத்தைக் கலந்து நடத்தப்பட்டதாகக் காணலாம். பாரதத்தாலும் துரோணர் முதலியோர் மந்திர சபையில் தலைமை பெற்று அணி பெற விளங்கியதாய்க் காணலாம், அறியலாம். இங்ஙனம் மந்திர சபையில் இடம் பெறும் மக்களில் இழிந்தோரும் இருக்கவேண்டுமென்பது நியதி போலும்!. அரசவுரிமையைப் மிகையாய்க் கூறுகிற பாரதம் சாந்தி பருவத்தில் ஒரு மந்திர சபையில் அ க்ஷத்திரியரும், உக வைசியரும், உ சூத்திரரும் இருக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருப்பதைக் காண்க. இங்ஙனம் அமைக்கப் பெற்ற சபையின் கீழ் பல சபைகளிருந்தன. ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சபை இருந்ததாம். நீதியும் ஆற்றலுமுடைய ஒருவர் ஊர் சபைக்குத் தலைவராயிருப்பர். கூ0 வருஷங்களுக்கு முன்பும் இச் சபைகள் இருந்ததாக அறிகுறிகள் காணப்படுகின்றன. அவ்வூரிலுள்ள ஜனங்களிடை எவ்வித வழக்கு வரினும் அச் சபையோர் தீர்த்துவிடுவார்கள். வழக்கு முதலிய தீர்மானிப்பதற்கு ஜனங்கள் கூட அம்பலமென்ற பெயரால் ஒரு மண்டபமிருந்தது. அதில் ஜனங்கள் யாவரும் கூடி அரிய வழக்குகளுக்குத் தீர்ப்புச் செய்வார்கள். இக் கிராமச் சபைகள் தென் இந்தியாவில்தான் சிறப்பாய் நடை பெற்றன. இப்போதும் அதற்கு அறிகுறியாய்ச் சிறு கிராமங்களில் ஊர் கூட்டமென்ற பெயரால் வழக்குகள் தீர்க்கும் வழக்கமிருந்து வருகிறது.

ஸ்ரீ மகா பாரதத்தில் கண்ணபிரானது தூண்டுதலினால் அறமகனுக்கு, பூமியில் முதலில் உண்டான வரலாற்றையுந் தன்மையையும் கூறுகிற பீஷ்மரது கூற்றைக் காண்க.

"கிருதயுகத்தில் அரசனும் தண்டமு மில்லாது குடிகள் பேராசை கொண்டு கொடுமை செய்யத் தலைப்பட்டனர். இதை நீக்க எண்ணிய திருமாலின் இன்னருளாய் வேனன் உண்டானான். அவன் அங்கங்களை ஒவ்வொன்றாய் முனிவர்கடைய, வலது கையிலிருந்து க்ஷத்திரியன் பிறந்தான். அவன் முனிவரை வணங்கி உங்களுக்குச் செய்ய வேண்டிய தென்னவென்று வினவ, அதற்கு அவர் ஆசை, கோபம், லோபம், கருவம் இவைகளை விட்டுவிட்டு எல்லா உயிர்களிடமும் அன்பும்

கொண்டு அறத்தை வளர்த்து மறத்தை மடியச் செய்ய வேண்டும். அவசியப் படும்போது தண்ட நீதியைச் செய்ய வேண்டும். ஒரு போதும் புலன் வழிப்பட்டு புன்மைகளுக்கு ஈடுபடலாகாது என்று கூறினர். அதற்கு அவன் உடன்பட்டான். வேதங்களுக்கு நிதியாய் விளங்கும் வெள்ளி அவனுக்குப் புரோகிதனானார். ஏனையோர் அமைச்சர் முதலிய வேலைகளில் அமர்ந்தனர். க்ஷதத்தை நீக்கியதினால் அவனுக்கு க்ஷத்திரியனென்று பெயர். அவன் பெயர் பிருதிவி. அவனால் இவ்வுலகம் நல்ல நிலையடைந்ததனால் அவன் பெயரைப் பூமிக்கு இட்டுவழங்கப்பட்டது. காதல் கடவுளாம் திருமால் அவனுக்கு அருளி தன் அம்சத்தையும் அவனிடஞ் செலுத்தனர். அதனால் அவன் கட்டளைப்படி யாரும் நடக்கத் தலைப்பட்டனர். யாவரும் ஒழுங்காக நடந்த போதிலும் பூமியில் துன்பமுண்டாயது. யாவரும் கலைமகள் நாதனைக் கண்டு கதறினார்கள். அவர் பூமியிலுள்ள மனுவை அவருக்கு அரசனாகும்படிக் கட்டளையிட்டார். அதற்கு அவர் மறுத்தவராய்ப்பொய்மை நிறைந்த மனிதருள்ள இவ்வுலகத்தை யாளுவது துன்பமென்று ஜனங்களை நோக்கிச்சொன்னார். அப்போது குடிகள் யாவருஞ் சேர்ந்துகொண்டு—ஐயா நீங்கள் பயங்கொள்ள வேண்டாம். நாங்கள் உங்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்கிறோம். பசுக்களிலும் பொன்னிலும் 1/50 பங்கும், தானியத்தில் 1/10 ம் கோசத்திற்குக் கொடுக்கிறோம். எங்களில் பலமுள்ளவர் உங்களுக்கு உதவி செய்ய வருகிறோம். தாங்களால் நன்கு பாதுகாக்கப்பட்ட யாங்கள் செய்த தருமத்தில் 1/4 பாகம் தங்களைச் சேரட்டுமென்று கூறி மனுவை அரசனாக்கினார்கள்.

இதனால் அரசனும் குடிகளும் எவ்விதம் நடக்க வேண்டுமென்றும் அவரவர் கடமை என்னவென்றும் நன்கு விளங்குகிறது.

பி. சி. நாலாவது நூற்றாண்டில் உண்டு பண்ணிய ஒரு தன சாஸ்திரத்தில் தானியத்தில் 1/6ம், பொருள்களில் 1/10 ம் கடமை செலுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறது. ஆறிலொரு கடமை யென்ற மொழியும் இதற்குச் சான்று. பொது ஜனங்களின் விருப்பத்தின்படி ஆட்சி புரிய வேண்டுமென்று சுக்கிர நீதி கூறுகிறது. வைசியரும் சூத்திரரும் அரசராகலாம். அரசனுக்கு யாக்கையின் உறுதியை இன்றியமையாததாகக் கருதியிருந்தனரென (இற்றிக்லஸ்) என்னும் யவன பண்டிதர் கூறுகிறார்.

சங்கமென்ற வார்த்தைக்கு குடியரசு (ஜனாதிபத்தியம்) என்ற பொருளுண்டென பல பண்டிதர்கள் வாதித்துத் தீர்மானித்திருக்கின்றனர். பாரதத்தில் கணமென்றும், கௌடில்யருடைய தன சாஸ்திரத்தில் சங்கமென்றும், அகாராமஸம் என்ற சூத்திரத்தில் கண ராஜியமென்றும் வழங்கி வருவது குடியரசைக் குறிப்பதேயாகும். புத்த மதத்தில் சங்கமென்ற வார்த்தை வழங்குவதும் இப் பொருளிலேயே. யாஞ்ஞவல்கிய வியாக்கியானத்தில் மல்லநாதனும், பாரதம் சாந்தி பருவத்தில் வியாச முனியும் இப்பொருளிலேயே வழங்கியிருக்கிறார்கள். பாரதத்திலுள்ள சாந்தி பருவமும் சபா பருவமும் பண்டையப் பாரதியருடைய குடியரசைப் பற்றிக் கூறும் இலக்கியப் பகுதிகளாம். இதிலிருந்து பாரத காலமாகிய பி. சி. 5.ம் நூற்றாண்டுக்குமுன்பே குடியரசிருந்ததாய் விளங்கும்.

குடியரசிருந்த காலத்திலுள்ள நாணயங்களில் 10 இனம் இப்போது அகப்பட்டிருப்பதும் இதை உறுதிப் படுத்தும்.

மிகப் புராதன காலத்திலேயே இந்தியாவிற்கு வந்த சில யவனர்களுடைய அபிப்பிராயங்களும் அறியத் தக்கன. சந்திரகுப்தனுடைய மந்திர

சபையில் ஒருவனாகிய மகஸ்தனீஸ், என்ற யவன பண்டிதன் இந்தியாவினுடைய பண்டைய ஆட்சியைப் பற்றி நீண்ட விரிவுரை நிகழ்த்தி யிருக்கிறான். அதிலிருந்து அக் காலத்தில் 5 முக்கியமான குடியரசிருந்ததாய்விளங்கும். இதை ஆரியன், காட்டியஸ் டயோடோரஸ், முதலிய கிரேக்க பண்டிதர்களும் ஒப்புக் கொள்ளுகின்றனர். பாட்டால, மாளவா, கிழக்கு ராஜபுத்தானம், பஞ்சாப் முதலியன குடியரசால் ஆளப்பட்டு வந்ததாய்க் கூறுகின்றனர். ருஷிய நகர் வைசாலி முதலியன புத்த முனிவனின் வாவோடு குடியாட்சிபால் விளங்கியன. சௌடிலன் தன் தனசாத்திரத்தில் குடியரசுள்ளதாய் 26 குறிப்பிட்டுள்ளார். அவைகளில் முக்கியமானவை. அங்கம், மகதம், காசி, கோசலம், குரு, பாஞ்சாலம், அவந்தி, காந்தாரம், சாக்கியம். குரு, பாஞ்சால மிரண்டும் குடியரசில் சிறந்து விளங்கியனவாம். எல்லாரும் இந் நாட்டு மன்னர், ஆமாம், எல்லாரு மிந் நாட்டு மன்னர் என்று நாட்டுப் பற்றை வளர்க்கும் நாட்டுப் பாட்டைத் தமிழ் நாட்டிற் குதவிய நமது பாரதியார் பாடியது போல இவ்விரு நாட்டிலுள்ள பிரஜைகள் அனைவரும் ராஜாவென்று அழைக்கப் பட்டார்களாம். அங்கம், காசி, சேதி, கோசலம், குரு, பாஞ்சாலம், முதலியன குடியாட்சி பெற்றிருந்தனவென்று மஹாபாரதத்தால் விளங்கும். கி. மு. 326-ல் இந்தியாவைப் படையெடுத்த அலக்ஸாண்டர் வருமபோது குடியரசிருந்ததாய் இந்தியச் சரித்திர ஆசிரியரில் முதல்வனும் மி. கெ. சர்க்கார் விளக்கியுள்ளார். அப்போது பஞ்சாப், சிந்தியா, மாளவா முதலியன குடியாட்சி பெற்றிருந்தன. இங்ஙனம் இந்தியாவில் அனேக நாடுகள் குடியரசைக் கொண்டிருந்தன.

ஆகவே உலகத்தில் நம் இந்தியா நாகரிகத்தில் முற்பட்ட தென்றும் குடியாட்சியைக் கைக்கொண்டு விளங்கியதென்றும் அவர் வழித் தோன்றலாகிய நாம் அவரை தூற்றுதல் கூடா தென்றும் அறியப் படுகிறது.

சுவர்க்கவாசி

## மஹரிஷி வ. வெ. சுப்பிரமணியம்

இரங்கற்பா

எழுசீரடி

நினைக்கும் தோறும் மனத்துயரால் நெடுமூச் செறிந்து கண்கலங்கி
நனைக்கும் நீரும் வரக்காண்பேன் நடுங்கா நிற்பே னுடல் முழுதும்
தனக்கொன் றேனும் இலதாக்கித் தாய்நா டுயரத் தவம் புரிந்த
மனக்குன் றேஎன் வ. வே. சு மணியே வாழ்க வாழ்கவே.

அலைமே லிருந்த கடல்தாண்டி அவதிக் குள்ளா மன்னியர் தம்
கொலைமே லிருந்த செயற்கு எதிராம் கொள்கைக் குயர்தா ருருவாகிக்
கலைமே லிருந்த "குருகுலத்தைக்" கண்டாய் விண்டோய் கதிரவன்
[போல்
மலைமே லிருந்து விழுந்துலகம் மதிக்க வீரம் வளர்த் தனையால்.

கடமை பெரிதோ உயிர் பெரிதோ கலைதேர் சிறுமி ரதிமினென
வடமீ னனைய இனியமொழி மழலைச் சிறுமி சுபத்திரை தன்
உடமை யுயிரும் தன்னுயிரும் ஒன்றாய் யருவிக் குதவி எம
மடமை யகலப் புகழ்ப டைத்த மணி வ. வெ. சு. மறையோனே.

தமிழும் தமிழின் கலைத்திறனும் தமிழர் குழுவும் தமிழ் மணமே
யுமிழும் கலைமா மகள்தானும் உலகின் கலைவல் லுன ருணர்வும்
அமிழ்துண் சுரர்மா னிடர்முனிவர் யாரு மிரங்கி யழுத ரற்ற
குமிழின் அருவி யுனதுயிரைக் கொண்ட கொடுமை குறிப்பதுவோ.

தீவிரம் வளரக், கலைவளரத், திறமை வளரச், செழுந் தவத்தின்
காரம் வளரத், திடம் வளரக், கருணை வளரக், கலைத்திறத்தின்
சாரம் வளரக் "குருகுலத்தைத்" தந்தான் தமிழர் தலை நாளின்
வீரம் வளர வ. வெ. சு. வீழ்ந்தான் அருவி விழும் வழியே.

கம்பன் இழந்தான் தன் குருவைக் கலைமா திழந்தாள் கணவனையே
கும்ப னிழந்தான் தமிழ் நாட்டின் குருவை நமது "குருகுலத்தோர்"
அம்பொன் தாயைத், தந்தையினை, யாசா ரியனை, யாருயிரை
இம்பர் இழந்தார் வ. வெ. சு. எங்கே! எங்கே!! எங்கேயோ!!!

அழுத பிள்ளை பால்குடிக்கு மன்றோ வதுவும் பொய் யாமோ,
பழுதும் உண்டோ இம்மொழிக்குப் பகலும் இரவும் பசுந் தமிழர்
விழுதங் கண்ணீர் அருவியுற விம்மிக் கதறி வெதும் புறுமிப்
பொழுதும் எய்தான் வ. வெ. சு. போனான் புத்தே ளுல கினுக்கே.

இப்பூ வுலகின் குருகுலங்கள் எவைந் தருவி யினை யெங்கும்
ஒப்போ தரிய "குருகுலத்தை" உண்மைத் தமிழர் தமக் குதவி
அப்பே ருலகில் தேவகுரு அறியப் புகல்வா னடைந் தனைகொல்
எப்போ தினிநீ யிவண் வருவாய் இருமா மறைகட் கிறைபவனே.

பாட்டின் பாலும் கம்பனுரைப் பாங்கின் பாலும் பல்கலைஞர்
தேட்டின் பாலும் ஆய்ந்து பல திறமும் தெளியும் செப்புமுளம்
வேட்டின் பாலுங் கும்பமுனி விரும்பும் நமது மணியை மலை
மேட்டின் பாபநாச நதி விழுங்கி ஏப்பம் விட்டதுவே.

கலைசெய் தமிழின் துர்க்கதியோ கருதுந் தமிழர் தலைவிதியோ
சிலைசெய் சிறுவர் "குருகுலத்தின்" நிலையாப் பவமோ நேசமுறும்
தலைசெய் நமது பாரதத்தாய் தவிக்கத் துன்பத் தடங் கடலில்
மலைசெய் பருவி வ. வெ. சு. மணியின் னுயிரை மாய்த் ததுவே.

ப. ஆதிமூர்த்தி, கா...

## நமது சிற்பச் செல்வம்

[௧]



திருமலை நாயக்கன் மஹால் உட்புறம்

மதுரை

மதுரையில் திருமலை நாயக்கன் மஹால் தமிழ் நாட்டுச் சிற்பிகளின் வெற்றிக்கோபுரமாக இன்னும் இலங்குகிறது. அதைப் பார்க்கவந்த தமிழன் மனத்திலும் நாட்டன்பு அரும்பும். பழந்தமிழர் சிற்பவன்மைக்குச் சான்றாக நிற்கும் இத்



மதுரைக் கோயிலின் உள்ப் பிரகாரம்

திருமலை நாயக்கன் மஹாலில் உள்ள ஒவ்வொரு தூணும் தற்காலத்துச் சிற்பிகளைக் கேள்வி கேட்டு நிற்கிறது. மரமே உபயோகப்படுத்தாத அதன் கட்டிடம் கல்லும் தோற்றுப்போகும்படியுள்ளது. திருமலை நாயக்கரின் தர்பார் மண்டபமே இப்போது அக்காலத்தவரின் தமிழறிவு போன்று பரந்து விரிந்து காண்கிறது. இனி எக்காலம் நமது நாட்டில் முற்காலத்துத் தெய்வீகச் சிற்பிகள் மறுபிறப்பெடுத்து வந்து நமது கண்களுக்குச் சிற்ப விருந்து அளிப்பார்களோ தெரிந்திலது. நமது திருமலை நாயக்கன் மஹாலின் உட்புறத்தைப் படத்தில் காட்டியுள்ளோம்.

மதுரைக் கோயிலைப்பற்றி முன்னொருமுறை எனது அரும்பெரும் நேசனான ராஜகோபாலன் தன் கடிதங்களிற் கூறினார். மதுரையிலுள்ள சிற்ப நயத்தையும், சந்நிதிச் சிறப்பையும் ஆன்றோர் பூரணமாக வரைந்து வியந்தனர். கீழ்க்கண்ட படத்தில் மதுரைக் கோயிலின் உள்பிரகாரம் காட்டப்பட்டுள்ளது.

திருப்பரங்குன்றம்

மதுரைக்குத் தெற்கேயுள்ள திருப்பரங்குன்றத்தின் கோயிலழகை அன்பர் அறிவார்கள். இதில்

சுமார் ௧௦௫௦ அடி உயரமுள்ள மலையின் குகையில் சுப்பிரமண்யக்கடவுள் ஆலயம் அமர்ந்துள்ளார். இம் மலையின் மேலே ஒரு மசூதியும் உள்ளது. இது ௧௭௧௪ ம் சகத்தில் ஐரோப்பியரால்பிடிக்கப்பட்டதெனக் சிலாசாசனம் கூறுகிறது. திருப்பரங் குன்றக்கோயிலிலுள்ள தூண்களின் சிற்பநயத்தைப் படத்தில் காட்டியுள்ளோம்.

மீது எறிக்கொண்டு அதை நிலைபெயர்த்து தனது அன்பனை இன்னறுறுது காத்ததாகச் சொல்லப் படுகிறது. பிறகு பிரஹலாத் ஆழ்வான் இக் கோயிலைக் கட்டினனும். இங்கே முக்தமண்டபத்தில் "கப்பம ஸ்தம்பம்" என்று ஒரு தூண் ஆயிரக்கணக்கான மக்களால் வழிபடப்படுகிறது. இங்கே ஒரு கல் தேரும் உள்ளது. இக்கோயி



திருப்பரங் குன்றம்

## சிம்மாசலம்

விஜயநகரம் ஜமீனிலிருக்கும் சிம்மாசனத்தில் நரசிம்ஹஸ்வாமி ஆலயம் பேர் பெற்றது. இவ் வாலயம் கடல் மட்டத்திற்கு ௮௦௦ அடி உயரமுள்ள ஒரு குன்றின் மேல் கட்டப்பட்டது. இக் குன்றம் ஹிரண்யகசுபால் தன்பெருமை மைந்தன் பிரஹ்லாதன் மீது ஏற்றப்பட்டதாக நம்பப்படுகிறது. திருமால் அப்போது குன்றின்

லிலுள்ள நரசிம்ஹப்பெருமாளுக்கு வைகாசி மாசம் சந்தனக்காப்புத்திருநாள் வெகு சிறப்பாக நடக்கும். அப்போது ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து கூடுவார்கள். இக் கடவுளை நம்பினோர் பகைவரைவெல்வார், சண்டையில் ஜெயிப்பர், பிணி நீங்குவர், எல்லா நன்மையும் அடைவர் என்று கருதப்படுகிறது. இக்கோயிலிலுள்ள சிற்ப வேலைகள் அற்புதமானவை. இதன் கல் வெட்டுகளில் குலோத்துங்க சோழனின் வெற்றி



சிம்மாசலம்.

யையும், இதன் நடுமண்டபத்தை அவன் கட்டியதையும் கிருஷ்ணதேவராயர் கட்ட

காண்கிறோம். சிம்மாசல ஆலயத்தைப்படத்தில் தூண்களையும் காண்பித்துள்ளது.

—[௦]—

# வாஸ்து சாஸ்த்திரம்

(திரு. பி. வி. ஜகதீசய்யர் எழுதுவது)

(சென்ற பகுதியின் தொடர்ச்சி)

மேல்சொன்ன விதமாய் பூமியின் நன்மையைக் கண்டுகொண்டு யஜமானன் வீடு முதலிய கட்டடங்கள் கட்ட ஆரம்பிக்க வேணும். அப்படி ஆரம்பிக்கும் போது பலவிதமான சுபசகுனங்கள் நேரிட வேணும். அப்பொழுது யஜமானன் பூமியைப் பிரதக்ஷணமாய் வந்து அந்தப் பூமியின் எட்டுத் திக்குகளிலும் கொஞ்சம் கொஞ்சமாய் நல்ல ஜலம் ஊற்ற வேண்டும். அப்பொழுது யஜமானன் சூரியனைத் தியானிக்க வேண்டும். கன்னிகைப் பெண்களின் வலக்கையில் புஷ்பத்தையும் இடக்கையில் தீபத்தையும் கொடுத்து அந்தப் பூமியின் நடுவில் வைக்கச் செய்ய வேண்டும். பின்னர் முகூர்த்தம் செய்ய வேணும். கட்டடம் கட்டுவதற்காகக் குறிப்பிட்ட மனையின் ஈசான்னிய பாகத்திலாவது வடக்கிலாவது பன்னிரண்டு அங்குலம் நீளம் அதே அகலமுள்ளதும் அதில் பாதி ஆழ முடையதுமாய் ஒரு பள்ளம் வெட்டவேண்டும்.' இதைத்தான் 'முகூர்த்தம் செய்தல்' என்று சொல்லுவார்கள்.

ஸகல விதமான மனைகளுக்கும் 'பிரம்ம பாகம்' என்றும் 'மனுஷ்ய பாகம்' என்றும் இரண்டுவிதமான இடம் உண்டு. அதாவது கட்டடத்திற்கு அதன் வாசற்படியின் எதிர்ப்பாகவும் பின் பாகவும் பிரம்மபாகமெனப்படும். கட்டடத்தின்பின் பாக வாசற்படியைச் சேர்ந்த பூமிக்கு மனுஷ்ய பாகமெனச் சொல்லுவார்கள். அதாவது கிழக்கு மேற்கு நீளமாய் ஒரு மனை யிருந்தால் அந்த மனையின் நீளம் ௨௦௦-அடி யிருந்தால் அம் மனையின் வாசற்படி முதல் ௯௦-அடி நீளம் வரையில் கிழக்குத் திக்கிலிருக்கும் பூமிக்கு பிரம்மபாகம் என்றும் அதற்கு மேல் மேற்குத் திக்கிலிருக்கும் பூமியில் ௧௦-அடிவரையில் மனுஷ்யபாகம்என்றும் பெயர். இவ்விதமான மனையின் பிரம்ம பாகத்திலேயே ஈசான்னிய திக்கில் தேவ பூஜா கிரஹம் அதாவது வீட்டிற்குள்ளே பூஜை செய்யும் ஓர் அறையை அமைக்க வேண்டும். இம் மனையின் பின்புறமான மனுஷ்ய பாகத்திலேயே போஜன சாலை ஏற்படுத்த வேண்டும் இவ்விதம் பிரம்ம பாக மனுஷ்யபாக அளவு எடுத்துக்கொண்ட பிறகு அம் மனையின் முன் வாசற்படி சமீபத்தில் கிழக்கு திக்கில் மிச்சம் ௧௦-அடிக்கு திண்ணை ஏற்படுக்க வேண்டும். அம் மனையின் புறக்கடை வாசற்படியின் சமீபத்தில் மிச்சம் ௧௦ அடிக்கும் தாழ்வாரம் அல்லது வேறு ஏதேனும் உதவிக் கட்டடம் அமைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதமாய் வாசற்படி வைப்பதற்குத்தான் ஆயாதி என்று பெயர் இவ்விதமான ஆயாதி எட்டு விதமாய் ஏற்படுத்தலாம். அவையாவன த்வஜ ஆயாதி, தூம ஆயாதி, சிம்ம ஆயாதி, சுவான ஆயாதி, விருஷப ஆயாதி, கழுதை ஆயாதி, யானை ஆயாதி, காக்கை ஆயாதி. கிழக்கு முகமாய் வாசற்படி இருந்தால் அந்த வாசற்

படிக்கு த்வஜ ஆயாதி என்று பெயர் வழங்கும். ஒரு வீட்டின் தென் கிழக்கு முகமாய் வாசற்படி இருந்தால் அந்த வாசற்படிக்குத் தூம ஆயாதி என்று பெயர். தெற்கு முகமாய் வாசற்படியிருந்தால் சிம்ம ஆயாதி என்று பெயர். தென் மேற்கு மூலையாய் வாசற்படி இருந்தால் சுவான ஆயாதி என்று பெயர். மேற்கு முகமாய் வாசற்படி இருந்தால் விருஷப ஆயாதி என்று பெயர். வட மேற்காய் வாசற்படி இருந்தால் அந்த வாசற்படிக்குக் கழுதை ஆயாதி என்று பெயர். வடக்கு முகமாய் வாசற்படி இருந்தால் யானை ஆயாதி என்று பெயர். வட கிழக்கு வாசற்படிக்குக் காக்கை ஆயாதி என்று பெயர். கிழக்கு முகமாய் வாசற்படியிருந்தால் யஜமானனுக்கு விசேஷமான சௌக்கியமும் செல்வமும் உண்டாகும். நினைத்த காரியம் கைகூடும். தென்கிழக்கு முகமாகக் கோணலாயிருந்தால் அந்த வீட்டின் யஜமானனுக்கு அகாலத்தில் மரணம் நேரிடும். நேர் தெற்கு முகமாய் இருந்தால் நல்ல ஜயம் உண்டாகிக்கொண்டே இருக்கும் அவன் எண்ணும் மனோரதங்களும் நிறைவேறிக்கொண்டேவரும். தென்மேற்கு முகமாய்க்கோணலாயிருந்தால் அந்த வீட்டின் யஜமானனுக்குக் காரணமில்லாமலே நாய் போல் திடீரென்று சீறிச் சினந்து கொள்ளும் கோபமுண்டாகிக்கொண்டேயிருக்கும். நேர் மேற்கு முகமாய் இருந்தால் தன தான்ய செல்வம் குறையாமலே இருக்கும். நல்ல சுகமும் உண்டாகும். வடமேற்கு முகமாய் இருந்தால் அந்த யஜமானனுக்குக் கழுதை போல் துக்கம் உண்டாகிக்கொண்டே இருக்கும். நேர் வடக்கு முகமாய் இருந்தால் எப்போதும் சந்தோஷமும் நல்ல சுபாவமும் நிறைந்த செல்வமும் இருக்கும். வடகிழக்கு மூலையாய்க் கோணலாய் ஏற்பட்டால் அலைந்து திரிந்து கஷ்டப்பட்டு மன வருத்தத்துடன் மரணத்தை அகாலத்தில் அந்த எஜமானன் அடைவான். ஆகையால் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு இந்த முகமாய் வாசற்படி ஏற்படுத்த வேணுமே யொழிய தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு இந்தத் திக்குகளில் வாசற்படியின் பார்வை அமைக்கவே கூடாது.

கட்டடம் கட்டுவதற்குக் குறிப்பிட்ட மனையின் அகலத்தை ஒன்பது பாகமாகக் கோலினால் அளந்துகொண்டு அதில் வலது பக்கத்தில் ஐந்து கோல் அறைகளுக்கும், இடது பக்கத்தில் மூன்று கோல் அவ்விதம் விட்டுவிட்டு இந்த எட்டுக்கோல் அளவு போக நடுவில் இருக்கும் ஒரு கோல் அகலமுள்ள இடத்தை நன்றாய் அளந்து அதில் முதல் வாசற்படி ஏற்படுத்த வேண்டும். இவ்விதமான முதல் வாசற்படிக்கு அடுத்த அப்புறம் வைக்கும் வாசற்படிகளையும் மாடி என்னும் மெத்தைக் கட்டடமானால் இந்த முதல் வாசற்படிக்கு மேல் பாகத்தில் ஸ்தாபிக்க வேண்டிய மேல் வாசற்படிகளையும் இந்த அளவுடைய ஸ்தானத்திலேயே ஏற்படுத்த வேணும். இந்த முதல் வாசற்படிக்கு வலது பக்கமாயாவது இடதுபக்கமாயாவது வைக்கக் கூடாது. அதாவது முதல் வாசற்படிக்கு வலது பக்கத்தில் ஐந்துகோல் அகலமும் இடது பக்கத்தில் மூன்று கோல் அகலமும் எப்படி இருக்கிறதோ இது போலவே அந்த வீட்டில் முதல் வாசற்படிகளுக்கு அப்புறம் வைக்கும் நேராகயிருக்கும் எல்லா வாசற்படிக்கும் மாடி யென்னும் மெத்தையின் பேரிலும் நேரிட வைக்கும் எல்லா வாசற்படிகளுக்கும் வலது பாகத்தில் ஐந்து கோல் அகலமுடையதாகவேயிருக்க வேண்டும். இவ்விதம் செய்தால்தான் வாசற்படிக்குத் தோஷம் நேரிடாது. அந்த வீட்டின் யஜமானனுக்கு நல்ல சுபமும் உண்டாகும். ஆகையால் வீட்டில் நேருக்கு நேராக வைக்கக்கூடிய சகல விதமான வாசற்படிகளெல்லாம் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும்

இவ்வித அளவு உடையதாகவே அமைக்கப்பட வேணும். சகலவித மாளிகைகளிலும் வீடுகளிலும் நேர் கிழக்கு முகமாய் ஸ்தாபிக்கப்படும் முதல் வாசற்படிக்கு 'இந்திர ஜயந்த வாஸ்து' என்றும், அது சகல சுகங்களைக் கொடுக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது. நேர் தெற்கு முகமாய் முதல் வாசற்படி ஏற்பட்டால் அதற்கு 'யாம்ய வாஸ்து' என்றும் அதில் வாசஞ் செய்தாலும் சுகமுண்டாகுமென்றும், நேர் மேற்கு முகமாய் முதல் வாசற்படி உண்டானால் அதற்குப் 'புஷ்பதந்த வாஸ்து' என்றும் இது மிகுந்த செல்வத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்குமென்றும், நேர் வடக்கைப் பார்த்து முதல் வாசற்படி உண்டானால் அதற்கு 'பல்லாட வாஸ்து' என்றும் அதில் வசிப்பவர்களுக்கு சுகமும் செல்வமும் உண்டாகுமென்றும் கூறுகிறது. இவ்வித வீடுகளில் வேதை அதாவது குத்து, எதிர்ப்பாச்சு, எதிர்நோக்கி என்னும் தோஷங்கள் உண்டாகக் கூடாது. அதாவது ஒரு மனையில் கிழக்கு முகமாய் முதல் வாசற்படி வைக்கும் பக்ஷத்தில் அந்த வாசற்படியானது தெருவுக்கு நேர் முகமாய் இருக்கலாகாது. அதாவது ஒரு புறத்தில் ஒதுக்கி வைத்துக்கொள்ள வேணும். கிழக்கு மேற்கு வீதிகளில் கிழக்கு முகமாய் வாசற்படி வைக்க நேரிட்டால் அப்போது அந்தத் தெருவுக்கு நேர் குத்தாக வைக்கலாகாது. இது போலவே தெற்கு மேற்கு வடக்குத் திக்குகளிலும் ஏற்படுத்திக்கொள்ளவேணும். ஆதலால் தெருவுக்கு குத்து இல்லாமலும் வீட்டின் உள்புறமிருக்கும் தூண்களுக்குக்குத்து இல்லாமலும் சுவர்களில் குத்து இல்லாமலும் திண்ணை, மேடை, கூடத்து வாசற்படி இவைகளில் குத்து இல்லாமலும் வாசற்படிகள் ஸ்தாபிக்க வேண்டும்.

மனிதர்கள் தள்ளாமலும் காற்று முதலியன வீசாமலும் இருக்கும்போது எந்த வீடுகளின் கதவு திடீரென்று தானாய் மூடிக்கொள்ளுகிறதோ அப்படிப்பட்ட வீட்டில்வசிப்பவர்களுக்குப் புத்தி கலங்கிக் குறைந்து பலவித வருத்தம் நேரிடும். இப்படி திடீரென்று வீடுகளில் கதவு மூடிக்கொள்வதும் திறந்து கொள்வதும் நேரிடுவது வாசற்படியின் நுனியைக் கொஞ்சம் முன்பாகமாய் அல்லது பின் பாகமாய்க்கவிழ்ந்துகொண்டாற்போல் சாயவைத்துக் கட்டி விடுவதினால் ஆகையால் தச்சர் கம்மாளர், கொத்தர் முதலிய சிற்பிகள் வாசற்படிகள் வெளிக்கை உட்கையில் சாய்ந்து விடாமல் நேராக மட்டம் பார்த்துச்சரியாய் ஜாக்கிரதையுடன் ஸ்தாபிக்க வேண்டும். இது போலவே வாசற்படிகள், திண்ணைகள், மேடைகள், கொரடுகள் இவைகள் ஒருபக்கத்திற் சாய்ந்து கொண்டும் மற்றொருபக்கத்தில் உயர்ந்துகொண்டும் இருக்கலாகாது. இவைகளைச் சமமாகஸ்தாபிக்கவேண்டும். இப்படியே கதவுகளில் தைக்கும் கொல்லுகளும, குமிழ்களும், ஓத்துச் சட்டங்களும் ஒரு பக்கமாய் சாய்ந்திருக்கலாகாது.

வாசற்படிகள் அதிக உயரமிருந்தால் அந்த மனையில் பாம்பு பயமுண்டாகும். உயரம் குறைந்திருந்தால் திருடர் பயமுண்டாகும். ஆகையால் மனைக்குத் தகுந்தபடி வாசற்படியை அமைக்க வேண்டும்.

மரத்தால் செய்யப்பட்ட வாசற்படியிலும் கற்பாறை வாசற்படியிலும் வலது இடது புறங்களிலும் சிறு குடங்கள் போலவும், செடி கொடிகள், ஹம்சங்கள், தாமரை மலர்கள்போலவும், மரச் சித்திரவேலை, கற் சித்திரவேலைகள் செய்யவேணும். மேலும் வாசற்படியின் வலது இடது புறத்திலேயே தரு, ஸ்திரீயினுடைய உருவம், கற்சித்திர மரச் சித்திரவேலை செய்ய வேணும். இவ்வித மேற்படுத்தப்படும் சித்திர ஸ்திரீக்கு இரண்டு பாதமும், முழங்கால்களும், தொடையும், இடையும், ஸ்தனமும், நீண்டகைகளும், சிறுகழுத்தும், அழகிய சிறந்தமுகமும் -

னன்றாய் ஏற்படவேண்டும். இன்னும் அழகு வாய்ந்த பல சித்திரவேலைகளையும் செய்யலாம்.

சகல விதமான மாளிகைகளிலும் முக்கியமான முதல் வாசற்படியானது மூன்று முழ அகலமும் ஏழுமுழம் உயரமும் இருக்கும்படி அமைக்க வேண்டும். இந்த அளவுக்குக் கொஞ்சங்குறைந்ததாய் மற்ற உள்பாகங்களிலும் வாசல் படி ஏற்படுத்தவேண்டும். நான்கு முழம் அகலமும் ஒன்பது முழம் உயரமும் உடையதாக முதல் வாசற்படி ஏற்படுத்துவது சில உயர்ந்த அந்தஸ்துள்ளதும் பின்னர் விவரிக்கப்படுபவைகளுமான "மேரு மாளிகை" "மந்தர மாளிகை" "நந்தியாவர்த்த மாளிகை" "பிரம்ம மாளிகை" "வர்த்தமான மாளிகை" "கருட மாளிகை" "பூசார மாளிகை" ஸ்ரீ விருக்ஷ மாளிகை" இவைகளுக்கு மட்டும் தான் மற்ற சாதாரண மாளிகைகளில் முன்னர் சொன்ன சிறியவாசற்படி பேபோதுமானது.

# அசுவாரூட நரபதி

## தோல்ஸ்தாய் எழுதிய சிறுகதை

கலிங்கநாட்டுக்காவலனாகிய அசுவாரூட நரபதி பல்லவநாட்டில் படையெடுத்து அதை வென்று கைப்பற்றினன். வெற்றி சாமானியமானதன்று. பல்லவநாட்டு நகர்களை யெல்லாம் அழித்து அதன் குடிகளையெல்லாம் தம் நாட்டிற்கு ஓட்டியது மன்றிப் போர் வீரர்களையெல்லாம் கொல்வித்தான். படைத்தலைவர்கள் கோரமான கதியை யடைந்தார்கள். சிலர் உயிருடன் உரிக்கப்பட்டனர். மற்றுஞ்சிலர் கழுவிலேற்றுண்டுமாண்டனர். பல்லவர் கோமான் பத்மநாபன் ஓர் கூட்டிலடைபட்டிருந்தான் மறுநாள் அவனைக்கொலை செய்வதெனத்தீர்மானித்தாயிற்று.

இரவில் படுக்கையில் படுத்துறங்குமுன் அசுவாரூடன் தன் பகைவனான பத்மநாபனை இதுகாறுமில்லாத எவ்விதப் புதுவழியில் கொலைசெய்வதென யோசித்துக் கொண்டிருந்தான். அருகே சல சலவென உடை அசைவதுபோலொசைகேட்டது. கண் விழித்து நோக்கவும் எதிரே நீண்ட நரைத்த தாடியும் சாந்தம் விளங்கும் கண்களும் கொண்ட கிழவனொருவன் நிற்பது தெரிந்தது.

"பத்மநாபனைக்கொல்லத் தீர்மானித்து விட்டாயா?" எனக்கேட்டான் கிழவன்.

அசுவன் " ஆம் தீர்மானித்தாயிற்று. ஆனால் இதுகாறுமில்லாத எவ் விதப்புதியவழியில் அவனைக் கொல்வதென்று நான் இன்னும் நிச்சயப்படவில்லை."

கிழவன் "சரி கொலை செய்துவிடலாம். ஆனால் நீயேதான் பத்மநாபன்."

அசுவன் "அஃதெப்படி? நான் நானே. பத்மநாபன் பத்மநாபனே."

கிழவன் "அல்ல நீயும் பத்மநாபனும் ஒன்றேதான். வெளித் தோற்றத்தில் இருவரும் வேறாகத்தான் தோன்றுகிறதாயினும் உண்மையில் இருவரும் ஒன்றே."

அசுவன் "இவ்வித் தோற்றம் உண்மையன்று? வேறு எவ்விதமிருக்க முடியும்? இங்கு நான் மிருதுவான மெத்தையில் படுத்திருக்கிறேன். எனது ஆணைக்குட்பட்டு அதை அனுவும் பிசகாது நிறைவேற்றக் காத்திருக்கும் அடிமைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறார்கள். இன்று போலவே நாளையும் எனது நண்பருடன் விருந்து பண்ணப் போகிறேன். பத்மநாபனோ பறவையைப் போல் கூட்டில் அடைபட்டுக் கிடக்கிறான். நாளைக்குக் கழுவிலேற்றப்பட்டு நாவை வெளியே தொங்கவிட்டுக்கொண்டு சாகும் மட்டும் துடிக்கப் போகிறான். அதன் பின் அவனுடல் நாய்களுக்கிரையாகும்.'

கிழவன் "அவனுடலை யழித்துவிடுவாய். ஆவியையழிக்க உன்னால் முடியுமா?"

அசுவான் "சரிதான் நான் கொன்று ஒரு மலையாகக் குவித்திருக்கும் பதினாயிரம் வீரர்களின் கதியைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள். நானுயிருடனிருந்து பேசுகிறேன். அவர்களைப் படியில்லையே ஆகையால் என்னாலாவியை யழிக்க முடியுமென்கிறதல்லவா?'

கிழவன் "அவர்கள் அழிந்துவிட்டார்களென்று உனக்கு எவ்வாறு நிச்சயம் தெரியும்?"

அசுவன் "என் அவர்களைத்தானிப்பொழுது பார்க்க முடியவில்லையே! இன்னும் அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். நானதற்குள்ளாகவில்லை அவர்கள் துன்புற்றிருந்தபொழுது நான் இன்பமன்றோ அனுபவித்துக் கொண்டிருந்தேன். ஆகையால் நானும் அவர்களும் ஒன்றெனக் கூறுவது எவ்வாறு தகும்?'

கிழவன் "உனக்குத் தோன்றுவதுதான் அம்மாதிரி ஆனால் உண்மையில் நீ உன்னையே அங்கவதை செய்து கொண்டாய். அவர்களையன்று."

அசுவன் "அதெப்படி? எனக்கொன்றும் விளங்கவில்லையே."

கிழவன் "அறிந்துகொள்ள அவா உண்டா? சொல்."

அசுவன் "ஆம் தெரிந்துகொள்ள மிகவும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன்."

கிழவன் சிறிது தூரத்திலிருந்த தண்ணீர் நிறைந்த ஓர் தொட்டியிடஞ் சென்று நின்றுகொண்டு அரசனையழைத்தான். அரசன் எழுந்து சென்றான்.

"உடைகளைக் களைந்துவிட்டு உள்ளே இறங்கு" என்றான் கிழவன்.

அசுவபதியும் அவ்வாறே செய்தான். இதன்மேல் கிழவன் ஓர் குடத்தில் தண்ணீரை எடுத்துக்கொண்டு "நானிதை ஊற்றத் தொடங்கவும் நீ தண்ணீரில் மூழ்க வேண்டும்" எனக் கூறிக் குடத்தைத் தலையில் தூக்கினான். அசுவனும் நீரில் அமிழ்ந்தான்.

நீரில் அமிழவும் அவனுக்குத் தான் அசுவானுடனல்லது வேறொருவனாகத் தோன்றிற்று. வேறொருவனென்ற உணர்ச்சியுடன் தான் மஞ்சத்தில் படுத்திருக்கிறான். அருகில் அழகிய இளமாது ஒருத்தி படுத்திருக்கிறாள். அம்மாது எழுந்து அவனை நோக்கி "என்னுயிர்த் தலைவ, பத்மநாப மன்ன, நேற்று உமக்கிருந்த வேலையதிகத்தால் இன்று வழக்கத்திற்கு மேல் தூங்கவிட்டீர். உமது தூக்கத்தைக் கலையாது காத்து வந்தேன். உம்மை எழுப்பவில்லை. இப்பொழுது சிற்றரசர்கள் சபா மண்டபத்தில் உமது வரவை எதிர் பார்த்துக் காத்திருக்கின்றனர். எழுந்து உரிய உடையுடுத்து மண்டபத்திற்குச் சென்று வாருங்கள் என்று கூறினாள்.

இதன் மேல் அசுவாரூடன் தான் பத்மநாபன் என உணர்கிறான். இதனாலவனுக்கு ஆச்சரிய முண்டாகவில்லை. இதுகாறும் தனக்கவ் விஷயம் தெரியாதிருந்ததே எனத் தான் ஆச்சர்யப்படுகிறான். பின் எழுந்து உடையுடுத்து தக்கவாறு அலங்கரித்துக்கொண்டு சிற்றரசர்களிருக்குமிடத்தையடைகிறான்.

சிற்றரசரெல்லாம் பத்மநாப மன்னனை வணங்கி அவன் உத்தரவிட்டபின் பேரில் தமது ஆசனங்களில் உட்காருகின்றனர். அவர்களில் எல்லாம் வயதில் முதிர்ந்த மன்னன் எழுந்து மற்றவர்களுக்குப் பிரதிநிதியாகப் பேசுகிறான். இனித்தங்களால் அசுவாரூட நரபதி செய்யும் கொடுமைகளையும் மானக்கேட்டையும் பொறுக்கமுடியாதெனவும், அவன் மேற் படையெடுத்துச் செல்லவேண்டுமெனவும் கூறுகிறான் சிற்றரசன். ஆனால் பத்மநாபனதற்கிணங்காது அசுவாரூட நரபதிக்குத் தூதனுப்பி அவனுடன் சமாதானஞ் செய்துகொள்ளச் சிற்றரசர்களை யனுப்பிவிடுகிறான். பின்பு தக்க உயர்ந்த மனிதர்களைத் தூதர்களாக நியமித்து அவர்களிடம் அசுவாரூடநரபதியிடம் கூற வேண்டிய விஷயங்களை விபரமாய்க் கூறியனுப்புகிறான். இன்னும் தான் பத்மநாபனென்னும் உணர்ச்சியுடன் மலைப் பிரதேசங்களுக்கு வேட்டைக்குச் செல்கிறான். வேட்டை மிகத் திருப்தியாக முடிகிறது. தான் அன்று இரண்டு மான்களை வதைத்துவிட்டுத் திரும்பவீடு வந்து நண்பருடன் விருந்துண்டு பெண்ணடிமைகள் காட்டியமாடுவதைக் களிப்புடன் நோக்கிக்காலம் போக்குகிறான்.

மறு நாள் வழக்கம் போல் சபைக்குச் செல்ல அங்கு குற்றஞ் சுமத்தப்பட்டவர்களும் காத்திருக்கின்றனர். அவ் வழக்குகளை எல்லாம் தீர்த்துவைத்துப் பின் தனக்குப் பிரியமான வேட்டைக்கு மீண்டும் செல்கின்றான். இன்று ஓர் கிழச் சிங்கத்தைக் கொன்று அதன் இருகுட்டிகளைப் பிடித்து வரும் பாக்கியம் கிட்டுகிறது. வீடு திரும்பிய பின் வழக்கம் போல நண்பர் பலருடன் விநோதமாய் விருந்துண்டு நாட்டியம் பார்த்துக் களித்து இரவைத் தனது பிரிய மனைவியுடன் கழிக்கிறான்.

இவ்வாறு ஒரு மாதக் காலம் வரையிலும் முன்பு தானயிருந்த அசுவாரூடநரபதியிடம் அனுப்பிய தூதரை எதிர் பார்த்துக்கொண்டு தனது காலத்தை இராஜ்ரிய விஷயங்களிலும் இன்ப நுகர்ச்சியிலும் கழித்து வருகிறான். தூதர்கள் ஒரு மாதத்திற்குப் பின் மூக்குகளையும் காதுகளையும் இழந்து தமரசரிடம் வந்து முறையிடுகின்றனர்.

அசுவாரூடன் தூதர்களிடம் அவர்களது அரசன் தான் குறித்த அளவு தங்கம், வெள்ளி, நவதாரம், சந்தனக்கட்டை முதலியவற்றைக் காணிக்கையாகச் செலுத்தித் தன்னை உடனே வந்து வணங்காவிடில் அவனுக்கும் இதே கதி தான் அளிக்கப்படும் என வெகு இறுமாப்புடன் செய்தி சொல்லியனுப்புகிறான்.

முன்பு அசுவாரூடனாயிருந்த பத்மநாபன் மீண்டும் தன் சிற்றரசர்களைக் கூப்பிட்டு ஆலோசனை செய்கிறான். அவர்கள் இனி தாமதிக்கக் கூடாதென்றும் அசுவாரூடன் படையெழுந்து வருமுன் தாங்கள் சென்று அவனை இராஜ்யத்திற்கு வெளியில் சந்திக்க வேண்டுமென்றும் சொல்கின்றனர். பத்மநாபனிதற்கிசைந்து சேனையைக் கூட்டி அதன் தலைவனாகத் தானும் புறப்படுகிறான். ஒரு வாரம் சேனை ராஜ்யத்தின் எல்லையை நோக்கிச் செல்கின்றது. சிலநாட்களாறம் தனது படை வீரர்களை நேரிற் சந்தித்து உற்சாகமூட்டியும் வீரச் செயல்களில் தூண்டியும் வருகின்றான் பத்மநாபன் எட்டாம் நாள் அவன் ...

இருமலைகளுக்கிடையில் ஓர் ஆற்றின் கரையில் அசுவாரூடனது படையைச் சந்திக்கப் போர் மூண்டுகொண்டது. பத்மநாபன் சேனை மிக வீரப் போர் புரிகின்றது. ஆனால் எதிரிகள் எறும்புக் கூட்டங்களைப் போலச் சாரை சாரையாய் மலையினின்றுமிறங்கி வந்து அப் பள்ளத்தாக்கை நிறப்பி பத்மநாபன் சேனையை ஆற்று வெள்ளத்தைப் போல் அடித்துக்கொண்டுபோக ஆரம்பிக்கிறது. பத்மநாப மன்னன் உடனே தன் குதிரையிலேறி அடர்ந்த போரின் நடுவில் சென்று பகைவரைக் கொன்று குவிக்கிறான். என்ன செய்தும் பயன்படவில்லை. பத்மநாபனது சேனையில் ஆயிரக்கணக்கானவர்களிருக்க அசுவாரூடனது சேனையில் பதினாயிரக் கணக்காக மனிதரிருக்கின்றனர். பத்மநாபன் தான் காயப்பட்டுச் சிறைபடுவதாக உணர்கிறான். அவனது கைகளைக் கட்டி ஒன்பது நாட்கள் மட்டும் மற்றக் கைதிகளுடன் அசுவாரூடனது படை வீரர்கள் நடத்திச் செல்கின்றனர். பத்தாவது நாள் ஒரு ஊருக்கு வந்து பத்மநாபன் ஓர் கூட்டில் அடைபடுகிறான். அவனது காயங்களும் பசிப்பிணியும் தருந் துன்பங்கள், அவனுக்கு நேர்ந்த அவமானமும், செலுத்த முடியாக் கோபமும், கொடுக்கும் துன்பத்தை நோக்குமிடத்து, ஒன்றுமில்லாது போகின்றன. தனக்கிடரிழைத்த பகைவனுக்குத் திரும்பத் தன்னால் இடரிழைக்க முடியாது போனதைப் பற்றி எண்ணி அவன் மனம் புழுங்குகிறது. இந் நிலைமையில் அவன் செய்யக்கூடியது ஒன்றே. தான் படுந் துன்பங்களைக் கண்டானந்திக்கும் பாக்கியம் எதிரிகளுக்கு கிடைக்கலாகாது. தனக்கு நேருவனவற்றை யெல்லாம் முகஞ்சுளிக்காது மிக ஆண்மையுடன் பொறுத்துக்கொள்வதெனத் தீர்மானிக்கிறான். அக் கூட்டில் சாவை எதிர் பார்த்துக்கொண்டே இருபது நாட்கள் கழிக்கிறான். அதற்குள் என்ன கொடுமைகளை எல்லாம் காண நேருகிறது! தனது உறவினரும் நண்பரும் தினந்தோறும் கொலைக்களத்திற்கழைத்துச் செல்லப் படுவதைக் காண்கிறான். அவர்கள் சாகுந் தருவாயில் இடும் முனக்கமும் கூச்சலும் கேட்கின்றன. சிலரது கைகால்கள் வெட்டப்படுகின்றன, மற்றுஞ்சிலரை உயிருடனுருக்குகிறார்கள். இவற்றையெல்லாமுணர்ந்தும் அவன் துன்பமாவது இரக்கமாவது பயமாவது வெளிக்காட்டப்படவில்லை.

தனது அழகிய அருமை மனைவியின் கைகளைப் பின்புறமாகக் கட்டி கருநிறத்த அலிகளிருவர் பக்கத்திற் கொருவராய் நின்று அவளை நடத்திச் செல்கின்றனர். அவள் அசுவாரூடனுக்கு அடிமைத் தொழில் புரியக் கொண்டு போகப்படுகிறாள் என்று பத்மநாபனுக்குத் தெரியும். இதைக் குறித்தும் அவன் ஒன்றும் பேசவில்லை. துக்கம் வெளிக்காட்டவுமில்லை. அவனைக் காத்துவந்த போர் வீரர்களி லொருவன் "பத்மநாப, உன்னைக்காண என் உள்ளம் உருகிறது. நீ முன்பு ஓர் அரசனாயிருந்தாய் இப்பொழுது உன் கதி என்ன?" என்கிறான்.

இதைக் கேட்கவும் பத்மநாபனுக்குத் தனது கஷ்டநஷ்டங்கள் யாவும் மனத்தில் தோன்றுகின்றன. அவன் தன் உயிரை மாய்த்துக் கொள்வதென கூட்டின் கம்பிகளிலொன்றில் தன் தலையை மோதுகிறான். ஆனால் தலை உடையும்படி மோதவேண்டிய பலமுமில்லை. மனமுடைந்து ஆற்றொணாத் துயரத்துடன் கூட்டின் பலகையில் சாய்கிறான்.

இத் தருணம் கொலையாளர் இருவர் வந்து கூட்டைத் திறந்து பத்மநாபனை—முன்பு அசுவாரூடனாயிருந்த பத்மநாபனை—வெளியே யொணர்ந்து கைகளைப் பின்புறமாகக் கட்டிக் கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். அங்கு இரத்தம் பெருகிக் கிடக்கின்றது. கூரிய முனைக்கழு

வொன்றிலிருந்து இதற்குமுன் கொலை செய்யப் பட்ட தன் நண்பனொருவனது உடல் எடுக்கப் படுகிறது இக்கழு தனக்காகத் தயார் செய்யப்படு வதை உணர்கிறான். அவனது உடைகளைக் களை கின்றார்கள். தன்னுடல் மெலிந்திருப்பதைப் பார்த்து பத்மநாபன் திகிலடைகிறான். அவ்வுட லைத் தோள்களிலும் தொடைகளிலும் பற்றி இரு வர் தூக்கிக் கழுவில் குத்தப் போகின்றனர். அவ னது முக்கிய மனோ திடமெல்லாம் பறந்துவிட் டது. தன்னுயிரைக் காக்குமாறு கெஞ்சி வேண் டுகிறான். அவனது பிரார்த்தனைகளைக் கேட்பார் ஒருவருமில்லை. "ஆ! இதுதான் சாவு, அழிவு" என நினைத்துக்கொள்கிறான்.

"இது உண்மையா யிராதென்பது நிச்சயம் நான் தூங்குகிறேன் போலும் இது கனவுதானோ?

அவன் தூக்கத்தினின்றும் விழித்துக்கொள்ள முயல்கிறான். 'நான் பத்மநாபனன்று அசுவா ரூடனே' என நினைப் பூட்டிக்கொண்டு கஷ்டப் பட்டு முயற்சித்து விழித்துக்கொள்கிறான். விழித் துப் பார்க்கவும் தான் பத்மநாபனுமல்ல, அசுவா ரூடனுமல்ல, எனத் தெரிகிறது. அவன் ஒரு மிருகமாயிருப்பதை யுணர்கிறான்.

தானொரு மிருகமாயிருப்பதைக் காண அசுவா ரூடனுக்கு அதிசய முண்டாகிறது. தனக்கிவ் விஷயம் இதுவரை தெரியாது போனதை நினை க்க ஆச்சர்யம் அதிகமாகிறது.

அவன் ஒரு மலையடிவாரத்தில் ரசம் நிறைந்த புற்களை பற்களால் கடித்திழுத்து மேய்ந்துகொ ண்டிருக்கின்றான். அவனைச் சுற்றிலும் நீண்ட கால்களும் உடலில் புள்ளியும் கொண்ட ஓர் மான் குட்டி துள்ளிக் குதித்து விளையாடி வருகின்றது. அசுவாரூடனாயிருந்த மான் தன் மடியில் சிறிது சிறிதாகக் கனம் உண்டாவதை யுணர்கிறது. குட்டி துள்ளிக் குதித்துப் பின்னங்கால்களை ஆகாயத்தில் வீசி ஓடி வந்து தன்னிள மூக்கால் அசுவாரூடனது வயிற்றில் முட்டி முலையைத் தேடிப் பிடித்ததும் அடங்கி நின்று பாலை உறிஞ் சுகிறது. அசுவாரூடன் தான் அக் குட்டியின் தாயாகிய ஓர் பெண் மான் என உணர்கிறான். இவை யெல்லாம் அவனுக்கு துக்கமாவது வியப் பாவது விளைக்கவில்லை. இன்பமே தருகிறது.

தன்னிலும் தன் குட்டியினும் ஒரே காலத்தில் உயிர் என்னும் ஒளி நிகழ்வது ஓர் மிக இன்பம் பயக்கிறது. திடீரென ஜீவ்வென்னும் ஒலி யுடன் ஏதோ ஒன்று தன்னருகே பறந்து வந்து தன் விலாவில் பாய்ந்து தசையில் குத்துகிறது. வலியுண்டாகவும் தற்காலம் மானுயிருக்கும் அசு வாரூடன் குட்டியின் வாயினின்றும் முலையைப் பிடுங்கிக்கொண்டு தான் விட்டுப் பிரிந்த மான் மந்தையை நோக்கி ஓட்டம் பிடிக்கலாயிற்று. குட்டியும் உடன் ஓடி வருகிறது. இவ் விருவரும் நெருங்கி வரவும் மந்தையே ஓடத்தொடங்கிற்று. இதற்குள் இன்னுமொரு அம்பு வேகமாய்ப் பறந்து வந்து குட்டியின் கழுத்தில் தைத்துத் துடிக்கிறது. குட்டி வலி பொறுக்காது முனங் கிக் கீழே விழுவதைக் காணவும் அசுவாரூடனால் அதைவிட்டுப் பிரிய முடியவில்லை. அதனருகே நிற்கிறான். குட்டி எழுந்து நின்று தள்ளாடி மறுபடியும் கீழே விழுகிறது. இதற்குள் பயங் கரமான ஓர் இரண்டு கால் பிராணி—ஒரு மனி தன்—ஓடி வந்து குட்டியின் கழுத்தை வெட்டு கிறான்.

"இது உண்மையன்று. நான் கனாக் காண்கி றேன்," என அசுவாரூடன் நினைத்து மீண்டும் விழித்துக்கொள்ள முயல்கிறான். கூச்சலிட்டுக் கொண்டு தலையைத் தொட்டித் தண்ணீரிலிருந்து வெளியே நீட்டுகிறான். கிழவனுங் குடத்தி[illegible] மிதந்திருக்கும் தண்ணீரையும் இவன் த[illegible] மாற்றிக்கொண்டு நிற்பது தெரிகிறது.

“ஐயோ! எவ்வளவு கொடுந்துன்பம் அனுப வித்தேன். அதுவும் எவ்வளவு காலத்திற்கு” என் ருன் அசுவாருடன்.

கிழவன் “அதெப்படியப்பா? நீ இப்பொழுது தான் உள்ளே அமிழ்ந்தாய். உடனே தலையை வெளியில் நீட்டி விட்டாயே. அதோ பார் குடத் திலிருக்கும் நீர் முற்றிலும் இன்னும் கொட்டி யாக வில்லையா? இப்பொழுது அறிந்துகொண் டாயா?

அசுவாருடன் பதிலொன்றுங்கூருது கிழவனை மனப்பீதியுடன் பார்த்தான்.

கிழவன் பின்னும் “இப்பொழுது நீயும் பத்ம நாபனும் ஒன்றே எனபதும் நீ கொன்றவீரர்க ளெல்லாம் நீயே என்பதும் தெரிந்துகொண் டாயா? இது மட்டுமல்ல. நீ விளையாட்டிற் காகவும் உணவிற்காகவும் கொல்லும் பிராணி களெல்லாம் நீயே. உன்னிடம்மட்டும் தான் உயிர் இருப்பதாகநினைத்திருந்தாய். நான் அஞ் ஞானத்திரையைச் சிறிது கொத்திற்குக்களைந் தேன். பிறர்க்குத் தீங்கிழைப்பதால் உண்மை யில் உனக்கே தீங்கிழைத்துக் கொள்கிருய் என் பதை உணர்ந்தாய்.

எல்லாவற்றிலும் விளங்கும் ஆத்மா ஒன்றே. பரமாத்மாவின் ஒரு அணுத்தான்உன்னில்விளங் குகிறது. உன் வாழ்க்கையைத்தான் நீ குறைக் கவோ நீட்டவோ இன்பத்திற்கும் துன்பத்திற் கும் ஆளாக்கவோ முடியும்.

தன் ஆத்மாவைச்சுற்றியுள்ள கோட்டைச்சுவர் களாகிய மாயை அஞ்ஞானமென்றவற்றை நாசப் படுத்தி மற்ற பிராணிகளையும் தானுகவேகருதி அவற்றிடம் அன்பு பாராட்டலால் ஒருவனது வாழ்க்கை சுகமுற்று விருத்திபடையும், பூர்ணத் வம் அடையும்.

உன்னிடமட்டுமே ஆத்மா இருப்பதாகக்கருதி அதன் சுகத்தைவிருத்திசெய்யஎண்ணங்கொண்டு அதன் பொருட்டு பிறரது சுகத்தைப் பறித்தலே உன் வாழ்க்கையைக் குறைக்கவும் துன்பத்திற் காளாக்கவும் ஏற்றவழி மற்றவர்களில் விளங்கும் ஆத்மாவை நாசப் படுத்த உன்னலாகாது. உன்னல் கொல்லப் பட்டவர்களின் ஆவி உனக்குப் புலப்படாது மறைந்திருக்கிறதேயன்றி யழிந்துவிடவில்லை. நீ உன் வாழ்வை நீடிக்கப் பிறரதுவாழ்க்கையைக் குறைக்க முயன்ருய். ஆனல் அது உன்னலாகாது. ஆத்மாவிற்கு இடம் என்ற பேதமாவது அழிவாவது கிடையாது.

ஒரு க்ஷணவாழ்வு ஆயிரங்கால வாழ்க்கை உனது வாழ்வு, இன்னும் பிரபஞ்சத்தில் விளங்கி யும், கண்களுக்குப் புலப்படாதும், இருக்கும் உயிர்கள் இவை எல்லாவற்றிலும் நின்றொளிரும். ஆத்மா சமமானதே, ஒன்றே. ஆத்மாவை யழிக் கவாவது மாற்றவாவது உன்னல் முடியாது. ஏனெனில் அஃதொன்றேயுளது. அஃதொன்றே உண்மை. மற்றவை யெல்லாம் இருப்பனவாக நமக்குத் தோன்றுகிறதுதான்.

இவவாறு உபதேசித்துக்கிழவன் மறைந்தான். மறுநாட் காலை அசுவாருடநரபதி பத்மநாபனை யும் மற்றுமுள்ள கைதிகளையும் விடுதலை செய்ய உத்திரவிட்டான்.

மூன்றும் நாள் தனது மகன் நரபரிபாலனை யழைத்து இராஜ்யத்தை யவன் வசம் ஒப்பித்துத் தான் புதிதாக உணர்ந்த உண்மைகளை ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டே அடவி புகுந்தான் அசுவா ருடன்.

பிற்காலங்களில்—பல வருஷங்களுக்குப் பின் அசுவாருடன் சன்னியாசிக் கோலத்துடன் ஊர் களில் அலைந்து மனிதர்க்கு பரமாத்மா ஒன்றென் றும் பிரபஞ்சத்தில் தோன்றும் ஜீவர்களெல் லாம் அதன் சிறு பாகங்களாகிய அணுக்களே என்றும், பிறர்க்குத் தீங்கிழைப்பவன் தனக்கே துன்பத்தை விளைத்துக்கொள்கிருனெனவும் உப தேசித்து வந்தான்.

அவன் “ஏகம்ஸத், விப்ரா: பஹுதாவதந்தி” தத் வமஸி’ என்ற வாக்கியங்களின் பூர்ண உண்மை யான பொருளையுணர்ந்து விட்டானன்றே.

ஓம்.

மொழிபெயர்த்தது, வெ. நாராயணன்.

## பட்டுப் பீதாம்பர கம்பெனி, காசி.

நாகரீகமான ஜரிகைவேலை செய்த பட்டுச்சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டுகள், முதலியன மிகச் சரசமாகக் கிடைக்கும்.

காசுமீரச் சால்வைகளும், கம்பளிப் போர்வைகளும், கஸ்தூரி, கோரோஜனை முதலியனவும், கிடைக்கும்.

முந்துங்கள்! முந்துங்கள்!

## SILK PITAMBAR Co.
## BENARES CITY

ஓம

# தமிழ்க் குருகுல வித்யாலயம்

### சேரமாதேவி

ஆங்கிலத்தில் பி.ஏ. வகுப்புக்குச் சரியான கல்வி வரையில் கொடுக்கப்படுகிறது. தமிழில் சங்க இலக்கியங்கள், தொல்காப்பியம் வரையில் கற்கலாம். ஐரோப்பிய முறைகளில் இலக்கிய ஆராய்ச்சிகள் செய்யவும் மாணவர் பயிற்றப் படுகின்றனர்.

கணிதம், தேச சரித்திரம், சம்ஸ்கிருதம், ஹிந்தி முதலிய பாடங்கள் செவ்வையாக நடக்கின்றன.

நெசவுத் தொழில் கற்பிக்கப்பட்டு வருகின்றது. பயிர்த் தொழில் செய்யவும் வசதி ஏற்படுத்தித் தரப்படுகிறது.

பிள்ளைகளை இலக்கியக் கல்வியும் ஓர் தொழிலும் அப்பியசிக்கச் செய்ய விரும்பும் தந்தையர் உடனே முந்துக!

விவரங்ளுக்குக் காரியஸ்தனுக்கு எழுதித் தெரிந்து கொள்ளுக.

ஆசாரியன்.

# ஆங்கில பாஷையை

சாமான்யமாகக் கற்றுக்கொண்டவர்கள் பின்னும் தாங்கள் அறிவை விசேஷமாய் அபிவிர்த்தி செய்துகொள்ள அனுகூலமாயிருக்கும்.

## புஸ்தகங்களாவன

1. அபிநவ ஆங்கில போதினி 1வது வால்யூம்:—திருத்தமாய் ஆட்பெயர், ஊர்ப் பெயர் முதலியவைகள் எழுதுவதற்கு சாதகமான அநேக நூதன விதிகளும் பலவகைப் பட்ட விலாசங்கள் லெட்டர்கள் எழுதுவதற்கு சாதகமான விசேஷக் குறிப்புகளும் அடங்கிய ஓர் அருமையான நூல், அணா 12.

2. அபிநவ ஆங்கில போதினி 2வது வால்யூம்:—இதில் இங்கிலீஷ் பாஷையில் விசேஷமாய்ப் பேசவும் எழுதவும் பின்னும் திறமை ஏற்படும் பொருட்டு பலவிதமான வாக்கியங்களின் பிரயோகங்களை தமிழ் வியாக்கியானத்துடன் எடுத்துக் காட்டியிருக்கிறோம். விலை அணா 12.

3. அபிநவ ஆங்கில போதினி 3வது வால்யூம்:—இதில் இங்கிலீஷ் வார்த்தைகளின் பலவிதமான பிரயோகங்களை வெவ்வேறு வாக்கியங்களில் அமைத்துக் காட்டியிருப்பதுடன் (Idioms and phrases) முதலியவைகளை தமிழ் அர்த்தத்துடனும் உதாரணத்துடனும் சந்தர்ப்பமறிந்து உபயோகிக்க வேண்டிய மாதிரிகளைத் தெளிவாய்க் காட்டி பிரசுரம் செய்திருக்கிறோம். விலை அணா 10.

4. இங்கிலீஷ் தமிழ் லெட்டர் ரைட்டர்:—இதில் இங்கிலீஷில் பலவிதமான லெட்டர்கள், பெட்டிஷன்கள் எழுதும் முறைகளையும் அவைகளுக்குச் சரியான தமிழ் அர்த்தத்தையும் சவிஸ்தாரமாய் குறிப்புகள் சகிதம் காட்டியிருக்கிறோம். விலை அணா 12.

5. டிரான்ஸ்லேஷன் கைட்:—பொதுவாய் தமிழிலிருந்து இங்கிலீஷிலும் இங்கிலீஷிலிருந்து தமிழிலும் செய்ய இங்கிலீஷ் வாக்கியங்களின் அமைப்பு இன்னதென்றறியாவிடில் முடியாது. ஆகையால் இங்கிலீஷ் வாக்கியங்களின் தன்மையையும் அதன் அர்த்தத்தையும் பல மாதிரிகளில் சவிஸ்தாரமாய் இலக்கணக் குறிப்புகளுடன் காட்டியிருக்கிறோம். இதன் விலை அணா 6.

6. டிரான்ஸ்லேஷன் கைட் 2வது பாகம்:—டிரான்ஸ்லேஷன் 1வது பாகத்தில் ஜீவாதாரமான விஷயங்களை மாத்திரம் காட்டி நிறுத்தினோம். ஆனால் இப் புஸ்தகத்தில் பலவிதமான அமைப்பில் வாக்கியங்களை சுலபமாய் ஏற்படுத்திக்கொள்ள ஏதுவாயிருக்கும் பொருட்டு ஆரம்ப பாடத்தில் சில பொதுவான விதிகளைக் கொடுத்திருக்கிறோம். அதை நன்றாய் மனப்பாடம் செய்துகொள்வதிலிருந்து இலகுவாய் வாக்கியங்களை அமைத்துக்கொள்ள அநுகூலமாயிருக்கும். விலை அணா 8.

குறிப்பு:— சென்ற 12 வருஷங்களாய் எங்களால் வெளியிடப்பட்டு வரும் இங்கிலீஷ் புஸ்தகங்கள் யாவராலும் போற்றப்பட்டு வருவதால் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஏக காலத்தில் மேற்கண்ட 6 புஸ்தகங்களும் வாங்குவோருக்கு சகல செலவுமுள்பட ரூ. 3—4—0க்கு அனுப்பப்படும்.

வி. எஸ். கே. சுவாமி அன் சன்ஸ், புக்செல்லர்,

விளாத்திகுளம், (Via) கோவில்பட்டி, S. I. R.

சோமாதேவி "குருகுல" அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, சுத்தானந்த பாரதியாரால் பிரசுரிக்கப்பெற்றது.